LB
N35
78033

உ

பதினெண் சித்தர்களில்
தெய்வீகத்தன்மைபொருந்திய

# போகமுநிவர்

திருவாய்மலர்ந்தருளிய
பெருநூல்

# நிகண்டு-௲௭௱-ல்.

## இரண்டாவது காண்டம்

கருக்கடை - ௫௱.

இஃது,
பட்டாளம் எருக்கஞ்சேரி
**கனகசபைபண்டிதர் முன்னிலையில்**
மதுரை-புதுவை-சென்னை இரசங்கங்களில்
தமிழ்த்தலைமைப் புலமைநடாத்திய
**களத்தூர்-வேதகிரிமுதலியார் குமாரர்கள்**
**ஆறுமுகமுதலியாராலும்**
ஆயுள்வேதபாஷ்கரன்
**கந்தசாமி முதலியாராலும்**
பற்பல ஏட்டுப்பிரதிகளைக்கொண்டாராய்ந்து
பிழையறப்பரிசோதித்து
**இ. ரா. ம. குருசாமிக்கோனார்**
அவர்கள் கேட்டுக்கொண்டபடி
**எ. தீனதயாள முதலியார்**
அவர்களால்

சென்னை:—ஸ்ரீ ஆதிமூலம் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.
இதன் விலை] 1926 [அணா 10

28 AUG

610.3
1671

78033



கடவுள் துணை.

# பொருள் அட்டவணை.


| பெயர். | பக்கம். |
|---|---|
| அ | |
| ...ப்திசெவ்லகத்தின் பெயர் | 4 |
| ...ரக்கீரையின் பெயர் | ,, |
| ...பவிரலின் பெயர் | 8 |
| ...யலின்பெயர் | 16 |
| ...றுமூலுதுவரையின் பெயர் | 18 |
| ...ன்னத்தின் பெயர் | 52 |
| ...ருங்கின் பெயர் | 55 |
| ஆ | |
| ...ரையின்பெயர் | 2 |
| ...டுக்கடாவின் பெயர் | 48 |
| ...தையின் பெயர் | 53 |
| ...மையின் பெயர் | 56 |
| இ | |
| ...ருவேலியின் பெயர் | 3 |
| ...ரும்பிலியின் பெயர் | 6 |
| ...லைக்கள்ளியின் பெயர் | 11 |
| ...ந்திரகோபத்தின் பெயர் | 57 |
| உ | |
| ...லர்தின் பெயர் | 10 |
| ...ாயின் பெயர் | 14 |
| ...புக்கட்டு | 41 |
| ...புமணி | 43 |
| புகுரு | 44 |
| ஊ | |
| ...க்குருவியின் பெயர் | 55 |
| ஒ | |
| ...டொட்டின் பெயர் | 11 |
| ...யமரத்தின் பெயர் | 13 |
| ...டகத்தின் பெயர் | 47 |
| ஓ | |
| ...ரனின் பெயர் | 50 |
| க | |
| ...ப்பான பசலையின் பெயர் | 3 |
| ...கரியின் பெயர் | 5 |
| ...தும்பையின் பெயர் | 8 |
| ...ட்டுத்தியின் பெயர் | 9 |
| ...ருங்கொடியின் பெயர் | 10 |
| ...ண்டில்வெண்ணையின் பெயர் | 15 |
| ...றுப்பரிசியின் பெயர் | 16 |
| கறுப்புக்கடலையின் பெயர் | 18 |
| கழுதையின் பெயர் | 47 |
| கல்லாமையின் பெயர் | 56 |
| கட்டெறும்பின் பெயர் | ,, |
| கருநாகத்தின் பெயர் | 57 |
| கா | |
| காளானின் பெயர் | 5 |
| காக்காயின் பெயர் | 53 |
| காட்டுப்புறாவின் பெயர் | 54 |
| கி | |
| கிளுவையின் பெயர் | 7 |
| கிளியின் பெயர் | 51 |
| கு | |
| குதிரையின் பெயர் | 47 |
| குரங்கின் பெயர் | 50 |
| குயிலின் பெயர் | 53 |
| கெ | |
| கெருடன் பெயர் | 51 |
| கொ | |
| கொம்மட்டியின் பெயர் | 6 |
| கொடிமுரியின் பெயர் | 7 |
| கொடிக்கள்ளியின் பெயர் | 11 |
| கோ | |
| கோதும்பையின் பெயர் | 16 |
| கோழியின் பெயர் | 53 |
| ச | |
| சக்கிரவர்த்தியின் பெயர் | 4 |
| சன்றையின் பெயர் | 14 |
| சர்ப்பத்தின் பெயர் | 58 |
| சக்கரவாகத்தின் பெயர் | 52 |
| சா | |
| சாரசெயநீர் | 60 |
| சி | |
| சிவப்புநெல்லின் பெயர் | 15 |
| சிங்கத்தின் பெயர் | 47 |
| சு | |
| சுரப்புன்னையின் பெயர் | 13 |
| செ | |
| செம்பருத்தியின் பெயர் | 4 |
| செங்கத்தாரியின் பெயர் | 9 |

| பெயர். | பக்கம். | பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| செய்பரத்தையின் பெயர் | 11 | புளிகறணையின் பெயர் | 7 |
| செம்பரத்தின் பெயர் | 51 | புல்லூரியின் பெயர் | 9 |
| செகச்சாலதரு | 64 | புன்னையின் பெயர் | 13 |
| த | | பூ | |
| தகரின் பெயர் | 49 | பூசனிக்காயின் பெயர் | 5 |
| தா | | பூநாகத்தின் பெயர் | 57 |
| தாராவின் பெயர் | 54 | பொ | |
| தி | | பொன்னுவரையின் பெயர் | 12 |
| திலகவிருட்டத்தின் பெயர் | 9 | ம | |
| திருகுகள்ளியின் பெயர் | 12 | மயிலின் பெயர் | 51 |
| திருவட்டப்பிசினின் பெயர் | 14 | மா | |
| தினையின் பெயர் | 17 | மான்செவிக்கள்ளியின் பெயர் | 12 |
| ந | | மானின் பெயர் | 48 |
| நருஞ்சோந்தியின் பெயர் | 2 | மீ | |
| நறும்பிசினின் பெயர் | 13 | மிருகத்தொகுப்பின் குணம் | 58 |
| நல்லரிசியின் பெயர் | 15 | மு | |
| நரியின் பெயர் | 49 | முதலையின் பெயர் | 5 |
| நா | | மூ | |
| நாயின் பெயர் | 49 | மூலிகையின் சமுதாயகுணம் | 2 |
| நானுவானின் பெயர் | 52 | மொ | |
| நாகப்பாம்பின் பெயர் | 58 | மொச்சையின் பெயர் | 17 |
| நாகரசக் கெந்தகக்குரு | 61 | யா | |
| ப | | யானையின் பெயர் | 46 |
| பரியங்கம்பாதிம் பெயர் | 2 | ரி | |
| பருத்தியின் பெயர் | 3 | ரிஷபத்தின் பெயர் | 4 |
| பன்றியின் பெயர் | 49 | வ | |
| பா | | வரகின் பெயர் | 1 |
| பாச்சுற்றியின் பெயர் | 2 | வல்லூரியின் பெயர் | 5 |
| பாவட்டையின் பெயர் | 10 | வயிரவம் | 6 |
| பாம்பின் பெயர் | 57 | வீ | |
| பி | | வீட்டுப்புறாவின் பெயர் | 5 |
| பிரம்பின் பெயர் | 7 | வெ | |
| பு | | வெள்ளரிசியின் பெயர் | 1 |
| புஷ்கரமூலப்பெயர் | 6 | | |


பொருள் அட்டவணை,

முற்றிற்று.

உ

சிவமயம்.

போகமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# கருக்கடை நிகண்டு-நூ

## இரண்டாவது காண்டம்.

காப்புகள்.

ஆனைமுகன் றன்பாத முருகன் பாதம்
ஐயருட சீர்பாத மம்பாள் பாதம்
வாணுமையாள் தன்பாதம் வருணன்பாதம்
வாகான லட்சுமியாள் வாதன் பாதம்
கானனையாள் சித்தர்களின் ரிஷிகள் பாதம்
கமலமதில் வீற்றிருக்கும் வாணி பாதம்
கோனனைய கும்பமுனி யடியேன் பாதம்
கூறுகிறேன் கருக்கடையின் றெகுப்புத்தானே. (1)

தொகுப்பான பெருநூ லினிகன் டனந்தம்
தொந்தமாங் கருக்கடையில் சிலதுஞ் சொன்னோம்
வகுப்பான கடைசரக்கு வுபரசங்கள்
வண்மையாய் நானுவிதப் பெயருஞ் சொன்னோம்
பகுப்பான பாஷையெல்லாம் பகர்ந்து சொன்னோம்
பண்பான மிர்தசஞ் சிவி யனந்தம்
நகுப்பான லவணவகை யனந்தங் கோடி
நாதாக்க ளறியவென்று நாட்டினேன் பார். (2)

பாரப்பா யுகநான்குங் கடந்து மேதான்
பாடிவைத்தே னாயிரத்துச் சில் வானந்தான்
சீரப்பா கருக்கடைதா னதற்கு நேராய்ச்
சிறப்பான மூலிவகை திரட்டி வைத்தேன்
ஆரப்பா வென்னைப்போல இந்நூற் சொல்வார்
அப்பனே நானுனக்கு யறியச் சொன்னேன்
தேரப்பா யிந்நூலைப் பார்த்துமேதான்
தெளிவுறவே மூலிப்பேர் தெளிந்து பாரே. (3)

## நூல்

### பாச்சுற்றியின்பெயர்.

பாச்சுற்றிப் பேர்தன்னையே பகரக்கேளு
பண்பான நாளிகாவித்துறு மலதாவாகும்
காச்சுற்றிக் கபோதசாரணு களினியாகுங்
கடிவிஷங்கள் குஷ்டங்கள் போக்கியாகும்
கேச்சிற்றி கிரகிணி கிருமிஞுசி
கெடியான மேகங்கள் போக்கியாகும்
ஈச்சுற்றி யீயத்தின் தோஷம்போக்கி
யேற்றமாம் பாச்சுற்றி யியலுமாமே. (1)

### பரியங்கம் பாதிப்பெயர்.

பரியங்கப் பாதிப்பேர் பகரக்கேளு
பண்பான குதிரைவா லிகலுமாகுந்
தரியங்கத் தீயினுடை புஷ்பமாகுந்
தமியான புஷ்பீபாதுக் கிதாவாகுங்
கரியங்ககட் டுவாபரி யங்கபாதி
கண்டர்தலைச் செம்பாக்கி கனகச்சியாகும்
புரியங்க பூரணபுஷ் பியுமேயாகும்
பேரான பரியங்கப் பாதியாமே. (2)

### நருஞ் சோந்தியின்பெயர்.

நருஞ்சோந்திப் பேர்தன்னையே நவிலக்கேளு
நானுகமாம் உக்கடா சூட்சுமபத்திராங்
திருஞ்சோந்தி தீர்க்கவே ரகிதயஷ்டிகாவாஞ்
சிதவிரிய மாணிசுவற்ண புஷ்பமாகுஞ்
சருஞ்சோந்தி சுதாமதா சாரவிருட்சஞ்
சனத்திலே கல்லுப்புக் கட்டிப்போகும்
உருஞ்சோந்தி யுப்பெல்லாம் வயிரமாக்கி
யுண்மையாம் நருஞ்சோந்தி யுயற்சியாமே. (3)

### ஆரையின்பெயர்.

ஆரையுடை பெயர்தன்னையே யறியக்கேளு
அழகான சுநிஷண்ணு சூட்சுமபத்திரா
வாரையாம் வத்திகச் சதுர்த்தளாவர
மகத்தான சூதவெண்ணை யிறுகியாகும்



ஈரையாம் யீயத்தைப் பற்பமாக்கி
யெழிலான விரணத்தி னீரைக்கொல்லி
சாரையாஞ் சலரோகம் போக்கியாகுந்
தண்ணீரைச் சுருக்கியாம் ஆரைப்பேரே (4)

### கசப்பான பசளையின்பெயர்.

கசப்பான பசளைப்பேர் கருதக்கேளு
கண்டாத வெள்ளை சூதமது மணியுமாகுந்
தசப்பான சுருக்கிடவே சாதிலிங்கமயினஞ்
சண்டாள விஷத்தியாஞ் சளச்சியாகு
மசப்பான மக்கினியும் போதக்கியமாகும்
மாவிஷங் கடிபிரியந் தானுமாகும்
அசப்பான நாகத்தைச் செந்தூரியாக்கி
யதிகமாங் கசப்பான பசளைப்பேரே. (5)

### இருவேலியின் பெயர்.

இருவேலிப் பேரினுடை யியக்கங்கேளு
யீறிப்போம் அரிகேசா முதிச்சியமாகும்
வருவேலி வாளகஞ் சலமுமாகு
மகத்தான கேசாம்பு நாகவியாகுந்
திருவிசித ளந்தித்தப் பித்தசாந்தி
சிலேஷ்ம அரிவிகற்பாகம் அரமுமாகுஞ்
சுருவேலி சுரதாகணு சனியாகுஞ்
சயம்பான யிருவேலி சூட்சமாமே. (6)

### பருத்தியின்பெயர்.

பருத்தியுடை பேர்தன்னையே பகரக்கேளு
பண்பான வாமன்னியச் சாதனபலமாகும்
வருத்தியாம் வாஷ்டியாங் காற்பாசிய
நக்கினிகாவா மகத்தான நக்கினசிதுபலயினுசம்
குருத்தியாங் குலிகுலப வீசுமிறத் தாவாங்
கூறுண கவிரபதித் தமதுராவாகுங்
இருத்தியாங் கிருமிஅரா தாமர்கண்டு
கிரந்திவிர ணுபகாப ருத்தியாமே. (7)

### செம்பருத்தியின் பெயர்.

செம்பருத்திப் பேர்தனையே செப்பக்கேளு
  செகப்பான ரெத்தசாதன பலமாகும்
நம்பருத் திரத்தாகாற் பாசமாகும்
  நக்கினசிறு குருத்தியிர மாத்தபுஷ்பி
மெம்பருத்தி மேகசா தனியுமாகும்
  விரணங்கள் குஷ்டங்கள் ரத்தசத்தி
நம்பருத்தி சறுகணில நாகங்கட்டும்
  நாடியதோர் செம்பருத்தி நாமமாமே. (8)

### அகத்தி செவ்வகத்தின் பெயர்.

அகத்தியுட பேர்தனையே யறியக்கேளு
  அகத்தியகோ முனின்னுமாமுனி தளமாகும்
மகத்தியாம துசிக்குகு வேஷாங் துவி யாகும்
  மாசற்ற விரைத்தயில அயமுருகியாடும்
டகத்தியாம் பழுப்புச்சாற் சத்துக்காதி
  பாங்கான பட்டையின் பேருமாகும்
வெகத்துக் காதியாம் வேர்ப்பட்டை மேகம்போக்கும்
  விதமான அகத்தியுட விந்தையாமே. (9)

### சக்கிரவர்த்தியின் பெயர்.

சக்கிரவர்த் திப்பேரை சாற்றக்கேளு
  சமனை வாலைத்துகம் மூஷ்கப்பிரார்த்தம்
வக்கிரமாம் வாலைத்துகஞ் சக்கிரவாலைத்துகமா
  மணியான விரைத்தயிலம் பாஷாணங்கட்டுஞ்
சிக்கிரமாம் சிவந்தநீர்ப் புஷ்பமாகுஞ்
  சிலேஷ்டம்பக நாசனியாந் திலநியாகும்
நக்கிரமாம் நாசிதனில் விரணம்போக்கி
  நாடியதோர் சக்கிரவர்த்திப் பேருமாமே. (10)

### அரைக்கீரையின் பெயர்.

அரைக்கீரைப் பேர்தனையே யறியக்கேளு
  அழகான சல்லிகா ரமசத்தி
சிரக்கீரை சின்னயதி காசாகியாகுஞ்
  செழும்பான செருங்கபத்த னுசமாகு
மரக்கிரை மதுற்சாசு புஷ்பியாகும்
  வாதசுர னுசனியா மார்க்கியாகும்
கரக்கீரை ருசிகரிபித்த சமனியாம்
  நாடியதோ ரரைக்கீரை நாமமாமே. (11)



### காளானின் பெயர்.

காளானின் பேர்தனையே கருதக்கேளு
  கனசற்ப சத்திரந்து கவகோவாகும்
பூளாமி றப்போடம் பூமிகெந்தகயாம்
  புகழான செங்காளான் சூதங்கட்டும்
நாளான கருங்காளா னுகங்கட்டும்
  நவமான பச்சையென்றால் பரிசவேதி
தேளானசிலேவிட மகாமருசி கரியுமாகுஞ்
  செயமான காளானின் செயலுமாமே. (12)

### வனமிட்டியின் பெயர்.

வனமிட்டிப் பெயர்தனையே வகுக்கக்கேளு
  மாச்சற்ற கிறிங்காட கத்துவமாகுந்
தினமிட்டிசிறிங் கஞ்சகல பிம்பமாகுந்
  திறிகண்டக மானதோர் கிலேஷ்மஅறியாகுந்
தனமிட்டி தாளகத்தைப் பற்பமாக்கி
  சாரத்தைக் கட்டியேத மனியமாக்கி
அன்மிட்டி யாரோக்கிய ஆர்ஷணியாக்கும்
  அதியவசிக் கியானவன மிட்டியாமே. (13)

### பூசனிக்காயின் பெயர்.

பூசினியின் பெயர்தனையே புகலக்கேளு
  பெரியகூலை மானட்கிபுஷ்ப பலதாவாகுங்
காசினிக்குப் பாண்டங்கா கருபலாவாங்
  கடிதான பாஷாண ஆறல்போக்கி
மாசனி மருந்தீடு முறியப்பண்ணி
  மகாஅவு ஷதனுசனி குளிர்ச்சியாகுந்
தாசனி மஞ்சள்நிறப் புஷ்பியாகுந்
  சாம்பலாம் பூசனிப்பேர் சாற்றலாமே. (14)

### கக்கரியின் பெயர்.

கக்கரியின் பேர்தனையே கருதக்கேளு
  காற்கோடகி ராசபுஷ்பி தாஜமாகும்
ரொக்கரி ரோமசாலி யானமாகும்
  ரூபமாம் பத்திரிகாரு கச்சியாகும்

சிக்கரிசி சிலேஷ்மறு சனியுமாகுந்
  திடசணி கடுத்தியுஷ்ணகப ஆரியாகும்
நக்கரி ரசாயனி திபனியாகும்
  நாடியதோர் கக்கரியி னுமமாமே. (15)

கொம்மட்டியின் பெயர்.

கொம்மட்டிப் பேர்தனையே கூறக்கேளு
  குக்கலிங்கோ வாறுகோ கொடிச்சியாகும்
பம்மட்டி பண்டுபத்திறச் சாயாவாகும்
  பாச்சான பண்பான பழத்தியாகு
மும்மட்டி மூத்திரக்கிரிச்சிர அரியுமாகு
  மூதண்ட தாகனு சனியுமாகும்
பிம்மட்டி வாதமாம் பித்தஅரியாகும்
  பெரியகொம் மட்டியுட பேருமாமே. (16)

இரும்பிலியின் பெயர்.

இரும்பிலியின் பெயர்தனையே யியம்பக்கேளு
  யேற்றகோதா வன்னியா பிரமணியாகுங்
கரும்பிலிலகா அூரிலகாத்து வம்மிலமாகுங்
  கனமான கெந்தகத்தைத் தயிலமாக்கி
நரும்பிலிவேர்ச் சாற்றில் நாகங்கட்டும்
  நலமான யிலைதன்னி லியங்கட்டும்
சுரும்பிலி திரிதோஷ சமனியாகுஞ்
  சொல்லியதோ ரிரும்பிலியின் சூட்சமாமே. (17)

புஷ்கர மூலப்பெயர்.

புஷ்கர மூலப்பேரை புகலக்கேளு
  பேரான மூலந்து புஷ்கரமூலம்
நஷ்கரம் நாசனம் புஷ்கராவயமாம்
  நயனத்துக்கு ளுத்தியாம் நலனியாகும்
வஷ்கரம் வாதபித்த சமனியாகும்
  மதாக்கினி விரணகங் பிறமிநாசி
தஷ்கரூங் தாதுவத் தினையுமாகுஞ்
  சாற்றியதோர் புஷ்கா மூலப்போமே. (18)



பிரம்பின் பெயர்.

பிரம்பினுட பேர்தனையே புகலக்கேளு
  பெருமையாம் வெத்திரோவாம வசாக்கிரமாகும்
பரம்பான பதத்திர விரியமாகும்
  பாங்கான திறுகவல் லியுமேயாகும்
முரம்பான முனியகத்தி முள்ளிச்சியாகும்
  மூதுணர்ந்தோர் கையினிட தெண்டுமாகுஞ்
சுரம்பான சூதுரா சனியுமாகுந்
  துஷ்டிவிர ணத்தியானப் பிரம்புமாமே. (19)

புளிகறணையின் பெயர்.

புளிகறணைப் பேரினுட விபரங்கேளு
  மிடுக்கான சிஞ்சினிசஞ் சினியாகுங்
குளகரணை மோகினிக்குள் மஞ்சிரியாகுங்
  குறமான வின்னுமா குணத்தியாகுங்
களகறணை கடிவிஷங்கள் கபவாதயறியாங்
  கனத்ததோர் சிலேஷ்ம அரிகாரத்தியாகுந்
துவகறணை துஷ்டமாம் விரணம்போக்கிச்
  சொல்லியதோர் மிளகரணைச் சூட்சமாமே. (20)

கொகிழியின் பெயர்.

கொகிழினுட பேர்தனையே கூறக்கேளு
  கொகிழான கடும்பாரங்காசு வேதாவாகும்
பகிழான பாலித்திகா பிச்சாவாம்
  பாங்கான ஷாத்திரசு தாசநாபி
சகிழான சகணியிபக் கனகியானு
  சமரசமா மதுரெணசோர சூரணி
தகிழானத் தாபாடல் பவுண்டிரகமாகுஞ்
  சாற்றியதோர் கொகிழினுட தன்மையாமே (21)

கிளுவையின் பெயர்.

கிளுவையுடப் பெயர்தனையே கிளறக்கேளு
  கெட்டியாம் உருக்குதனைப் பற்பமாக்கி
திளுவையாஞ் சிதாக்கியாதின் னுக்கியாவாந்
  திரிசூலி மேகினிவட பத்திரிசாவாந்

தளுவையாஞ் சைவாவாஞ் சதிரியாகுஞ்
சமரசமாம் வர்தமத்தஞ் சமணியாகும்
விளுவையாம் விரணகரி மேககாந்தி
மிடுக்கான கிளுவையுடை மேன்மையாமே. (22)

அய்விரலின் பெயர்.

அய்விரலிப் பெயர்தன்னையே அறியக்கேளு
அஞ்சுவிர லங்குலிங்க பிசம்பைவிரலி
பைசாங் குலராகி காபிண்டமாகும்
பருத்ததோர் பலமான வற்பலாவாஞ்
சைவிரலி சாதிலிங்க மபினியாகுஞ்
சடைமுடியோன் பழத்துக்குள் வாகியாகும்
செய்விரலி கிலேவிட்டமனு சனியுமாகுஞ்
சிறுகருப்பி அய்விரலிச் செயலுமாமே. (2

கவுதும்பையின் பெயர்.

கவுதும்பைப் பேர்தன்னையே கருதக்கேளு
கவுசும்ப விரணுவாம் அதிசத்திராத்துவி
செவுதும்பை கெவுதம்பா மேஷாவாஞ்
செயமான கிஷானபூதிகே சாவுமாகுஞ்
துவுதும்பை கும்பயோ நிரெணபுஷ்பமாஞ்
சூதான பாஷாணங் கட்டிப்போகுங்
கவுதும்பைச் சாக்கிரே யாகிரதும்பகமாகுஞ்
சாற்றியதோர் கவுதும்பைத் தண்மையாமே. (2

பிறங்குநாரியின் பெயர்.

பிறங்குநா ரிப்பேரைப் பேசக்கேளு
பெருமையாங் கர்சிரோ கெந்தமூலா
நறங்கான சந்திரவிடோ தல்லபச்சமாகுஞ்
சமன்குறோ தனபினைனை வுமாகும்
சிறங்கான சோரிச மலைக்கரியாஞ்
செனகை பந்தனியாஞ் சிந்தூரியாகும்
வறங்கான வாதச சமனியுமாகு
மருவியதோர் பிறங்குநாரிப் பேருமாமே. (ὤ



செங்கத்தாரியின்பெயர்.

செங்கத்தா ரிப்பேரை செப்பக்கேளு
செவியமாங் கோஷ்டகமா நேத்திரபுஷ்பி
நங்கான சர்வாங்கிரத்த புஷ்பிகாலாம்
நற்பட்டைச் சாறுதனி னல்லபாகஞ்
செம்பாம லெம்பான வேர்ச்சாற்றில்வெள்ளி
செம்பான பூச்சாற்றில் தங்கஞ்செம்பாம்
பம்பான பழச்சாற்றில் அயமுஞ்செம்பாம்
பாடியதோர் செங்கத்தாரிப் பேருமாமே. (26)

கட்டுத்தீயின்பெயர்.

காட்டுத்தீப் பெயர்தன்னையே கருதக்கேளு
கண்கண்ட நிழல்மட்டும் பூண்டுத்தீயு
மாட்டுத்தீ மரக்காற்றுப் பட்டைமட்டு
மனுஷரொடு மிருகங்கள் பறவைமாயும்
ஊட்டுத்தீயு லோகங்கள் பற்பமாகும்
ஊழித்தீ காலக்கினி தகனக்கியேனு
பூட்டுதீ பிர்மசோமா லப்போவாகும்
பொருத்தியாங் காட்டுத்தீப் பேருமாமே. (27)

புல்லூரியின்பெயர்.

புல்லூரிப் பேர்தன்னையே பொருந்தக்கேளு
புன்மையாஞ் சேகரி பாதம்பாரோ
வல்லூரில் வந்தரக்கோரீர் வல்லிகாலா
மகாவிருட் சாதிவிருட் கருகாலாங்
கல்லூரி காமாதி விருட்சமாகும்
காமினி காமாலை நசனியாகுந்
தில்லூரி திரிதோஷஞ் சமணியாகுஞ்
செப்பியதோர் புல்லூரிச் செயலுமாமே. (28)

திலகவிருட்சத்தின்பெயர்.

திலகவிருட் சப்பேரை செப்பக்கேளு
திலகமாம் பூரணக் கிறிமானமாகுங்
குலகமாங் குரகச்சின்ன புஷ்பகமாகுங்
குளிர்கிறுக மண்டன காரியாவாகும்

விலகமாம் விருட்சசித்திரோ விசேசுதமாகும்
வெறுப்பான பாஷாணங் கட்டிவெள்ளை
சலகமாம் தாளகத்தின் மஞ்சள்போக்கு
சலகையாந் திலவிருட்சப் பேராமே. (29)

உச்சிலந்தின்பெயர்.

உச்சிலந்தின் பேரை யுரைக்கக்கேளு
உறமான பந்துகோபந் துசிலசியா
நச்சியாஞ் செடிந்தடுவே கோழிச்சூடாம்
நற்செவப்பு வெள்ளையுமாய் நல்கும்வேசி
திச்சியா செம்புதனை பற்பமாக்கி
திரிவங்க செந்தூர மாக்கியாகுங்
கச்சியாங் காயத்தைக் கல்லாக்கியாகுங்
கடியவுச்சி சிலந்தியுட காட்சியாமே. (30)

பாவட்டையின்பெயர்.

பாவட்டைப் பேர்தனையே பகரக்கேளு
பணைவிருத்த தூமகரீ தானுமாகு
மாவட்டை மாந்தத்தை யறுக்கியாகு
மகத்தான சிறகமணிவை மாற்றியாகுங்
காவட்டை கபந்தனை பகற்றியாகுங்
கடியசுக்கான் றன்னைச் சத்துமாக்கி
மாவட்டை மகாதோஷம் நீக்கியாகு
மகத்தான பாவட்டை வண்மையாமே. (31)

கருங்கொடியின்பெயர்.

கருங்கொடியின் பெயர்தனையே கருதக்கேளு
காளசியாமா கிருஷ்ணுவல் லக்கினியாகும்
யிருங்கொடி பிறந்தபிறதாரி காவாம்
பேரான சினித்தகுஞ்சா புஷ்பியாகு
மருங்கொடி மகாநிவோசை வைதாம்பூலம்
வல்லிகா மஞ்சிலையை மார்க்கமாக்கி
அல்லிகா அயந்தனையே செந்தூரமாக்கி
படர்ந்தகருங் கொடியினுட ஆண்மையாமே. (32)



ஓட்டொட்டின்பெயர்.

ஓட்டொட்டின் பெயர்தனையே யுணர்த்தக்கேளு
ஓங்காரி கச்சுரி தட்சணபத்திரி
பட்டொட்டி பணிஆரி மருப்பவமாகும்
பருந்திறகழு லானகவி ரயாசமாகுங்
கிட்டொட்டி கிருமிளிக விதேதநியா
கெந்தகத்தைச் செப்பாக்கித் தயிலமாக்கி
நாட்டொட்டி சுவாசகா சக்கினியாகும்
நணுகியதோர் ஓட்டொட்டி ஞமமாமே. (33)

செம்பரத்தையின்பெயர்.

செம்பரத்தைப் பேர்சனையே செப்பக்கேளு
செப்பாகு சுமஅரித்த மாலோமயாகும்
நும்பரத்தை தருபகா செவாலியாகும்
ருத்திரபுஷ்பா தாமமா புஷ்பமாகுஞ்
சம்பரத்தை சபாபுஷ்பா சாதிலிங்கம்
யினிதண்மை யாமதனிவா மல்லிகாவாங்
கம்பரத்தைக் காரீயகொடிச் செப்பியாகுங்
கடியசெம் பரத்தையுட காட்சியாமே. (34)

கொடிக்கள்ளியின்பெயர்.

கொடிக்கள்ளிப் பேர்தனையே கூர்ந்துகேளு
கோடியாம் விருட்சமா மகாவிருட்சமாகு
மடிக்கள்ளி வாதனு சனியுமாகு
மகத்தான தீட்சணி சோரியாகும்
படிக்கள்ளி பாவினிவி ரோசனியாம்
பண்பான பாலுக்குள் குதக்கட்டு
நட்டிக்கள்ளி யீயத்தை நாசமாக்கி
நாடியதோர் கொடிக்கள்ளி நாமமாமே. (35)

இலைக்கள்ளியின்பெயர்.

இலைக்கள்ளிப் பெயர்தனையே யியற்றக்கேளு
யெழில்பத்திர சுங்காத சமத்துத்தச்சம்
தலைக்கள்ளித் தாய்பாள கண்டகமாகுந்
தனிவச்சிர கண்டாசெந் திரஞ்சமாகுங்

குலைக்கள்ளி குன்மநித்திரிஞ்ச பத்திரமாக்
குணக்கியாங் தீட்சணி கடுதித்தாசங்
குலைக்கள்ளி போவாதோ தாபிலிகை
பாண்டுகன ரோகஅரியிலைக் கள்ளியாமே. (36)

திருகுகள்ளியின் பெயர்.

திருகுகள்ளிப் பெயரைச் செப்பக்கேளு
திருக்கியாம் பத்திரசினு காதபத்திரம்
சுருதிகள்ளி சுவானசிகு வாதனச்சி
னுகாவாகுந் துடியதனக்ஷரணிய பித்தாரோத்தா
மிருகுகள்ளி மிறுதுாயனி நாசனியுமாகு
மிடுக்கான அயசிலிட யியமாகும்
நருகுகள்ளி நாகயிந் தனையுமாகும்
நாடியதோர் திருகுகள்ளி நாமமாமே. (37)

மான்செவிக்கள்ளியின் பெயர்.

மான்செவிக் கள்ளிப்பெயரை வகுக்கக்கேளு
மகத்தான அரன்சினுகு பயசாவாகும்
நின்செவி சினித்தமாங் கடுகமாகுஞ்
செயலான லகுவூஷ்ணங்க பாநிலக்கினம்
ஊன்செவியு லோகபந் தனியுமாகு
முண்மையாம் நாகத்தைப் பற்பமாக்கி
கூன்செவி குன்மத்தைப் போக்கியாகுங்
கூரான மான்செவிக் கள்ளியாமே. (38)

பொன்னுவாரையின் பெயர்.

பொன்னுவாரைப் பெயரை புகலக்கேளு
பொன்னுன மேகமாரியு மாதியாகும்
உன்னுன ருக்கும்மா மேகச்சத்துரு
வுத்தமமா மரிகசிரேணிக காசஆவாம்
வன்னுன வர்ணபுஷ்ப பகமுமாகு
மகத்தான காரியச் செந்தாரியாகும்
நன்னுன நாகபந் தனியுமாகும்
நாடியதோர் பொன்னுவாரைப் பேருமாமே. (39)



ஓதியமரத்தின் பெயர்.

ஓதிய மரத்தின் பேரினுட வுண்மைகேளு
வுயர்ந்ததோர் பசாந்திரியாம் ஷகிறிங்கிசம்
சதியமாஞ் சட்சுகியோ பகுளாங்கி சாவாஞ்
சண்ட மாருதமான விருட்சமாகும்
பிதியதோர் மிருதுபுஷ்பி விரணசனியாம்
வியனுன அதிகாரம் போக்கியாகும்
துதியமாம் ரத்தசோ ஷணியுமாகுந்
துளர்ச்சியா மொதியமரச் சூட்சமாமே. (40)

புன்னையின் பெயர்.

புன்னையுடப் பெயர்தன்னையே புகலக்கேளு
புன்னுகம் புருஷ ஆகச்சியமாகுந்
துன்னையுட துங்காகி யாரர்த்தகேசமான
துடியான சூலைதை புஷ்பகமுமாகும்
வன்னையுட வாசனையாங் கெந்தியாகு
மாசற்ற பத்திரமாம் வாதசைனியாம்
வின்னையுட விரணங்கள் குட்டம்போகு
மிடுக்காகும் புன்னையுட விபரமாமே. (41)

OF THE REGISTRAR
No.
28 AUG 1925
MADRAS

சுரப்புன்னையின் பெயர்.

சுரப்புன்னைப் பெயர்தன்னையே சொல்லக்கேளு
சுரயேது சிந்துபுஷ்ப பகமுமாகும்
தரப்புன்னை தாகிந்த யந்திகாலாந்
தளிரான சுகந்தபுஷ்ப பகமுமாகும்
நரப்புன்னை நாகசெந் தூரியாகும்
நலத்தவோர்ச் சாற்றினில் வெடியுப்புக்கட்டும்
குரப்புன்னை குஷ்டங்கள் போக்கியாகுங்
கூரான சுரப்புன்னைக் குணமுமாமே. (42)

நறும்பிசினின் பெயர்.

நறும்பிசினின் பேர்தன்னையே நவிலக்கேளு
நலமான சாதிரசோர் பௌவமாகும்
கறும்பிசினின் கான்குடோ அலமுமாகுங்
கடியவச் சபனுப்போர் கெந்தாசமாகும்

பறும்பிசின் பவுரோலாம் நாளிகயேலசமாம்
பண்பான சுகந்நாசதஞ் சாபியாகும்
நிறும்பிசின் நிலலோகம் பற்பாந்ததாவாம்
நேரான கௌதமம் நறும்பிசினி னுமமாமே. (43)

திருவட்டப்பிசினின் பெயர்.

திருவட்டப் பிசினின்பெயர் செப்பக்கேளு
சிறிவேஷ்ட கோகுவாய் சகமுமாகுந்
தருவட்டஞ்சி நிவாசசா லுத்துருமாகுஞ்
சகமானசிறி வாசியாசிறி சகோசகோ தூபந்
துருவட்டந் தூபவிருட்சந் தானுமாகுந்
தூபகமார்த்த கோரத்க சிரம்
விருவட்டம் விரணரோ பனமுமாகு
மிடுக்கான திருவட்டம் பிசினுமாமே. (44)

சன்றையின் பெயர்.

சன்றையுட பேர்தனையே சாற்றக்கேளு
சகமான நிசாசரிதன் அரியுமாகும்
நன்றையா மர்த்தக் காரியாகும்
நலமான கோதன பிதுநாசன்று
தொன்றையாஞ் சோரிசங்கனி கர்க்கதாவாஞ்
சோரபுஷ்பிச கேசனியு மாகும்
வன்றையா வத்துமதாகு மனைச்சோரமாகு
மகத்தான சன்றையுட மார்க்கமாமே. (45)

உகாயின் பெயர்.

உகாயினுட பேரின்பே ருறதிகேளு
வுண்மையாந் தீட்சண விருட்சணமாகுந்
தகாயினுட தானுகோனம் நாசனமாஞ்
சகுண்டிதிட விக்கினபல் சங்கிசியாம்
மகாயினுட காகவல்ல பவிரோசனபலமாகும்
மனப்பிர வாளர்ப்பல சுமிர்தமாகும்
நகாயினுட பத்தகாம்பி னுசரமாகும்
நற்பஞ்ச தீபிகாயு காயுமாமே. (46)



கண்டில்வெண்ணெயின் பெயர்.

கண்டில்வெண்ணெய்ப் பேர்தனையே கருதக்கேளு
கனமான சலேயஞ்சியாச் சீதமாகும்
சிகண்டில் வெண்ணெய் சீதசத்திராந்துரி
காலியபியாந்தின்ன மத்திறிகச் சேதிகதிதாவாகும்
வண்டில்வெண் ணெய்மதுரூமாம்பிதக
காதிகமாவரனை கெந்திரவிபந் தக்கினமாகு
சண்டில்வெண்ணெய் சாலேயஞ் சிதலிந்திக்தஞ்
சமரசமாங் கண்டில்வெண்ணெய்க் சாட்சியாமே. (47)

சிவப்புநெல்லின் பெயர்.

சிகப்புநெல்லு பேர்தனையே செப்பக்கேளு
செயலான மகாசாலி ரத்தகாலி
துகப்பான சுகந்தப்பிர வர்க்கதாவாந்
தூய்மையாங் கடபுஷ்பி கச்சசாலி
சகப்பான சங்கலனே கிருஷ்ணசாலி
சகச்சா ரகமான மூத்ததாவாம்
வகப்பான வச்ரபாண பனச்சைவமாகு
மலரண்ணியாசி கப்புநெல்லு மார்க்கமாமே. (48)

நல்லரிசியின் பெயர்.

நல்லரிசிப் பேர்தனையே நவிலக்கேளு
நலமான சம்வாக் கிருஷ்ணசாலிச்சமா
வில்லரிசி விரிசியாயிதமே வசமான
மிக்கான கிருதவித் திச்சமாகும்
கல்லரிசி காரச்ச அயோவிதால்ாங்
கனமான மகசாலி சேர்த்தவர்னம்
சல்லரிகம் போக விர்த்தியாகுஞ்
சமரசமாம் நல்லரிசித் தன்பேராமே. (49)

வெள்ளரிசியின் பெயர்.

வெள்ளையென்ற அரிசியின்பெயர் விளம்பக்கேளு
மிக்கான சுவேதக சாலியுமாகும்
வள்ளையென்ற மகாசாலிச் சேரத்தவர்ண
மகத்தான லட்சுமியின் விலாசமாகும்

விள்ளையென்ற வெறிப்பான வேருமாகு
மிக்கான வர்னலா வுகமுமாகும்
பிள்ளையென்ற பெலசாலி யரிகியாகும்
புனிதமாம் வெள்ளரிசிப் பேருமாமே. (50)

கறுப்பரிசியின் பெயர்.

கறுப்பான அரிசிப்பேர் கருதக்கேளு
கருயாள புஷ்பகத் தாவுமாகு
மறுப்பான மகாரவி கிருஷ்ணவிறு
கிமத்தான தஞ்ஞபல மாரகியாகு
முறுப்பான குஷ்டநோய் கடியநாரா
யுறுதியாம் புண்களுக்கு வுபகாரியாகும்
திறப்பான தேகத்துக் குறுதியான
சீரான கறுப்பரிசிச் செயலுமாமே. (51)

கோதும்பையின் பெயர்

கோதும்பைப் பேர்தன்னையே கூறக்கேளு
கோதமாயவர் சைவபகுதா மிலமாகும்
பேதும்பை மிலேச்சைபே யனமுமாகு
மிக்கான புதிநக சைவமாகும்
காதும்பை கங்கைகிரு பஷேபமாகுங்
கதிரத காலிமகா சாலியாகுந்
தூதும்பை சுகந்தாவன வதத்ததாவாந்
துய்முஷ்டிக் கோதும்பைச் சூட்சமாமே. (52)

அவலின் பெயர்.

அவலினுடைப் பேர்தன்னையே யறியக்கேளு
யயாசித்தர ரவமாகச் சாத்தசாரம்
முவலான முகத்தாணி லோரசாவாகு
மிக்கான தயச்செவமுனி பட்சியாகும்
மிவலான பிறபாலிகா கருணாரண்ணியும்
மிக்கான தகச்சரசா சாரகத்து
திலவான பிரசாதி காதிகடையாகுந்
செப்பியதோரவலினுட சீருமாமே. (53)



வரகின் பெயர்.

வரகினுடைப் பேர்தன்னையே வழுத்தக்கேளு
மகத்தான தோத்திரவங் கோரதூஷந்
சரகான சட்சமகாத்தி யோஷாவாகுஞ்
சமருடச்சி வரமாசச் சித்திரமாகும்
பிரகான பீச்சகமு னிபகாவாகும்
பெரிதான கெவாஜயங் கானகத்தி
அரகான அனிச்சப் புத்தகமுமாகு
மழகான வரகினுட வாண்மையாமே. (54)

தினையின்பெயர்.

தினையினுடைப் பேர்தன்னையே செப்பக்கேளு
செழுமைமிறு யங்குணங்கு லச்சைலமாகும்
தனையினுட செயமாகச் சித்திரத்தண்டுலமாந்
தன்மையாம் அலைத்திசம் பந்தனமாகும்
சனையினுட சைவங்க கிரியசகத்திகஞ்
சகமான பாண்டுபேர சனமுமாகுங்
கனையினுட கானக விருத்தியாகுங்
கனமான தினையினுடக் காட்சியாமே. (55)

மொச்சையின் பெயர்.

மொச்சையுடைப் பேர்தன்னையே மொழியக்கேளு
முகமான தானியமா ஷத்துவாகும்
விச்சையுட விக்கிரேயா குருவித்தாலாம்
விருஷகா மமிக்கான பயறுமாகும்
உச்சையாம் உருக்கினத்துக் காதியாகு
முண்மையாஞ் சத்துக்கும் காலனாகும்
அச்சையாம் ஆதார வேருமாகு
மாண்மையா மொச்சையுடப் பேருமாமே. (56)

பனிப்பயரின் பெயர்.

பனிப்பயரின் பேர்தன்னையே பகரக்கேளு
பாண்பான லாசகா கிருஷ்ணமூக்கா
சனிப்பயரு சாரிகா அரிமண்டகமாகுஞ்
சாங்கயா மூக்கரசா லாரிலாவா

வணிப்பயறு வாகனுபி ரோத்தசோபா
மதுரமா சோத்தமா சிரேஷ்டவாகுஞ்
சுனியான சரசூபா விருத்தவேஷி
சுகபவேதி சம்பனிப் பயறுமாமே. (57)

கறுப்புக்கடலையின்பெயர்.

கறுப்பான கடலையுட பேரைக்கேளு
கனமான அரேணவம்வா ளுச்சமாகும்
சறுப்பான சாகாள காரளவாங்
தண்மையாங் களகச்சத்தி நிபுடாருட்சா
மறுப்பான மகாகெந்தா சுகந்தாசமாகு
மகத்தான சணகமாங் கிருஷ்ண சன்னுகமாம்
கெறுப்பான,கெந்தகத்தின் றயிலமாகுங்
தெட்டியாங் கறுப்பான கடலையாமே. (58)

அணுமூலு துவரையின் பெயர்.


அணுமூலு துவரையுட வாண்மைகேளு
அழகான சிங்காரச் சுவேதமைபா
சணுமூலு சபியாலங்கா முகப்பிறியாவாஞ்
சமர்த்தான மங்குவிட்டா காளிருட்பியா
தணுமூல தாக்கந்தா சுனம்புசாவாங்
தண்மையாம் பாஷாண ரசிதசகியாகும்.
பணுமூலு பால்விலோ சனியுமாகும்
பாடியதோ ரணுமூலு துவரையாமே. (59)

ஆமப்பா மூலிகையின் சாதியெல்லாம்
அறிந்தமட்டு மாராய்ந்து ஆயிலையத்தான்தேட்டு
ஓமப்பா நந்திசொல்லக் கேட்டுக்கேட்டு
உவப்பான காலாங்கி நாயர்சொல்லக்கேட்டு
சேமப்பா வடமொழியின் றிரட்டையெல்லாம்பார்த்து
சிரசான சித்தர்களைத் தொழுதுகேட்டு
நாமப்பா நிகண்டுக்குள் பேரையெல்லாம்
நழுவாம லறிந்தமட்டுஞ் சொன்னேன்பாரே. (60)



சொன்னதொரு மூலிகையின் றொகுப்புக்கேளு
சுளுக்காக நான்னூற்று யெழுபத்துமூன்று
பென்னதொரு பேரையெல்லாம் பிரித்துச்சொன்னேன்
பேரான சாயதிரத்தி லில்லையில்லை
இன்னதொரு சாஸ்திரந்தான் மெத்தமெத்த
யேழையாம் பசருனைக்குத் தெரிந்துபோகும்
பன்னதொரு பாஷைப்பேர் சொன்னதர்மம்
பராபரமா மணித்தாய்க்குக் குருவுக்காச்சே. (61)

மூலிகைகள் முற்றுப் பெற்றது.



உ

சிவமயம்.

போகமுனிவர் திருவாய் மலர்ந்தருளிய

# மூலிகையின் றொகுப்பு

## விபரங்கூறுகின்றது.

ஆச்சென்ற பேரினுட தொகுப்புகேளு
அழகான சீந்திலொடு மரளகாஞ்சோதி
பேச்சென்ன பெருஞ்சோதி யாடாதோடை
போரான கருங்காலி வெண்கருங்காலி
வேச்சென்ன வேம்போடு பெரியவேம்பு
விதமான நிலவேம்பு சர்க்கரைவேம்பு
கோச்சென்ன கோரையொடு கிழங்குபற்படாகம்
கொடியான வெட்டிவே ரிலாமிச்சம்வேரே. (62)

வேரான பேய்ப்புடல் வட்டத்திருப்பி
மிர்கான குமிழ்பெருங்கு மிழிதேவதாரம்
பேரான பெரியவெள்ளை பிரஸ்நபரணி
புகழான கண்டங்கத்திரி சிறுவழுதலையாகும்
நேரான பெரியவழு தலைநெரிஞ்சில்
சேர்வில்வ முன்னைகழற் கொடியுமாகுந்
தூரான சுவேதகழங் கொடிகொட்டைக்கரந்தை
சுனையான நாறுகின்ற கரந்தையாமே. (63)

ஆமென்ற நன்னாரி பேய்ப்பீர்க்கோடு
ஆண்மைரண்டு பிறகுப்பமு பாகவாரு
மூமென்ன முள்வெள்ளரி நிலவுகாயோடு
முயர்வெள்ளைக் கிலுகிலுப்பைக் கோவையோடு
தேமென்ற தித்திப்புக் கோவைகொன்றை
திறமான வெலிச்செவி சதுரக்கள்ளி
சேமென்ற சிவந்தநா புருவியோடு
சிவந்த சதுரக்கள்ளிச் சாறட்டையாமே. (64)



ஆமேதான் மூக்குரட்டை செம்முள்ளியோடு
ஆண்மையாஞ் சித்தாமுட்டி பேராமுட்டி பாலை
தேமேதான் திருணம்பாலை குடசப்பாலை
சிறப்பான வெட்பாலைபழ முண்ணிப்பாலை
நாமேதா னரிப்பயறு முதியார்கூந்தல்
நல்வேளை யாமணக்கு சிவப்பாமணக்கு
மாமேதான் மாதளைக்கொம் மட்டிமாதளையா
மகாவிளா சர்க்கரைக் கரும்புமாமே. (65)

கரும்பான வெண்கரும்பு அமுக்கறுபிரமி
கடும்பூனைக் காஞ்சொறி பூனைக்காலி
திரும்பான சிறபூனை மந்தாரைகொக்கிறகு
செயலான அழிஞ்சிலொடு பாகல்காட்டாத்தி
காப்பான முசுமுசுக்கை புன்னைகிழான்
கடியநெல்லி கருங்கொள்ளு கூகைநீறு
திரும்பான் தேத்தினொடு கருவூமத்தை
சேவகனார் கரிசாலங் கண்ணியாமே. (66)

கண்ணியொடு பொற்றலை யெருக்குவேளை
கனகமணித் தக்காளி கருந்தக்காளி
குண்ணியொடு குன்றிமணி பெரியமுள்ளங்கி
குறிசின்ன முள்ளங்கி யாற்றுமுள்ளங்கி
முண்ணியொடு முருங்கை புன முருங்கையாந் துளசி
முத்தகருந் துளசிசீரத்திப்பூ வெள்ளுள்ளி
இண்ணியொடு பீருள்ளி நொச்சில்கரு நொச்சி
யேற்றமாம் வாழையுடக் கிழங்கதாமே. (67)

கிழங்கான தென்னமரம் பனையும் நிலப்பனையாங்
கெட்டிவெள்ளை காக்கணன்முடக கொத்தான்செம்மை
சழங்கான சங்கங்குப்பி பொரும்பில்வெள்ளறுகு
சதிரான கறுப்பறுகு பவளவறுகாகும்
புழங்கான புளியாரை தாமரையினோடு
புதியதாமரைவளையந் தாமரையின் மணியாம்
தழங்குதா மரைத்தாது தாமரையின்கிழங்கு
தண்மையாஞ் செங்கழுநீ ரரக்காம்பல்தானே. (68)

தானென்ற கல்லினுட தாமரையினேடு
  தண்மைவெளித் தாமரைகுள்ளி மல்லிகையாம்
ஆனென்ற ஆற்றுமல்லிகை முல்லையாகும்
  அழகுமுல்லைப் பேதங்களந் ததியாவட்டம்
ஏனென்ற யிருவாட்சி செண்பகம் சிறுசெண்பகம்
  எளிதானசெவ்வந்தி குங்குமச் செவ்வந்தி
தேனென்ற யெனுமிச்சை சிற்றிஞ்சுபேரிஞ்சு
  செழுமைமுந் திரிப்பழம்புளி முந்திரிப்பழமே. (69)

பழமான யிலந்தையொடு யிலுப்பை மலையிலுப்பை
  பலாசுமுன் ஆலரசு சேசில்நாவல்
அழமான அத்திபே யத்திப்பூவரசு
  அலரிவன்னி நீர்க்கடம்பு கடம்புவெண்கடம்பு
வழமான வகைகயோடு கறப்புனுட வாகை
  வயிரமாம் வேங்கையொட்டை யிலவுயிலவம்பிசின்
புழமான மரமதாம் பொன்னுகுங்கண்ணி
  போரான மாவிலிங்கை வோத்திரம்வெள்ளி லோத்திரமே. ()

திறமான வஞ்சியொடு ஆத்தினுடமருந்து
  செழும்ஆட்டுச் செவிமருந்து குதிரைச்செவிமருந்து
இறமான இறிற்கிழங்கு தானுமாகும்
  இனிமையாந் தேள்கடைநெய்ச் சட்டியாகும்
சிறமான சிறுவிடுகொள் பெருவிடுகொள்ளாகுந்
  திறமைதண்ணீர் மீட்டான்கா கொள்ளியாகும்
அறமான சுதாகாகோளி சிவகமாகும்
  ஆதியா மயிடவுகம்பேர் மல்லியாமே. (71)

மல்லியொடு சித்தமல்லி சிறுபுள்ளடியாகு
  மகரஷ்டி மதுகமொடு சாரிபாதி
பல்லியொடு பதுமுகம்பிற் புண்டரீகப்
  பாங்கான மேதைமகா மேதைதேக்கு
நல்லியென்ற ஞாழல்பால் வீழிவீழி
  நண்பான பாதிரிவெண் டாதரியுமாகும்
பெல்லிபெருங் குரும்பைகுருஞ்சூலி தறமுருக்கை
  பெருங்குறிஞ்சி ஆயில்புங்கு வலம்புரிக்கொடியாமே. (72)



கொடியான மருக்காரை பாற்பையிருளாகுங்
  குணமான பாலிருள் இருள்விடுகளாவிழுது
மடியான மராமரங்கமுகு தழுதாழை
  மகாநெர்ப்பை ஆதண்டை குழலாதண்டை
நடியான நாணலொடு திமிசுபுசபத்திரி
  நலவிடத்தேர நெட்டிதளத் துவயமுமாகும்
பிடியான யேரிவாழ் வுத்தாமண்ணி போராமுட்டி
  புதியநறுங் குறிஞ்சிந்தைச் சூரியாமே. (73

சூரியொடு செம்பினுட நெரிஞ்சிலாகுஞ்
  சுதக்கண் புகலபுகு வள்ளியோடு
மிரைமினிரை சுசோகம்யேலா வாலுகமா
  மீன்பேரு முத்தக்காசு அதிங்குதானும்
விரியொடு வெள்ளைநாகனந்தி நேர்வாளம்
  மிக்கான குரட்டையது கஞ்சாங்கோரை
மருவகமா மிரையிங்குணங் காட்டுத்துளசியாகு
  மயேந்திப் பிலிகாமான் சரசியாமே. (74)

சரசியொடு அனிச்சைகற்றாழை குப்பைமேனி
  சாங்கமாஞ் செருப்படியுஞ் சிவனார்வேம்பு
சுரசிதாது வளையோடு ஆடுதின்னாப்பாளை
  தூயவெற்றிலை யாகாச கெருடனுகும்
நிரசிரத்த மண்டலிகாட் டாமணக்கு
  நேரான மருதணிகெஞ்சா நிலவாகை
காசிகட்டுங் கொடியும் பிரண்டைவல்லாரை
  கனமான மயூரசிகைதாம் பூரசிகையாமே. (75)

சிகையான கானலமா தில்லையோடு
  சிரானகப் பொட்டிபுளித்தசிறுகீரை
சிகையான நீரறளி செவ்வறளியோடு
  நியசத்தி சாறணை தும்பை பேய்த்தும்பை
பிகையான பேய்க்கொள்ளு பேய்க்கடலையாகும்
  பெரியதொரு மலைகளிலே யிருக்குகின்ற
புகையான் சிந்தருக்கு கானகுமூலி
  பேய்த்துவரையமு கண்ணிதொழு கண்ணியாமே. (76)

ஆமென்ற முடவாட்டின்கால் நாகசிங்கி
  யதிகமா மிருப்பவல் பொன்னூமத்தை
காமென்றகருமத்தை நச்சுப்புல் நான்முகப்புல்
  காவட்டம் புல்லோடு சுணங்கவிருட்சம்
ஏமென்ற வெருமைக்கணைச் சான்றோமவிருட்சம்
  எழிலானசெந் தாடுபாவை முண்டினியாம்
மென்ற சாயாவிருட்சங்கரு நெல்லிக்கல்லாரை
  சாந்தமாங் கலைச்செம்பு கல்லறளிதானே. (77)

தானை மூவிலையாங் குருத்தினைடு
  தனியத்த முத்திருக்கஞ் செவிசெந்நிராய்தான்
சேனை செம்பல்லி செவ்வகத்தியோடு
  செழுமை நீலஞ்சோறி நிலக்கடம்பு
பூனை புறங்கிநாதி பூதணக்கு
  பேரான செருந்தி கொத்தான் வறட்சுண்டியாமாம்
காணை கட்டுளாம் பளங்காய் புனம்புளிகடியதோ
  ரிதனை தும்பி சிறு தும்பியாமே. (78)

தும்பியாஞ்சோனகப் புஷ்பம் பந்திராயாகும்
  கணையான பேய்த்திமிட்டி பெருங்கம்பியோடு
பம்பியா மறிதுடரி தாளிநறுந்தாளி
  மகாதேவ தாளியொடு நாகதாளி
பிம்பியாம் பேய்சுரை பேய்ப்பீர்க்கோடு
  பெரிதானசம்பாட்சி யிருசுவ சற்பாட்சி
விம்பியாம் விஷ்ணுகாந்தி நாகமலையாகு
  மிக்கான நீர்க்கடம்பு கிளிமூக்காமே. (79)

மூக்கினைடு யீகைநறு விளியுளிவஞ்சு
  மிக்கசிறு கல்லூரி வெட்புலாவாம்
நீக்கினைடு நீர்ப்பூலா தலைச்சூடுவள்ளிநெடிய
  பிர்மதண்டி யொடுபொடுதலை கோடாசாலை
ஈக்கினைடு யிடுகொள்ளு காட்டுக்கொள்ளு
  எய்யபேய்க் கரும்புதின் பூசிறும்சத்துரு
பேய்க்கினைடு பேய்த்திமிட்டி காயாப்பாகல்
  பேர்பெரிய தும்புரு நிலக்குராவே. (80)



குராபூவம் பழம்பலா முட்பலாவாகுங்
  குணமான வனமனை தணக்கிசங்கு
வெராவெள்வேல் காஞ்சிரை வெம்பாடல்
  விளக்கமா மலையாத்தி சடைச்சியாகும்
தராகப்புசடைச்சி தமனத்து வயமாகுஞ்
  சதுகமா மாஞ்சரோகணி மூங்கிலரிசி
முராமூங்கிற் குருந்துசெவ்விறகு செம்மரமா
  மூர்க்கமாங் கருமருந்து வொருகொம்பியாமே. (81)

கொம்பியாம் நீர்விளாக முதைமான் புள்ளி
  கொடியநேயம் பொன்வண்ணச் சாலியாகும்
செம்பிசெழு மலர்க்கொன்றை பெருமலர்க்கொன்றை
  சிறுநீலி யோமையொடு வுதரிமாரி
பும்புளி நரளைக்கிழங்கு பேய்க்கும்மட்டி
  பெரியதோர் சுண்டைக்காய்க் காறினெள்ளு
பிம்பீத ரோகணி கொடியானநெல்லி
  பேரான சின்னருகை யாவாரைதானே. (82)

வாரிகாட்டுக் கருணை ருணதையாகு
  மகத்தான ஆதளைக்காய் நரிமுருக்கு
கிரிகளி முருக்குநெ பத்திகையுமாகுங்
  கெடிமவோசி பத்திரம்நாய் வேளைநாபி
மாரிமா காளிதிளிப் பனையீற்று
  மகத்தான வோரிலைத்தாமரை நீர்முள்ளி
வீரியமாய் வெள்ளை நீர்முள்ளி
  பாற்சொற்றிமிக்க பரியங்கபாதிற்றுஞ் சோந்தியாமே. (83)

ஆமென்ற ஆரையொடு கசப்பானபசளை
  அதிகமா மிருவேலிப்பருத்திச் செம்பருத்தி
தாமென்ற அத்தியொடு சக்கிரவர்த்தந்
  தனித்ததோ ரரைக்கீரை காளாணைகும்
வாமென்ன வண்யீட்டி பூசிவிகக்கரி
  மகத்தான வோரிலைத்தாமரை நீர்முள்ளி
பூமென்ற புஷ்கரமூலம் பிரம்புமுளகறணை
  பெரியகோழி கிளுவை அய்விராலிதானே. (84)

விரலியொடு கவுதும்பை பிறங்குநாறி
  மிக்கசங் கத்தாரி யோடுட்டுத்
தியாம்புரலி யொடுபுல்லூரி திலகவிருட்சம்
  பெரியவுச்சிச் சிலந்தன்பா வட்டையாகும்
காலியொடு கருங்கொடியொட் டோடம்
  செம்பரத்தைகன கோடக்கள்ளி யிலைக்கள்ளிதிருகுகள்ளி
மரலியொடு மான்செவிக் கள்ளிபொன்னுவாரை
  மாசற்ற வொதிபுன்னை சுரப்புன்னைகாணே. (85)

காணநறும்பிசின் திருவட்டம் பிசின்சன்னை
  கனமான வுகாயோடு கண்டில்வெண்ணெய்
நீணசிவப் பானெல் லரிசியாகுந்
  திறமான வெள்ளரிசி கறுப்பானரிசி
கோணகோ தும்மையல்ல தினைமொச்சைகொடியான
  பணிப்பயறு கறுப்பான் கடலை
ஆறுமூலு துவரை மூலிகையின்றொகுப்பு
  அடக்கினே னூற்று யெழுபத்துமூன்றே. (86)

அடக்கினே னூற்று யெழுபத்துமூன்று
  அதிலமர மூலிகைப்பேர் சொல்லவென்றால்
கடக்கினே நாலாயிரத்து நானூற்று
  நாற்பத்து நாலுவிதமானதொரு மூலிதன்னை
கடக்கினேன் கற்பத்துக் கெடுத்தமூலி
  காலாங்கி நாயர்தான் சொல்லக்கேட்டு
முடக்கினேன் முத்துபோ லொருகயத்தில்கோர்த்தேன்
  முதுமையாய் நிகண்டுக்குள் திறந்திட்டேனே. (87)

திறந்திட்டேன் சிந்திலுக்குத் தேகசித்தி
  திறமான மருளுக்கு விரணம்போகும்
கறந்திட்ட காஞ்சோறி ரபத்தைச்சாடுங்
  கடியபெருங் காஞ்சோறி சிலேஷ்மம்போகும்
துறந்திட்ட ஆடாதோடை சுரத்தைப்போக்குஞ்
  சுயம்பான கருங்காலி குட்டம்போக்கும்
நறந்திட்ட வண்கருங்கா லிக்குத்தானும்
  நாகமது கட்டியே மணிபோலாமே. (88)



மணியான வேம்புதான் பித்தம்போகு
  மகாபெரிய வேம்புதான் வாதம்போகும்
நிணியான நிலவேம்பு சுரத்தைப்போக்கும்
  நேர்ந்தசர்க் கரைவேம்பு காயசித்தியாகுங்
கொணிகோரைக் கிழங்குக்குத் தோஷம்போகுங்
  கூரான பற்படகங் கண்ணுக்கேற்கும்
விணிகுட்டி வேருக்குத் தாபம்போகு
  மேன்மையிலாப் பிச்சமலோ பித்தசுரம்போமே. (89)

போமேதான் பேய்ப்புடோல் பித்தந்தானும்
  புகழ்வட்டத் திருப்பியென்றால் பேதிகட்டுங்
கோமேதான் குமிகளுக்குச் சன்னிபோகுங்
  கொடியபெருங் குமிளுக்குச் சுரங்கள்போகுந்
தேமேதான் தேவதாரந் சிலேஷ்மத்தையறுக்குஞ்
  செப்பெரிய வெள்ளையென்றால் வாதம்போகும்
ஆம்பிரஸ்ணி பரணிக்கு அத்திசுரம்போகும்
  அருங்கண்டங் கத்திரிக்குச் சுவாசம்போமே. (90)

மூலிகையின் சமுதாயகுணம்.

சுவாசமொடு காசம்போஞ் சிறுவழுதலைக்கு
  செப்பரிய வழுதலைக்குச் சிலேஷ்மம்போகும்
நிவாசமாம் நெரிஞ்சிலுக்கு மூத்திரக் கிரிச்சம்
  நேரான வில்வமது சததிபோகு
முவாசமா முன்னைக்கு மேகம்போகு
  மூர்க்கமாங் கழற்கொடிக்கு விரைவாதம்போகும்
வாசமாம் வெண்கழற்கொடிக்குக் குன்மம்போகு
  மிடுக்கான கொட்டைக்கரந்தைக்கு வாக்குண்டாமே (91)

ஆமேநாறு கரந்தைக்காய் சித்தியாகும்
  ஆண்மையாம் நன்னாரிமருசுக் கிருபோகும்
போமே பேய்ப்பீர்க்குக் கெந்தகத்தயிலமாகும்
  பெரியாண்டு பீர்க்குக்கு வாதசமனாகும்
பாமே பழுபாகம்தான் லிங்கங்கட்டும்
  பழுத்தமுள் வெள்ளரிக் கிரிச்சிரம்போகும்
நேமேனில் உகாய்க்குத்தான் சந்தெல்லாமிறங்கும்
  நிறத்தவெள்ளை கிலுகிலுப்பை சூதபற்பமாமே (92)

பற்பமாங் கோவைக்குச் சலக்கழிச்சல்
பாங்கான தித்திப்பாக் கோவைவாசங்கட்டுங்
குற்பமாங் கொன்றைக்குச் சிறுமிபோகுங்
கொடிவேலிக் செவிக்குத்தா னீர்சுருங்குங்
தற்பமாஞ் சதுரக்கள்ளி பாஷாணமெழுகு
தனியான சிவதைதான் விரோசனியாம்
நற்பமா நாயுருவி மந்தத்தையறுக்கும்
நற்சிவப்பு சதுரக்கள்ளி தங்கஞ்செப்பாமே. (93)

செம்பான சாறடைதிமிர் வாதம்போகுந்
திறமான மூக்குரட்டை பீனிசம்போகும்
அம்பான செம்முள்ளி சிலேட்டுமத்தையறுக்கும்
ஆமையாஞ் சித்தமுட்டி சோரகத்தைப்போக்கும்
பெம்பான பேராமுட்டி சகலசுரம்போக்கும்
பேரான பாலைதான் சுளுக்குப்போகுந்
தெம்பான திருணம்பாலை பித்தந்தீர்க்குந்
செழுமைகுட சப்பாலையதி சாரம்போமே. (94)

சாரமாம் வெட்பாலை யிருப்பிலியந்
தனித்தபழம் பாலைதான் சாகும்பித்தம்
நாரமாம் நரிப்பயரு பித்தசமனாகும்
நல்முதியார் கூந்தலுக்குக் காரியம்பற்பம்
மீரம்வெள்ளை யாமணக்கு வாதம்போகும்
மிக்கசிவப் பாமணக்கு சாதிலிங்கமயினம்
மாரமா தளையிரும் புருக்கியாகு
மணத்தகொம்மட்டி மாதளைதான் சத்திபோமே. (95)

சத்திபோய் விளாவுக்குத் தனிபித்தம்போகுஞ்
சர்க்கரைக்குத் தாபம்போ மயக்கம்போகுங்
கத்திபோங் கரும்புக்குக கல்லடைப்பு போகுங்
கனத்தவெள்ளைக் கரும்புக்குக் கபங்கள்போகும்
அத்திபோ மழுக்கறு சயங்கள்போகும்
ஆனதோர் பிரமியினால் விக்கல்போகும்
மத்திபோம் பூனைக்காஞ் சொறிக்குச்சிலேஷ்டம
மாபூனைக்கா லிப்பருப்புத் தம்பனைக்காமே. (96)



ஆமென்ற சிறுபூனை கீரிறங்கும்
அழகான மந்தாரை பாஷாணமயினங்
கோமென்ற கொக்கிறகு சாதிலிங்கமயினங்
குறிப்பான அழிஞ்சிலுக்கு விஷங்கள்போகும்
பாமென்ற பாகலுக்குப் பாஷாணதோஷம்
பண்பாகுங் காடாத்தி கிராணிபோகுஞ்
சாமென்ற சாளத்தில் தங்கநீறுங்
தனிமுசு முசுக்கையது சயங்கள்போமே. (97)

போகுமே யெழில்புன்னை புண்கிரந்தி
புகழ்நீழா நெல்லிக்குக் காமாலைபோகுங்
காகுமே கருங்கொள்ளு வுருக்கினத்துக்காகுங்
கடுங்கூகை நீறுதா னுஷ்ணம்போகுந்
தேகுமே தேத்தினுக்குச் சலத்தில்மட்டு
தீயான தகரைக்கு மாந்தம்போகும்
ஊகுமே பூமத்தைச் சூதவெண்ணெயிறுகும்
உறுசேவக னார்கிழங்கு கடிகைபோமே. (98)

கடிகைபோங் கரிசாலை பாண்டுக்காகுங்
கனத்தபொற் றலைக்குத்தான் காயசித்தியாகும்
எடிகையா மேருக்குச் சன்னிபோகும்
ஏற்றமாம் வெள்ளெருக்குச் சாரங்கட்டும்
மடிகைமணித் தக்காளி கனாலாத்தியாகு
மத்தகருந் தக்காளி கெந்திகட்டுங்
குடிகையாங் குன்றிமணி காரங்கட்டுங்
குணம்பெரிய முள்ளங்கி கிரிச்சிரம்போமே. (99)

கிரஞ்சின்ன முள்ளங்கி கெந்திகட்டுஞ்
சித்தாற்று முள்ளங்கி சிலேத்மம்போகு
முரமுருங்கை கண்ணுக்குள் விரணம்போகு
மூர்க்கமாம் புனமுருங்கை நாகங்கட்டுந்
துரந்துளசி தோஷங்கள் போக்கியாகுஞ்
சுயம்பான கருந்துளசி செந்தூரத்தாதி
சிரந்தநிறத் திப்பிலி சன்னிபோகுந்
நேரான வெள்ளுள்ளி வாதம்போமே. (100)

வாதமாம் யீருள்ளி வேகம்போகு
மகத்தான நொச்சிலுக்குக் கடுப்புபோகும்
காதமாங் கருநொச்சில் கரப்பான் போகுங்
கனத்ததோர் வாழைக்குப் பெரும்பாடுபோகும்
ஊதம்வா ழைக்கிழங்கு வுழலைதீரும்
உத்தமமாந் தென்னமர மருட்சைபோகும்
பாதமாம் பனைக்கிழங்கு விருத்தியாகும்
பண்பான நிலப்பனைதான் பாலையாமே. (101)

பாலைவெள்ளைக் காக்கணை விரோசனியாகும்
பாங்கான முடக்கொத்தான் வாதம்போகும்
சேலையாஞ் சேமைக்குத் தினவுபோகுஞ்
சிறுசங்கங் குப்பிக் குட்டம்போகும்
போலையாம் பொருமலுக்கு விரணம்போகும்
புகழான கறுப்பறுகு காசம்போகும்
வேலையாம் வெள்ளறுகு மேகம்நிற்கு
மிகப்பவழ மறுக்கு சுவாசம்போமே. (102)

சுவாசம்போம் புளியாரைக் காயசித்திபுளியாஞ்
சுகமான தாமரைதான் கண்குளிர்ச்சி
சிவந்தா மரைவளையம் நஞ்செல்லாமுறிக்குந்
தாமரையின் மணிதானும் வசிகரமாகும்
அவாசதா மரைத்தாறு மேகம்போகும்
ஆனதா மரைக்கிழங்கு மாண்மையுண்டாம்
திவாசமாஞ் செங்கழுநீர் திரிதோஷம்போகுஞ்
செப்பரிய அரக்காம்பல் சிலேத்மம்போமே. (103)

போமேலெத் தாமரைக்கு லோகங்கள்செம்பாம்
புத்தியவெள்ளைத் தாமரைக்குச் சூதங்கட்டும்
கோமென்ற குளிர்ச்சிக்கு வுப்புகட்டுங்
குணமான மல்லிகைதா னெண்ணெய்களும்ஆத்தி
ஆமேதான் மல்லிகைக்கு அழகாமேனி
ஆண்மையா முல்லைக்குச் சோபந்தீரும்
மூமேதான் முல்லைபேதங்கள் முத்தோஷம்போகு
முன்னைகந் தியாவட்டங் கண்ணுக்காமே. (104)



கண்ணுக்கா மிருவாட்சி ரத்தபித்தந்தீருங்
கனமான செண்பகந்தான் பருக்கம்போகும்
திண்ணுசிறு செண்பகந்தான் பித்தம்போகுஞ்
செவ்வகத்தி சித்தலி பிர்மைபோகுங்
குண்ணுகுங் குமம்வந்தி கோழைபோகுங்
கூரான வெலுமிச்சை பயித்தியம்போகும்
திண்ணுசிற் றிஞ்சிதான் றிரிதோஷம்போகுஞ்
செயலான பேரிஞ்சு சுரங்கள்போமே. (105)

சுரம்போகுந் திரிப்பழந்தான் தோஷம்போகுஞ்
செயலான பேரிஞ்சு திரிதோஷம்போகுஞ்
இரமான யிலந்தைக்கு கடுப்புபோகு
மிலுப்பையென்று லேத்தமா மிரணம்போகும்
மரமான பலையிலுப்பை வாதம்போக்கு
மகத்தான பலாசுதான் பேதியாகு
முரமான முட்பலா அரிதாரநீற்று
மூர்க்கமா மாலுக்குப் புழுக்கள்போமே. (106)

போமென்ற அரசுக்குப் புத்தியுண்டாம்
புகழான யிச்சிலுக்கு வூஷ்ணம்போகும்
நாமென்ற நாவலுக்கு விரணந்தீரும்
நலமான அத்திக்குப் பெரும்பாடுநீக்கும்
போமென்ற பேயத்தி தம்பனையாகும்
பூவரசு சகலவிஷ குட்டந்தீரும்
ஆமென்ற வலரிக்கு நடுக்கல்நிற்கும்
அதிகவன்னி யிரும்புசெம் பாகுமன்றே. (107)

ஆமென்ற நீர்க்கடம்பு நாகங்கட்டும்
அதிகமாங் கடம்புக்குப் பாஷாணங்கட்டும்
வேமென்ற வெண்கடம் சூதங்கட்டும்
வெறுப்பான வாகைதாள் விரணந்தீரும்
காமென்ற கறுப்புக்கு கெந்திகட்டுங்
கடிதான வேங்கைக்கு கடிகள்போகும்
ஓமென்ற வொட்டைக்கு வுதிரம்போகு
முத்துமா மிலவுக்கு வதிசாரம்போமே. (108)

சாரயில வம்பிசின் சுக்கிலங்கட்டுந்
தளுக்கான மாமரம் வாந்திநிற்கும்
பேரானபொன்னுங் கண்ணிதான் கண்ணொளிவுதோணும்
புகழான மாவிலிங்கை சன்னிதீரும்
நேரான லோத்திரமென்றால் கண்ணுக்காகும்
நுகாவெள்ளி லோத்திர துரிசி குருவாகும்
வாரவஞ்சி தன்னுயிடுப் புறுதியாகும்
மகா ஆற்று மருந்துக்கு வழலைபோமே. (109)

போம்ஆட்டுச் செவிமருந்து வெள்ளீயபற்பம்
புகழ்குதிரை செவ்மருது காரீயபற்பம்
ஏமிநீர்க் கிழங்குக்கு யீளைபோகும்
எற்றமாம் பாலிநீர் பாஷாணங்கட்டும்
தேமேதான் தேள்கடைக்குத்தான் சிறங்குபோகும்
தெளிவான செய்ச்சட்டி சீதசுரம்போகும்
தாமேசிறு விடுகொள்ளு தண்ணீர்க்கட்டும்
தயங்காத பெருவிடுகொள் சகாஞ்சாமே. (110

சாகுந்தண் ணீர்மிட்டான் கிழங்குசெம்பு
தனித்தகா கோளிக்குச் சலங்கள்நிற்கும்
சிகிக்ஷி காகோளி திறமுண்டாக்குஞ்
சீவகங் கல்லுப்பு கட்டிப்போகும்
சுகுமிட லகந்தனக்கு கெவுரிகட்டும்
ஏற்றமாம் பேயாமல்லி சுரங்கள்போகும்
தாகுசித்த மல்லிகைக்குச் சலவைபோகுந்
தனித்தசிறு புள்ளடிக்குக் கணங்கள்போமே. (111)

போகவே யஷ்டமதுகம் பிரமியங்கள்போகும்
போசாரி பாதிரிக்குச் சூதங்கட்டும்
பாகவே பதுமுகம் பாலையாகும்
பணாத்தபிர புண்டரிகமப் பிரேகசத்காம்
மேகவேமே தைக்குமகா தோஷம்போகு
மிகமான மகாமேதை துஷ்டசுரம்போகுந்
தேகவே தேக்குச் சிரங்குபோகுந்
செப்பரி ஞாழலுக்குத் தினவுபோமே. (112)



தினவுபோம் பால்விழி அயயீயமாகுஞ்
செயமான வீழிக்குச் சித்தியாகும்
பனவன பாதிரிக்குப் பாண்டுபோகும்
பகர்ந்தவெண் பாதிரிக்குத் தாளங்கட்டும்
பெனவான பெருங்குரும்பை பிறிவுக்காகும்
பேரான குறுஞ்சூலி யண்டமெழுகாகும்
நனவான நறும்முருக்கை நாகரசங்கட்டு
நலமான பெருங்குருஞ்சி கடுப்புபோமே. (113)

கடுப்பான ஆயில்துவர்தம் போக்கும்
கனமான புங்குக்குச் சூலைபோகும்
வடுப்பான வலம்புரி குளிதோஷம்போகும்
மருக்காரை நசியத்துக் குறுதியாகும்
படுப்பான பாற்றைதான் சவ்வீரங்கட்டும்
பண்பான யிருளது குடோரம்போகும்
நடுப்பான பாலீருஞ் சூதங்கட்டும்
நலமான யிருளவிடு காந்தசத்தாமே. (114)

சத்தான களாவிழுது வெடியுப்புக்கட்டுந்
தலமான மராமரஞ் சூடன்கட்டும்
கத்தான கமுகுதான் பறகுறதியாகுங்
கனமான கழுதாழை வாதம்போகும்
தெத்தான தொப்பைக்கு கிறுச்சும்போகுந்
திறமான ஆதண்டைப் பீனிசம்போகுங்
கொத்தகுழ லாதண்டை சரக்கெல்லாங்கட்டுங்
கொடிதான நாணல்துன் மாங்கிஷம்போமே. (115)

துன்பான திமிசுதான் சோரங்கட்டும்
சுயம்பான புசபத்திரி வசிகரியாகும்
வின்பான விடத்தெற்குச் சூதபற்பமாகும்
மிக்கான செட்டிதா ணீரைக்கட்டும்
நண்பான தளத்துவயம் நாகவசந்தூரம்
நலமான பெரியவாழை யீயசெந்தூரம்
உன்பான வுக்தாமணி மாந்தத்தையறக்கு
முயர்ந்தபிரா முட்டிக்குச் சாரஞ்சாமே. (116)

சாரமாம் நறுங்குருஞ்சி மயிலிறகு
　　சத்தாகுஞ் சகத் தந்ததைச்சூரி யிரும்புருக்கியாகு
சேரசெப்பு நெரிஞ்சில்நீ ருஷணம்போகுஞ்
　　செயலான கணப்புத்தான் சிலையதுவுமெழுகாம்
காரகலபுகுவள்ளி காய்ச்சித்தி க்ஷணத்தில்
　　கனமான மீனிரைக்குக் கல்லுப்புக்கட்டும்
ஆரமாம் அசோகுக்கு குன்மம்போகும்
　　அதியேலா வாலுகத்துக் கடிகள்போமே. (117)

அடிபெரு முத்தக்காசுசுர தோஷம்போகும்
　　அதிங்குக்கு கால்கைகள் கடுப்புப்போகும்
வெடிவெள்ளை நாக்கனத்தி விரோசனியா
　　மிடுக்கான நேர்வாளந் துடியாப்பேதி
குடியான குறட்டைதான் கோழபீனிசம்போகுங்
　　கொடுங்கஞ்சாங் கோரைக்கு குளிரும்போகும்
மடியமகு வெருக்குக்குத் தாபம்போக்கு
　　மகத்தான யிங்குலம் லிங்கமிறுகிடுமே. (1

இடுங்கட்டுத் துளசிக்கு யிரைப்புபோகும்
　　எற்றதிப் பிலிகாமன் நாதுவிர்த்தி
சடுஞ்சாசி பாம்புவிஷக் கடிகள்தீரும்
　　சகமரிய அனிச்சையது சொரியல்போகும்
கடுங்கற் றாழைதனக்குச் சுத்தியாகும்
　　கடியகுப்பை மேனிதா லுப்பைக்கட்டும்
திடுஞ்செருப் படிக்குத்தான் சிலேத்மம்போகுஞ்
　　சிவனார்தன் வேம்புக்குச் சில்விஷங்கள்போமே. (119

சில்லான தூதுவளை சிலேத்மம்போகுஞ்
　　சிறுவாடுதின் ஞைப்பாளை நாகங்கட்டும்
வெல்லான வெற்றிலைக்கு நாகம்நீறும்
　　மிக்கவாச கெருடன் சூதங்கட்டும்
நில்லானரத்த மண்டலியிருப்பை யுருக்கும்
　　நேர்ந்தகாட் டாமணக்கு யிருப்பிலீயம்
மல்லானமரு தனியிரும்பு செப்பா
　　மகத்துகஞ் சாவுக்கு யோகமென்னே. (120



என்னகிலா வாகைக்குப் புழுக்கள்சாகும்
　　ஏத்தமாங் கட்டுக்கொடி யுப்பைக்கட்டும்
பின்னமாம் பிரண்டைக்கு வயிரம்நீறும்
　　பேரான வல்லாரை யுடலந்தேறும்
மன்னவே மயூரசிகை நாகங்கட்டும்
　　மகத்தான தாப்புரசிகை சூதங்கட்டும்
கன்னவே கானலரை பித்தளைநீறுங்
　　கடிதான சில்லைக்குப் பாஷாணஞ்சாமே. (121)

கடிதான மலைபரத்தான் சூட்வனீருங்
　　கப்பொட்டித் திரைப்பல மெழுகுமாகும்
பிடிபிளிச் சிறுகீரை சூதங்கட்டும்
　　பேரான நீறாணி யிரும்பு செம்பாம்
கிடிதான செவ்வறளி தங்கஞ்செம்பாஞ்
　　செயசத்தி சாரளைதான் காரியபற்பம்
துடியான தும்பைக்குச் சுரங்கள்போகுஞ்
　　சுனையான பேய்த்தும்பைத் தோஷம்போமே. (122)

போமென்ற பேய்க்கொள்ளு சகலமுஞ்சத்தாம்
　　பேய்க்கடலை செந்நியுட தயிலமாகுங்
தாமென்ற பேய்த்துவரை தான்கமாந்தயில்
　　செகமறிய அழுகண்ணிச் சூதங்கட்டுந்
தோமென்ற தொழுகண்ணித் தசைதைகூட்டுஞ்
　　சுகந்தமுடவாட்டின் சவ்வீரங்கட்டும்
நாமென்ற நாகசிங்கி நாகங்கட்டும்
　　நலமான யிருப்பவல்தான்மாக் கெட்டியாமே. (123)

கட்டியாம் பொன்மத்தைச் சூதங்கட்டுங்
　　கருமத்தைக் கெந்தகத்தைக் கட்டிப்போகும்
நட்டியாம் நச்சுப்புலா செந்திர குருவாகும்
　　நான்முகப் புல்லீயத்தைப் பற்பமாகும்
குட்டியாங் காவட்டம் புலமந்தகுபோக்குங்
　　கூரான சுணங்கவிருட்டஞ் சூதங்கட்டும்
எட்டியெருமைக்கனைச்சா னெழிலக்கயசித்தி
　　லெழில்ரோம விருட்சத்திச் சகலசித்தியாமே. (124)

சித்தானசெந் தாடுபாவை தங்கச்செம்பு
செயமான முண்டினிதான் சித்தான்குகுமை
சத்துவாயா விருட்சஞ்சண வேதியாசருஞ்
மமான கருநெல்லி சகலசித்தாம்
கத்தான கல்லற குதங்கஞ்செம்பாஞ்
கலச்செம்பு சூதமது குருவுமாகும்
சுத்தான கல்லற குதங்கஞ்செம்பாஞ்
சுகமூ விவிக்குருந்து சூதமணியாமே. (125)

மணியான முத்திருக்கஞ் செவிசூதங்கட்டு
மாசற்ற செந்திராய் சூதஞ்செம்பாங்
திணியான செம்பல்லி சூதங்கட்டுந்
திறமான செவ்வகத்தி சாதிலிங்கமயினம்
நிணிநீலஞ் சோதிக்குகண்டா வெளுப்பாகும்
நிலக்கடம்பு அப்பிரேகஞ் சத்துமாகும்
பிணிபிறங்கை நாற்றிக்கு கெவுரிகட்டும்
பூதணங்கு மால்தேவி கட்டும்பாரே. (126)

பாரென்ற செருந்திக்குப் பாஷாணங்கட்டும்
பண்பான கொத்தான்தான் பித்தம்போகும்
வாரென்ற வறட்சுண்டில் நீரைக்கட்டும்
மகத்தான ஆவிரந்தான் வெடியுப்பக்கட்டுங்
காறென்ற காடமோ தாபம்போகுங்
கனமான அப்பளங்காய் கல்லுப்புக்கட்டும்
போரென்ற புனம்புளி சாரங்கட்டும்
புகழாக யிதனைத்தான் சூலைபோமே. (127)

சூலைபோந் தும்பைக்குச் சூதபற்பமாகுந்
துணையான சிறுதும்பி சோபந்தீர்க்கும்
பாலைபோஞ் சோனகப்பூ பாதரசமாகும்
பம்மந்திரா சன்னிதனைப் போக்குவிக்கும்
பேலைபேய்த் தும்மட்டிப் பாஷாணங்கட்டும்
பெருங்கம்பி வெள்ளீய பற்பமாகும்
மாலைபோந் துடரிமால்தேவி பற்பமகா
தேவதா ளிக்குச்சூத பற்பமாமே. (128)



தாளிக்கு யிரையிருமல் மூர்ச்சைபோகுந்
தனித்தநறுந் தாளிக்குச் சிலேத்துமம்போகும்
நாளிநாக தாளிக்கு நாகங்கட்டும்
நலமான பேய்ச்சுரைக்கு விஷங்கள்தீரும்
பேளிபேய்ப் பீர்க்குக்கு கெந்தகத்தின்றயிலம்
பெரியசட் பாட்சிக்கு அரவின்விஷம்போகும்
ஈளிறுசு வசற்பாட்சி யிங்கிலிகங்கட்டும
எழிலான விய்ஷ்ணுகாந்திக்குச் சுரங்கள்போமே. (129)

போமென்ற நாகபலை தாம்பரசெந்தூரம்
புகழான நீர்க்கடம்பு யீயசெந்தூரங்
கோமென்ற கிளிமூக்கி லோகசெந்தூரங்
கெடியான யீங்கைக்குத் தாளகச்செந்தூரம்
நாமென்ற நறுவிளி நாக்குபுண்ணாறும்
நலமான புளிவஞ்சி நாகபலைபற்பம்
காமென்ற சிறுகல்லு கல்லுப்புக் கட்டுங்
கடியதோர் வெட்பூலா வூஷ்ணம்போமே. (130

பூலான நீர்ப்பூலா போகமிதுவாகும்
புகழான தலைச்சுருடு வெள்ளிரசங்கட்டும்
பேலான பிர்ம்மதண்டி சூதங்கட்டும்
பொடுதலைக்கு வட்டத்திலுட கடுப்புபோகுங்
காலான கோடாசாலை வயிற்றுப்புழுமாளுங்
கொடியதோ ரிடுகொள்ளு சத்துகூர்மை
காலான காட்டுக்கொள்ளு காரங்கட்டும்
கடியபேய்க் கரும்புக்குப் பிசாசுபோமே. (131)

பிசாசான தின்பூவு சிலையைக்கட்டும்
பெரியகிருமி சத்துருக்குப் புழுக்கள்போகும்
பசாசான பேய்த்திமிட்டிப் பாஷாணங்கட்டும்
பாங்காயப் பாகலுக்கும் வட்புழுப்போங்
தொசாசான தும்புக்குச் சூதபற்பமாகுந்
தூய்மையாம் நிலக்குரா சத்திரக்கும்
புசாபூவம் பழத்துக்கு யெண்ணெய்க்கட்டும்
புதுப்பாலை காப்பாளும் புதுமையாமே. (132)

ஆமென்ற முட்பலா வாண்மையுண்டாம்
  அடுக்கான வைரை அரி தாரவெள்ளை
தாமென்ற தணலுக்குச் சவளையாகுந்
  தண்மையாமி சங்குக்குச் சிலேத்மம்போகும்
வேமென்ற வெள்வேலுக்கு விரணம்போகு
  மிக்ககரு வேலுக்குப் பல்லிகுறும்
காமென்ற காஞ்சிரைகாய சித்தியாகுங்
  கடியவேம் பாடலுக்குக் கனவிரணம் போமே. (133)

விரணம்போ மலையாத்தி பேதிகட்டு
  மிக்கசடைச் சிவிரியனுட விஷத்தைப்போக்கும்
காணகப் புச்சடைச்சி கண்டாவெள்ளை
  கடியதம னத்துவயக் தப்பனையாகும்
சரணமாஞ் சதகத்து கடுப்புகட்டுங்
  தனிமாஞ்ச ரோகணிக்குக் கண்புகைச்சல்போகும்
முரணமூங்கி லரிசிக்குச் சுரதோஷம்போகு
  மூங்கிலுட குருத்துக்கு ரத்தம்போமே. (134)

ரத்தமாஞ் செவ்விறகு அயச்செம்பாகும்
  நலமான செப்பாகு தங்கஞ்செம்பாகும்
கத்தமாங் கமருது கிருஷ்ணதாரங்
  கனமான வொருகொம் பிரசிதஞ்செம்பு
நித்தமாம் நீர்விளா பயித்தியம்போகும்
  நேர்கழுதை மான்புள்ளி வெள்ளியங்கட்டும்
அத்தைநே யம்மரம் அரிதாரங்கட்டு
  மழகான பொன்வண்ணச் சாலிதங்கமாமே. (135)

தங்கமாஞ்செழு மலர்க்கொன்றை புழுவகற்றும்
  கரியபெரி மலர்க்கொன்றை கிருமிபோகும்
உங்கமா மோமைக்குத் தினவுமாறு
  முயர்ந்துசிறு நீலிக்கு நரையல்போகுஞ்
செங்குருதி மாரிக்குத் துரிசிசெம்பாஞ்
  சினத்தபுளி நறளைக்குச் திமிருபோமே
பெங்கப்பேய்க் கொம்மட்டி லிங்கங்கட்டுப்
  பேரான சுண்டைக்காய் சுரங்கள்போமே. (136)



சுரமான காரெள்ளுத் திலதமாகுந்
  துடிபீத ரோகணி கண்குளிர்ச்சி
குரமான் செடிநெல்லி கெந்திசெம்பாகுங்
  குணமான சின்னருகை தயிலத்தாதி
அரமான ஆவாரை யீயச்செந்தூரி
  ஆதிகாட்டுக் கரணைக்கு கெந்திவெள்ளை
தூரமான ருதர்ந்திக்குச் சிலைதயிலமாகுந்
  துரிதமாம் அதளைக்காய் சூதஞ்சாமே. (137)

சாகுமே நரிமுருக்கை சயத்தைப்போக்குஞ்
  சமர்த்தான கிளிமுருக்கு அயச்செந்தூரம்
நேருமே நெய்த்திரைக்குக் காயசித்தி
  நேர்ந்தமஞ்சி பத்திரந்தான் காந்தஞ்செம்பாம்
நாகுமே நாய்வேளை வயத்தைக்கட்டும்
  நற்பச்சை நாபிக்குச் சூதங்கட்டும்
மாகுமே மாகாளி மயக்கம்போகு
  மகத்தான தாளிப்பனைக்குச் சலங்கள்போமே. (138)

சலமான விருத்திக்குச் சவர்காரச்சுன்னந்
  தனிவோ ரிலைத்தாமரை அழலைபோகும்
நிலமான நீர்முள்ளி வீக்கம்போக்கும்
  நிலவெள்ளை நீர்முள்ளி செம்புதருவாகும்
பலமான பாற்சொற்றி பனிச்சைபோகும்
  ப்ரியங்கப் பார்திக்குப் பாஷாணங்கட்டும்
நலமான நறுஞ்சோந்தி நாகங்கட்டும்
  நல்லாரைச் சூதவெண்மை யிறுக்கும்பாரே. (139)

இறுங்கசப்பு பசளைக்குச் சூதங்கட்டும்
  இருவேலி தாபத்தைப் போக்குவிக்கும்
பரும்பருத்தி பெரும்பாடு தனைப்போக்குவிக்கும்
  பணத்தசெம் பருத்திக்குப் பித்தம்போக்கும்
அறுமகத்தி வேக்காடு தனையகற்றும்
  அதியசக் கிரவர்த்தம் பித்தம்போகும்
தறுமறைக் கீரைதான் சுரதலுக்குக்
  கெற்பங்காளானில் நாலுவிதங் கட்டுமாமே. (140)

கட்டான வனமிட்டிச் சாரங்கட்டும்
கடியபூ சனிதனக்கு வூறல்போகும்
மட்டான கக்கரிதா னீர்ப்பெருக்கு
மகத்தான கொம்மட்டி வாதமாக்கும்
இட்டான யிருப்பிலியில் கெந்தகத்தின் றயிலம்
எளியபுட கரமூலங் கண்ணுக்காகும்
பிட்டான பிரம்புக்குச் சூலைபோகும்
பெரியமீன் கறணைக்குக் கிரந்திபோமே. (141)

கிரந்தியாங் கோழிக்குச் சிறும்போகும்
கிளுவைக்கு துஷ்டவிர ணங்கள்போகும்
அரந்தியாம் மைவிரலி லிங்கங்கட்டும்
மாண்மையாங் கவுதும்பை மூலம்போகும்
பிரந்தியாகு பிறங்குநாறி பொட்டுப்புகட்டும்
பெருஞ்செங்கத் தாரிதா னயச்செபயாகுங்
க்ரந்தியாங் கட்டுத்தீ கண்டாவெளுப்பாகுங்
கடியபுல் லூரிக்குக் கருங்குட்டம்போமே. (142)

குட்டமாந் திலகறுக்ஷங் கொட்டிசெந்தூரச்
குளிவுச்சி சிலந்தனக்கு குதிரைபல்கட்டும்
பட்டமாம் பாவட்டை வாதப்போகும்
பரிபகருங் கொடிக்குத்தான் பாஷாணங்கட்டும்
ஒட்டமாம் ஒட்டொட்டி யுறுதியாங்காயம்
உகந்தசெம் புரத்தைக்குச் சாதிலிங்கமயினம்
பெட்டமாங் கொடிக்கள்ளி பெலக்கும்பாஷாணம்
பெரியயிலைக் கள்ளிக்குப் பாஷாணஞ்சாமே. (143)

சாந்திருகு கள்ளிக்கு கெவுரிகட்டுந்
தனித்தமான் செவிகள்ளித் தாளகந்தான்மெழுகாம்
போம்பொன் னுவரைக்கு வீயசெந்தூரம்
போரான வொதிதானும் விரணமாற்றும்
ஆம்புன்னை யாகாத விரணந்தீரும்
அதிகமாஞ் சுரபுன்னை யரிதாரங்கட்டும்
நாமருறும் பிசினிக்கு நாகங்கட்டும்
நற்றிருவட் டம்பிசினிதா னறாநீர்போமே. (144)



நீரான சன்னிக்குச் சிலைதான்கட்டும்
நெடிதான வுகாய்க்குத்தா னப்புரகஞ்சத்தாம்
காரான கண்டில்வெண்ணெய் கண்பருவைப்போக்கும்
கண்சிவப்பு நெல்லுக்குக் காயமதுவழுந்தும்
நாரான நல்லரிசி நாக்குருசியாகும்
நலமான வெள்ளரிசி சீரணமாக்கும்
காரான கறுப்பரிசி கடிகள்போகுங்
கனத்தகோ தும்பைக்கு வுடலழித்கமாமே. (145)

அழுத்தமாம் அவல்தனக்கு ஆண்மையாகும்
அதியமாம் வாகுக்கு ஆண்மைகுன்னும்
திழுத்தமா தினதனக்குச் சிரமாமத்துஞ்
செழுமொச்சைப் பயருக்கு வாதமுண்டாம்
பிழுத்தமாம் பணிப்பயரு பித்தம்போகும்
பெருங்கறுப்புக் கடலைக்குக் காயசித்தாம்
பழுத்தஅணு முனுதுவரை பாங்காமேனி
பலப்படவே சித்தியாம் வுப்பைக்கட்டே. (146)

உப்புக்கட்டு.

சித்தியாம் வுப்பெடுத்துச் சிவன்தான்சொன்னார்
தேவிசொன்னாள் திருமூல நாயனார்சொன்னார்
நித்தியமா நந்திசொன்னார் மச்சர்சொன்னார்
ரிஷிபோகப் பதஞ்சலியுங் கோரக்கர்சொன்னார்
நந்தியாம் நாகாரச் சுனராம்தேவர்
கலமான சித்தர்களும் வுப்பேசொன்னார்
பெத்தியா மென்னுப்பு காலாங்கிசொல்லப்
பிசகாமல் பார்த்திட்டுப் பிதற்றினேனே. (147)

பார்த்திட்ட வுப்பேது வென்றாயானால்
பாக்குப்போல் கல்லுப்பை யுடைத்துக்கொண்டு
ஏர்த்திட்ட பழச்சாற்றில் தோய்த்துத்தோய்த்து
ஏழுநாள் ரவிதனிலே யுலரப்போட்டு
கார்த்திட்ட கட்டுகொடி சிறுகல்லூரி
கனத்தகுப்பை மேனியிலை சமனாய்ச்சேர்த்து
ஆர்த்திட்ட பழச்சாற்றி லரைத்துமைபோ
லடவாகச் சேறுபோற் குழப்பிவையே. (148)

வைத்தபின்பு முன்காயஞ் சவுட்டுப்படிமேலே
வளமான புழுகோடு வீரஞ்சினம்
வைத்தபின்பு வெள்ளையென்ற பாஷாணந்தானும்
வராகனெடை பலத்துக்கு நிறுத்துக்கொண்டு
நைத்தபின்பு நாற்சாமங் கல்வத்திட்டு
நலமான பழச்சாறு விட்டுஆட்டி
வைத்தபின்பு வுப்பின் மேலேபூசி
யுரப்பான ரவிதனிலே காயப்போடே. (149)

காய்ந்தபின்பு முன்னரைத்த குழம்பாமேலப்பி
கவசம்போல் பிடிக்கவே காயப்போடு
ஆய்ந்தபின்பு ஐந்துநாள் ரவியில்போட்டு
அபமார்க்கச் சாம்பல்தன்னைச் சட்டியிட்டு
நாய்ந்தநடு வாகவே வுப்பைவைத்து
நலமாக மேலுமந்த சாம்பலிட்டு
எய்ந்தபின்பு யெரியிட்டு நாலுசாம
மிறக்கியே ஆறவிட்டு வுப்பைவாங்கே. (150)

வாங்கியே மேற்கவசந் தள்ளிப்போட்டு
மறுபடியு மிலையரைத்து அடையாய்தட்டி
ஓங்கியே வுப்பையதின் மேலேவைத்து
வுணர்வான அடைமூடி யொக்கப்பண்ணி
தேங்கியே சீலைசெய்து ஓட்டில்வைத்து
சிறப்பான குக்கிடத்தில் புடமாய்ப்போட்டு
ஆங்கியே ஆறவிட்டு அடையைத்தள்ளி
அரைத்துமுன்போ லிலைதன்னையே கவசங்கட்டே. (151)

கட்டியே முன்போலக் கவசபுடமாய்ப்போட்டு
கவசமெல்லாந் தள்ளியே காயப்போட்டு
வெட்டியே வெள்ளையென்ற பாஷாணந்தான்
வீரமொடு வெண்மலமும் புழுகுபூரம்
கட்டியே கடலுரையுஞ் சீனங்கட்ட
கனமான மதியுப்புச் சாரந்தானும்
தட்டியே வகைவகைக்குப் பலங்கால்கூட்டி.
சம்பீரப் பஞ்சாற்று லரைத்திடாயே. (152)



## உப்புமணி.

அரைத்திட்டு நால்சாம முப்பிலப்பு
ஆண்மையா ரவிதனிலே காயப்போட்டு
கரைத்திட்ட கல்லூரிகட்டுக் கொடிமேனி
கனியவே சுட்டுநன்றாய்ச் சாம்பலாக்கி
இரைத்திட்டு யெலுமிச்சஞ் சாற்றிலரைத்து
ஏற்றமாம் வுப்புமேல் கவசங்கட்டி
பரைத்திட்டுப் பாண்டத்தில் பண்பாய்வைத்துப்
பாங்கான வோடுகொண்டு பதியமூடே. (153)

பதியவே வோடுமூடிச் சீலைசெய்து
பாங்கான குழிவெட்டி முழங்கால்மட்டும்
புதியவே பெரும்புடமாய்ப் போட்டெடுத்து
போராக வெடுத்துப்பார் வெளுப்பாய்க்காணும்
கதியவே கரியில்வைத்து வுருக்கிப்பாரு
கண்விட்டு ஆடுமே பொன்போல்தானும்
எதியவே யிந்தவுப்புக் கொப்பேதென்று
லென்தாயார் மனோன்மணிக்கு யிணையுமாமே. (154)

மணியான வுப்பெடுத்து வுருக்கிப்பாரு
மாசற்ற பொன்போலே கண்விட்டாடும்
துணியான சூதத்தின் மணியோவென்பார்
சுப்பிரமாம் வீரத்தின் மணியோவென்பார்
வணியான வயிரத்தின் மணியோவென்பார்
மாசற்ற முத்தினுட மணியோவென்பார்
கணியான கமலினியின் மணியோவென்பார்
காரணமாஞ் சித்தர்கள்தான் மயங்குவாரே. (155)

மயங்கியதோர் வுப்பதின் றுருகும்போது
மாட்டுநீ நாலுக்கு ஒன்றுதங்கம்
தயங்கியதோர் தங்கவெடை நாகம்போடு
தன்னுகத் திடைபோடு சூதந்தானும்
தியங்கியதோர் சூதவெடை கெந்திபோடு
சிலையதுவுந் தாளகமுங் கெந்தியிடைபோடு
தயங்கியதோ ரெடுத்துடனே களங்குமாகும்
காட்டிடவே யொருநூற்றுக் கொன்றுதானே. (156)

ஒருநூற்றுக் கொன்றிடவே லோகந்தானும்
உத்தமனே மாற்றதுவும் பத்துப்பத்து
கருநூற்றுக் களங்கத்தைக் கல்வத்திட்டு
கனநாகச் செயநீரைக் குத்தியாட்டி
திருநூற்று வில்லைபண்ணிச் செப்பிலிட்டுச்
சீலைசெய் துருக்கிடமாய்ப் புடத்தைப்போட
அருதுயநீ யருணன்போல் சிவந்துகாணும்
ஆயிரத்துக் கொன்றிடவே யேமமாமே. (157)

ஒண்ணன செந்தூரங் குன்றியுண்ணை
வுத்தமனே சிலைபோலத் தேகமாகும்
விண்ணன கேசரியாம் யோகத்தைக்காட்டும்
வேதாந்த பாலையைத்தான் நித்தம்பூசி
உண்ணன மதுவையுண்டு வாசிபூட்டு
வுட்கருவி புறக்கருவி தெரிந்துபோகும்
குண்ணன மலைபோலக் கைகளாகுங்
கோடியுகஞ் சமாதியிலே யிருக்கலாமே. (158)

உப்புகுரு.

இருக்கலாம் வுப்பினுட குருவைக்கேளு
எற்றமாய்க் கட்டியதோ ருப்பைவாங்கி
அருக்கலாம் வீரமொடு பூரஞ்சீனம்
ஆண்மையாம் புழுகோடு வுரமும்வெள்ளை
வருக்கலாம் வராகனெடை தூக்கிக்கொண்டு
மாசற்ற பழச்சாற்றா லரைத்துமைபோல்
நருக்கலாம் ரவிதனிலே காயப்போட்டு
நாலுநாள் காய்ந்தபின்பு நாட்டங்கேளே. (159)

நாட்டமாம் நாயுருவி வாகைகாயும்
நலத்தசிறு கல்லூரி குப்பைமேனி
காட்டமாங் கட்டுகொடி ஐந்துங்கேளு
கணக்காகச் சமனாக நிறுத்துலர்த்தி
[illegible]மா முலரவைத்துச் சுட்டசாம்பல்
உகமான அயச்சட்டிக் குள்ளேயிட்டு
காட்டமாங் கட்டியதோ ருப்பைவைத்துக்
கணக்காக ஆறுசாமம் வறுத்திடாயே. (160)



வறுத்திடவே வுப்பது சங்குபோலா
மாசற்ற வெள்ளையாய்க் குருவுமாகும்
முறுத்திடவே முன்சொன்ன மூலிகைக்கு
மூட்டவே சரக்கெல்லாஞ் சொன்னபடிகட்டும்
நறுத்திடவே யுப்பில்லா மூலிகைகளெல்லாம்
நாய்கடித்த வெள்ளெலும்பாய் நலங்கிப்போகுந்
தறுத்திடவே மூலிகை லுப்புயிட்டால்
சண்ணுமே லோகத்தி கவுனசித்திதானே. (161)

தானென்ற வுப்புக்கு வழலைநேராஞ்
சத்துக்குங் குருவுக்கும் உப்புவேண்டும்
வேனென்ற கட்டினத்துக் குப்புவேண்டும்
வேதைக்கும் புடத்துக்கும் உப்புவேண்டும்
கானென்ற களங்குக்கு வுப்புவேண்டும்
கிராவணமுந் தயிலத்துக் குப்புவேண்டும்
தேனென்ற செந்தூரத் துப்புவேண்டுந்
தேகசித்தி காயசித்தி யுப்புதானே. (162)

உப்பைவிட்டு வாதத்தைப் பார்த்தானால்
உதையப்பா வால்மேலே தோஷமில்லை
கப்பையிட காயத்துக் குயிரேவுப்பு
கவனசித்தி குளிகைசித்தி காயசித்தி
உப்புவெப்பை யிடக்கார சாரத்துக்குப்பு
வேதையா மூலிகைக்கு முயிரேயுப்பு
வப்பையிட்ட கட்டிதோ ருப்புனாலே
வாதசித்தி வசியசித்தி யெல்லாமாமே. (163)

ஆமென்ற வுப்பையல்லோ திருமூலநாய
ராடியே எழுபழுதான் யுகமும்பார்த்து
நாமென்ற காலாங்கி நாயருக்குச்சொன்னார்
காலாங்கி நாயனார் கடாக்ஷம்வைத்து
பாமென்ற பக்குவம்பார்த் தெனக்குச்சொன்னார்
பராபரையி னருளாலே பார்த்துத்தேறி
ஏமென்ற யெழுகோடி யுகந்தான்பார்த்து
இணையில்லா தெழுதினே னிகண்டில்தானே. (164)

தானென்ற வுப்படங்கி கட்டினக்கால்
சமரசமாய் வாதமொடு காதியாகும்
வானென்ற சூதமது மணிபோலாகு
மகத்தான கெவுனவழி யோடலாகும்.
தேனென்ற சிவகாமி சிவனும்வந்து
தியானத்தில் கடாட்சித்துச் சொல்வார்தாமே
மூனென்ற மூலிகையால் சொன்னதெல்லாஞ்
சித்திமூல குஞ்சஞ்சரித்துத் திரியலாமே. (165)

திரியவே யண்டரண் டங்களெல்லாஞ்
சிந்தாக வேண்டுமென்று லுப்பைக்கட்டு
திரியவே யுப்பென்றால்வாய்க் கெளிதோமக்காள்
செகமெல்லா மோர்மணிக்கு விலைகாணது
திரியவே செகச்சாலம் வெளியாய்போகுந்
தேகமது வுகந்தவரை யிருக்கலாகும்
திரியவே கற்பங்க ளுண்ணச்சித்தி
சிவயோக சாரமெல்லாந் தெரிந்துபோமே. (166)

தெரித்திடவே காரசாரப் பேச்சைச்சொன்னேன்
திறமான பாஷாணப் பேரைச்சொன்னேன்
உரித்திடவே யுபரசத்தின் பிரிவைச்சொன்னேன்
உத்தமாங் கடைச்சரக்கி னுண்மைசொன்னேன்
முரிந்திடவே மூலிகையின் பேரையெல்லா
முத்துபோல் பொருக்கியே முறைமைசொன்னேன்
பரிந்திடவே பூர்வனமும் பரப்பினமும்பேரை
பாடுகிறேன் வெளியாகப் பண்பாய்க்கேளே. (167)

யானையின்பெயர்.

ஆனையுடப் பெயர்தனையே அறியக்கேளு
அத்தியாங் கெசமாகும் நாகமாகும்
ஈனையிப்பேர் பத்திர கிரிபுமாகு
மெழிலான வாரணங் குஞ்சரமாகும்
தானையாந் தந்தியாம் மத்தங்கபுஷ்பி
தலையருவி தூக்கிய களிறுமாகும்
வேனையாம் வேழமா மிருள்மருப்பு
வெண்டலை யுருட்டியிடு மானையாமே. (168)



குதிரையின்பெயர்.

குதிரையுட பெயர்தனையே கூறக்கேளு
கோடகா துரகமாம் வாசியாகுஞ்
சதிரையாஞ் சாலிஹொத்திரா வல்லியாகுஞ்
சகவலி வத்திறிகெந் தருவமாகும்
அதிரையால் ஆய்வாகம் புரவியாகும்
அனேசயம் பரியிவுளிகு ரகதமாகுந்
குதிரையாந் துகள்வாரி சிறுகுளம்பு
சடுசரந் துரக்கின்ற குதிரைப்பேரே. (169)

ஒட்டகத்தின் பெயர்.

ஒட்டகத்தின் பெயர்தனையே யுரைக்கக்கேளு
ஆவ்ஷ்டிரமா மென்றகோ நூமிரமாகும்
கட்டகங் குபேரதி நீர்க்கபாகுங்
கணத்துவியாகுங் குஞ்சவனுத் தச்சமாகும்
வட்டகந்தீ விசிறிவாதரோ மிர்தமாகு
மகத்தான கூனன்றன் முதுகுமாகும்
பட்டகம் பாழிபாய் மீறுமாகும்
பாடியதோ ரொட்டகத்தின் பண்புமாமே. (170)

கழுதையின்பெயர்.

கழுதையுடப் பேர்தனையே கருதக்கேளு
கத்தபம் சம்புகர ணசகமாகும்
பழுதையாம் பிராலேயோ ராசபாகரமாம்
புகழான பாரவா மார்க்கமாகும்
மெழுதைமே தாசரோரெண் பூசிதமாம்
இரடான மிட்சகா சிறிங்கிசியாகுஞ்
சிழுதையாஞ் சியாகிருஷ்ண தவத்தானமாகுந்
தேசியாங் கட்டுண்ணுக் கழுதையாமே. (171)

சிங்கத்தின் பெயர்.

சிங்கத்தின் பெயர்தனையே செப்பக்கேளு
சிங்கபஞ்சா யுத்திரத்தக் கிரவியா
பங்கசா நநோ யரியுமாகும்
பாங்கான கேசரி மிருகராசஞ்

சங்கமாஞ் சவிக்கிராங் தாசுவேத
 பிங்களமாந் தஞ்சான காதமாமுடங்குவளையுமாகும்
மங்கமா மடங்கலேதிற் றசியமாகும்
 காதனு காண்டிரவஞ் சிங்கப்பேரே. (172)

ரிஷபத்தின் பெயர்

ரிஷபத்தின் பெயர்தனையே செப்பக்கேளு
 ரிஷபமாம் விடையெருது கோபதியாகுந்
திஷபமாந் திடமுரிபுங் கலஞ்சேபுல்லஞ்
 சிதாங்கமாஞ் சாருவோ கனமுமாகுஞ்
சுஷபமாஞ் சுவர்னபிறஷ் டச்சமாகுஞ்
 சுகசிவ பாரிஷேவி யாய்சாராகுங்
குஷபமாங் கவ்வியே குத்துமானருகுங்
 கொம்பான மிருககோப ரிஷபமாமே. (173)

மானின் பெயர்.

மானினுட பேர்தனையே வகுக்கக்கேளு
 மகாசுவர்னப் பிற்சயி ஞங்கமாகும்
தானை சாருலோசன் சமிரமாகுஞ்
 சாரங்க நெடுங்கோட்டுக் கலைப்புல்வாயாம்
நானை நவ்வியாமகன் றாட்டுங்கவரி
 நாகினம் பிறைதவழு மயிர்க்கற்றைக்கவரி
ஈனை யிருபுற முருக்குகின்ற
 மருப்புயிணை வுழையதடபுள்ளி தாங்குமானமே. (174)

ஆட்டுக்கடாவின் பெயர்.

ஆட்டுக்கடாப் பெயர்தனையே யறியக்கேளு
 அசாதகா சாகலோபல ரோசசாகி
சாட்டான சல்லாத்தத் திரிகாலாஞ்
 சாகரஞ் சாகளமான் பசுபமாகும்
தாட்டான அசோலிறுகச் சாகலைச்சஞ்
 சாகியா மலப்பகர ணச்சமாகும்
வேட்டான வேள்விப்பிர சங்கியாகு
 மிடுக்கான ஆட்டுக்கடாய் விபரமாமே. (175)



தகரின் பெயர்.

தகரினுட பேர்தனையே சாற்றக்கேளு
 சமர்த்தாண யிடோவரமே டோரவாகும்
குகரினுட கோமந்த கருணுவாகுங்
 கொடிதான தருணத்தா சலிலோவாகும்
லகுருனுட வத்துதாதே லேட்கமாகு
 மற்றகடப் பிறத்ததூக் கணமுமாகுந்
திகுருனுட செயலரி மிரட்டோவாகுஞ்
 செப்பியதோர் தகருட சீருமாமே. (176)

பன்றியின் பெயர்.

பண்ணியுடப் பெயர்தனையே பகரக்கேளு
 பரிதான கருமாவே யெறுழிகேழல்
வண்ணியாஞ் சூகரம்வக் கிரதடமாகும்
 வராகமாம் ரோமச காரியுமாகும்
குண்ணியாக் கோலமாங் குரோடங்கணி
 கிரீட்டியாம் போத்திகிரி அரிகிடம்போர்த்
தண்ணிதந் தாயுதங்குரோ டாவியாகுந்
 தக்கந்தோ பகுப்பிரசா பன்றிப்பேரே (177)

நாயின் பெயர்.

நாயினுடப் பேர்தனையே நவிலக்கேளு
 நஞுகியாஞ் சாரமே யச்சமாகும்
சுயான பீஷ்ணசூ காமுமாகுஞ்
 சூரனேர் யாசுணங் கோரப்பல்லூகம்
ராயான ராத்திரிசா காமுமாகும்
 ரவுத்திரி பரமயோ காசியாகும்
சுயான சுணங்கமாஞ் சுக்கலாகும்
 துஷ்டமாம் விருகமாம் நாயின்பேரே. (178)

நரியின் பெயர்.

நரியினுட பெயர்தனையே நவிலக்கேளு
 நத்தமறி சிறிகால சம்புவாகும்
குரியான கோகுரோஷ்டிரங்கோ மாயுங்கமாகும்
 கோமாயி கலனசம் பூகமாகும்

பரியான பல்லாதோ மிருதாரத்தம்
பாவியாங் குலோதந்தி தரிடகமாகும்
புரியான பூரியான் மாயுக்குரோட்டா
போதமை நரியினுட பேருமாமே. (179)

குரங்கின் பெயர்.

குரங்கினுடப் பேர்தனையே கூறக்கேளு
கூவமாங் கரியகுரங் கூகமாகும்
வரங்கான மர்க்கடோ வானரோமேஷா
மகத்தான அரிசாகா மிருக்காபியாகும்
பிரங்கான பில்லங்கமோ வனவுகட்க
பிலவகமில் வகாராதி பித்துங்கூல
மரங்கான மகவோடு வழங்குமந்தி
வானரஞ் செம்முகங் குரங்குமாமே. (180)

ஒணானின் பெயர்.

ஒணானின் பேர்தனையே யுரைக்கக்கேளு
வுணர்த்தலான் சிறுகலான் சோதாத்த
ஆணான அல்லனேதச் சகண்டகமாம
அழுத்தமாஞ் சரடோவாப குருபச்சம்
பிணானபிறஞ் சூரியாச லிருமத்தலம்
பிறகான மாதோஷ வுற்பத்தியாகு
மாணான மாதோஷ வுற்பத்தியாகு
மாசான வோணானின் மார்க்கமாமே. (181)

வல்லூரியின் பெயர்.

வல்லூரின் பேர்தனையே வகுக்கக்கேளு
மகத்தான பலசாலி பட்சிசத்துரு
கொல்லூரு புகுந்தானி சித்திரபிரட்டாசங்
கூரான தரித்திரிதான் டச்சமாகும்
கல்லூரு காலம்பு புஷ்பபெகவாகுங்
கனமான வியாகிரசசி யேளியாகும்
கில்லூருகிறுத் திராச்சபுத்த கிருதுவாகும்
கெடியான வல்லூரி கீர்த்தியாமே. (182)



கெருடன் பெயர்.

கெருடனுட பேர்தனையே கிறக்கேளு
கெடியான சற்பத்தின் சத்துருவாகும்
வருடனுஞ் சுபாணுட்சியோ வயினதேயன்
மகத்தான கேசுர பட்சிராசன்
தருடனுஞ் சாலமலி நகத்ததாவாஞ்
சமர்த்தான மிருதுஅரோ மேருவின்னம்
புருடனும் புண்டரிக தீட்சணதண்டீரா
பிறகோர தெரிசனுங் கலுழனுமே. (183)

செம்போத்தின் பெயர்.

செய்போத்தின் பேர்தனையே செப்பக்கேளு
சிவத்தகண் ணன்புதை வாசிதானுங்
கம்போத்து தவந்தகடையோன் சண்டாளன்
நரந்தசெம் மேனியன்கவந்த சிறகோன்தான்
பம்போத்து பரிமந்தா அக்கிரகோரன்
பயந்தரத சங்குத்திரன் தாந்தமாகும்
விம்போத்து விருஷிபோர்கே வலியகுத்துமான்
மிடுக்கான செம்போத்து மேன்மையாமே. (184)

மயிலின் பெயர்.

மயிலினுட பெயர்தனையே வகுக்கக்கேளு
மயூரமாங் கோபருகி நீலகண்டங்
தயிலினுட சங்கரன்மகன் குமாரன்
தானேறும் வாகனமாஞ் சற்பத்து
தியிலினுட சிகித்துவச மேகநாதன்
சிகண்டியாங் திறபுபிச் சகமுமாகும்
நயிலினுட நற்றஞ்சு வர்ணத்தோனும்
நர்த்தகோ மயிலினுட நாமமாமே. (185)

கிளியின் பெயர்.

கிளியினுட பேர்தனையே கிறக்கேளு
கீர்த்தின சுத்திகரோ ருகதுண்டாகு
மிளிப்பிள்ளை மேதாவி பிறியதெரிசினமா
மின்ன யாகாரச்சு பத்திரோவாம்

75033

அளிப்பிள்ளை யாடகக்கின் னைத்தமுதூட்டு
அழகான சிவந்தநிற மூக்கியாகுஞ்
சுளிப்பிள்ளை மழலைச்சொல் சுகதுண்டமாகுஞ்
சொன்னத்தைச் சொல்லுங்கிளிப் பிள்ளையாமே. (186)

### நாணுவானின் பெயர்.

நாணுவான் பேர்தனையே நவிலக்கேளு
நாகரிகமானதோர் கெவுரி யிரகாவாங்
கோணுவான் கோபிகாச கவுரியாகுங்
குறியான காகல்அப் பிரியாவாகும்
நீணுவா னிசாரிமே ஷாதியாகும்
நீக்கான காசியதூதிகாப் பிறியாவாம்
பாணுவான் பாதினி பாஷியாகும்
பகரமாம் நாணுவான் பாம்புமாமே. (187)

### சக்கரவாகத்தின் பெயர்.

சக்கிரதாகப் பெயரைச் சாற்றக்கேளு
சக்கிரவா கத்துசர்கி ராங்கோவாகுங்
தக்கிரமாஞ் சக்கிரார தாரதியாகுஞ்
சலுவான நாதாங்காணு மாதியாகுங்
குக்கிரமாங் கோகரமி சக்கிரோதமாகுங்
குடிலமா மகாபில சாலியாகும்
பக்கிரமாம் பராக்கிரம மதிரியாகுன்
பாடியதோர் சக்கிரவாகப் பேருமாமே. (188)

### அன்னத்தின் பெயர்.

அன்னத்தின் பேர்தனையே யறையக்கேளு
அஞ்சகமாங் அஞ்சம்பா பீதமாகும்
நன்னமா மரத்தபர தோயமாகும்
ராசவங் கசமான தாத்திராஷ்டிரஞ்
சின்னமாஞ் சிறையன்னஞ் சிவலோகத்தன்னஞ்
செழுமுளரி போகுட்டி லன்னமாகும்
புன்னபூ வன்னம் புனலிலன்னம்
புலப்புகிற வன்னமாம் அன்னப்பாரே. (189)



### காக்காயின் பெயர்.

காக்கையின். பெயர்தனையே கருதக்கேளு
காகோதம் வாயசோ தரகோஙிஷ்டம்
வைதையாம் வுலூரசிது வாங்கஷாவாமும்
உண்மையாம் பலிபுத்திர சீவிசமாகும்
நீக்கைதூ தேசங்கே நிமித்திகிருவாகும்
நியம்பட்சி பறையனு மங்சனதரனைகஞ்
சாக்கைசனி வாகனனண் தனத்தருமுகில்தானுஞ்
சாங்கமாங் காக்கையின் றன்பேராமே. (190)

### கோழியின் பெயர்.

கோழியுடன் பெயர்தனையே கூறக்கேளு
குக்குடமாங் தாமிர சூட்சமாகுர்
தாமியுட சங்காச்சங் ணயுதமாகும்
நடச்சவுண் டோரதங்ஷ கிரியுமாங்
கூழியுரு ஞகுபகோ யோதியாகுங்
கூவலாம் வாரணம் ஞானியாகும்
ஆழியுட வாசனைக்கு யேற்றவனுமாகும்
அறுமுகக் கொடியோனுகும் கோழியாமே. (191)

### ஆந்தையின் பெயர்.

ஆந்தையுட பேர்தனையே அறியக்கேளு
அழகான பொற்கண்ணு மிருடியாகுங்
கேந்தையாங் கின்னரிமங் கலைகூனுகுங்
கெடிசனு கச்சத்த சாலிசமாகுங்
காங்தையாங் கவுசிகப் புரவிவாதங்
கச்சுமிர தங்காச் சத்துரவுமாகுஞ்
சாங்தையாஞ் சதரபீம சீவயமாகுஞ்
சண்டாள ஆந்தைப்பேர் சாற்றலாமே. (192)

### குயிலின் பெயர்.

குயிலினுட பேர்தனையே கூறக்கேளு
கோகிலங் காபிறஷ் டிச்சமாகும்
கயிலினுட கலாபங் காலகண்டங்
கதத்தா வசந்தூ தித்தாவாகும்

பயிலினுட பாபூத பித்தத்தாவாம்
பாங்கான மிடைகேர கெந்தருவாகும்
வயிலிவன் பூஷண மழலைவாயாகு
மலர்சோலை குயிலினுட வண்மையாமே. (193)

காட்டுப்புறுவின் பெயர்.

காட்டுப்புறுப் பெயர்தன்னையே கருதக்கேளு
கனகபாராவதஞ் சக்கர நேத்திரம்
நீட்டான நீலாங்கக் கபோதமாகும்
நேரான உருக்கினங் கிரசுவாகு
மீட்டான ரோகசுவாது மிருதுவாகுங்
மிகுந்தகண்ட மாமது கப்பியாகும்
பாட்டான பண்டாகும் பாலினியாகும்
பரியாகுங் காட்டுப்புறுப் பண்புமாமே (194)

வீட்டுப்புறுவின் பெயர்.

வீட்டுப்புறுப் பேர்தன்னையே விளம்பக்கேளு
மிக்கான கோபுர வாசியாகும்
பாட்டான பகரமாஞ் சிறிக்கியாகும்
பரிவான குருக்காதி யுருக்கியாகும்
நாட்டான நடைச்சியாம் பராக்கிரமியாகும்
நலத்தஞ்சு வர்ணத்திகபோ தொனியாகுந்
தூட்டான தூதியத்துச் சுகந்தோவாகுஞ்
சுலேதோ யுகச்சச்சம் வீட்டுப்புறுவாமே. (195)

தாராவின் பெயர்.

தாராவின் பெயர்தன்னையே சாற்றக்கேளு
சாய்ந்தன்ன நடைச்சியாஞ் சாயலாகும்
ஆராவி னழகுள்ள பேடையாகும்
ஆழமாங் குளந்தன்னி லாடுங்கன்னி
பாராவின் பன்னகச் சிறிக்கியாகும்
பருந்தைத தின்பவள்தான் பாங்கியாகுங்
கூராவின் குட்டன்ன பெடைச்சியாகுங்
கொடுமெஞ்சள் மூக்கிதான் தாராப்பேரே. (196)



ஊர்க்குருவியின் பெயர்.

ஊர்க்குருவிப் பேர்தன்னையே யுரைக்கக்கேளு
ஊனுன காயத்தை வலுமேத்தாக்கி
பார்க்குருவி பட்டணத்தில் வாசியாகும்
படவையாஞ் சிறிக்கிதான் பாசக்காரி
கார்க்குருவி கட்டளைக் குந்தியாகுங்
கடுங்கிரக வாசினி கடிச்சியாகும்
ஆர்க்குருவி அட்டணைச் சீவனாகும்
அடைக்கலக் குருவியூர்க் குருவியாமே. (197;

அளுங்கின் பெயர்.

அளுங்கினிடப் பேர்தன்னையே யறியக்கேளு
ஆனையுடன் போராடி யதிரக்கொல்லி
சிளுங்குனிட சில்லுப்போல் சேடத்தியாகுஞ்
சிறுமலையில் வாசியாந் தீர்த்தியாகு
மளுங்குனுட மல்லுப்போல் சுகுளியாகு
மாட்டினே னருத்தின்னியாம் வச்சிரதேகி
களுங்குனுட கல்லுப்போல் புதச்சியாகுங்
கமசான சதிரத்திய னுங்குமாமே. (197)

உடும்பின் பெயர்.

உடும்பினுட பேர்தன்னையே யுரைக்கக்கேளு
யுறுதியாங் காயத்துக் குரமுமானேன்
படும்புனுட வானகச் சூலியாகு
மலையிருக்குங் காட்டான மார்க்கியாகுங்
கடும்புனுட கானகக் குன்றில்ராசா
கடுங்குகை வாசினி கபோதியாகும்
உடும்பான வுன்னகச் சத்தியாகும்
உயர்ந்தவளை தானிருக்கு முடும்புமாமே. (199)

முதலையின் பெயர்.

முதலையுட பேர்தன்னையே மொழியக்கேளு
மூர்க்கமா மடுவுள்நா யகினியாகு
மதனையாங் கரிமாலாங் கியானியாகுங்
வச்சிர தகரில்தண் டிரசிதானுஞ்

சிவளையாஞ் சிவபட் சணியுமாகுஞ்
செலவாசி யிரவில் மலந்தின்னிதானும்
நதளையாம் நாயகி நகிரியர்கும்
நலமான முதளையி னுமைமாமே. (200)

ஆமையின் பெயர்.

ஆமையுடப் பேர்தன்னையே யறியக்கேளு
அழகான கச்சபம் நியமகாவாகும்
காமையாம் ரசப்பிரதி விடயமாகும்
நலமான கூர்மமாம் வட்டசக்கிரி
காமையாங் கடலுக்குள் சிறிக்கியாகுங்
காரணமா முடலுக்குள் தியானியாகும்
ஊமையா மொருகொடிக்குள் ளோங்கி யாகும்
உத்தமமாம் யோகிதா னுமைப்பேரே. (201)

கல்லாமையின் பெயர்.

கல்லாமையின் பேர்தன்னையே கருதக்கேளு
கலக்குகை தாமோதரன் கரியவர்ணன்
பல்லாமை பஞ்சவரி யாவர்ணத்தோன்
பாங்கான வுருண்டதோர் வடிவனுகும்
நல்லாமை நாயகன் சக்கரனுகும்
நலமான காங்கயன் கடுங்கூர்மனுகுஞ்
சுல்லாமை கரடகன் துரிசு கூர்மன்
சுயம்பான கல்லாமைப் பேருமாமே. (202)

கட்டெறும்பின் பெயர்.

கட்டெறும்பின் பேர்தன்னையே கருதக்கேளு
கடுக்கும்கடு மணியாகுங் கடுத்தவானும்
முட்டெறும்பு முடுகிய நடையோனுகு
முனையாகு மருவிய சிறியோனுகும்
மட்டெறும்பு மாபில முள்ளவானும்
மாபுக நகுவுரியன் சுரையானுகுந்
தட்டெறும்பு தன்னிடத்தில் திலத்தன்மையானேன்
தன்சாந்தனுங் கட்டெறும்பின் றன்மையானே. (203)



பூநாகத்தின் பெயர்.

பூநாகப் பேர்தன்னையே பொருந்தக்கேளு
பூமியி னரம்புமாம் புத்துக்குள்பார்த்து
சாநாகஞ் சஞ்சீவி தானுமாகுந்
தனித்தகடு நாகத்துக்கி ரையுமாகுந்
தூநாகஞ் சுடர்கோம சுரும்பியாகுஞ்
சொல்லான பூமிக்குள் நாதமாகு
மீநாகம் பிருத்தசஞ் சீவனியுமாகு
மிடுக்கான பூநாகமேன்மையாமே. (204)

இந்திரகோபத்தின் பெயர்.

இந்திரகோ பப்பெயரை யியம்பக்கேளு
எழிலான மேகத்தின் விந்துவாகுந்
தந்திரமா மன்னனுட நாதமாகுந்
தாக்கான யிடியினுட துளியுமாகும்
அந்திரமாம் அயிராணி ருதுவுமாகும்
அட்சயமாம் பாகத்தி னருத்தலாகும்
சந்திரமாஞ் சஞ்சீவி சதரியாகுந்
தனுக்காக யிந்திரகோ பப்பேராமே. (205)

கருநாகத்தின் பெயர்.

காருநாகப் பேர்தன்னையே கருதக்கேளு
கார்க்கோடன் சங்கனுங் குளிகனுகுந்
திருநாகஞ் சிவன்கைக்குக் கங்கணமாகுஞ்
செயமான அனந்தனும் பாந்தாவாகும்
விருநாகம் விஷ்ணுவுக்கு மெத்தையாக்கும்
விளக்கமாம் பூமிக்கு வுறுதியாகும்
பருநாகம் பத்மனு வாசுகியாகும்
பகர்த்தகன் கருநாகப் பண்புமாமே. (206)

பாம்பின் பெயர்.

பாம்பினுடப் பேர்தன்னையே பகரக்கேளு
பந்தளாரு சர்பதஷ்ட பிரானுறசங்கோ
தாம்பினுட சங்கோத சரிசிற்பமாகுந்
தகனியாம் வுரக்கஞ் சணியுமாகும்

வீம்பினுட வியாமத்து விசிங்கோதகமாகும்
வேந்தனும் புஜங்கம்ம வீரியாகும்
நாம்பினுட கடைபுரட்டி தீயுதிர்க்கும்
நஞ்சுழலும் பாம்பினுட நாமமாமே. (207)

நாகப்பாம்பின் பெயர்.

நாகப்பாம் பின்பெயரை நவிலக்கேளு
ரத்தினமாஞ் செநாகோவி ஷதரிவாகும்
பாகமாங் குண்டலிபன் னகப்பாணியாம்
பரியசட்சு சிரவோதத்த ரூம்காவாகும்
பூகமாம் போகிசாத விஷமுமாகும்
பொரியரவம் பணைவிவி சும்பனக்குமால்
மாகம்ப மணிக்கைவெயில் விரிபணை
மகாமணியின் ருழ்ந்தமா நாகமாமே. (208)

சர்ப்பத்தின் பெயர்.

சற்பத்தின் பெயர்தனையே சாற்றக்கேளு
சர்பமாந் தவவஷ்டிரோலாம்புசக் காகியாகுஞ்
சிற்பத்தின் 'சிங்குவா' திறகப்பி
விட்டிககாஞ் சீறியதந்தஞ் சூகோபோகிபாகி
உற்பத்தி னுர்க்கமாங் கஞ்சுகிவியாளோ
சங்கமம் விஷநாகோ குண்டலியா
மற்பத்தின் மண்டுலு சாக்கோ
புனையாமா சாளபூதி சூரியபற்பமாமே. (209)

மிருகத்தொகுப்பின் குணம்.

ஆமப்பா நடப்பினமூர் வனமுஞ்சொன்னேன்
அழகான பற்பத்தி னுண்மைசொன்னேன்
தோமப்பா தொகுப்புப்பேர் சொல்லக்கேளு
சொல்லரிய யானையொடு குதிரையொட்டை
காமப்பா கழுதைசிங்கம் ரிஷபமானுங்
கதித்ததோ ராட்டுக்கடா வெள்ளிடுபன்றி
நாமப்பா நாய்நரி குரங்குடனன்
நற்கருடன் செம்போத்து மயிலுமாமே. (210)



மயிலோடு கிளிப்பிள்ளை நாணுவானை
மகாசக்கிர வாகஅன்னங் காக்காய்கோழி
அயிலோடு ஆந்தைகுயில் காட்டுப்புறவாகும்
அழகான வீட்டுப்புறுதா னூர்க்குருவி
உயிலோடு அளுங்குடும்பு முதலையாமே
உண்மைக்கல் லாமைகட் டெறும்புநாகம்
இயிலோடு யிந்திரகோபம் பூச்சிகருநாகம்
எழில்பாம்பு நாகமாஞ் சற்பமாமே. (211)

ஆம்யானைத் தந்தமது வெடியுப்புக்கட்டும்
அதியமரிக் குளம்புக்கு அயமுயீயம்
ஓமஒட்டை யிச்சுதனில் கெந்தகந்தான்
மெழுகாம்உறக்கழுதை யமுரிதனில்தாது சுத்தியாகும்
தேமசிங்கு மஸ்திதனில் செயசூதமாகுஞ்
சினரிஷப் பிச்சுதனில் சாதிலிங்கமயினமாம்
மானின்கொம் புதனில் தோஷம்போகு
மரியாட்டுக் கடாப்பிச்சில் மயினமாமே. (212)

மரியவெள் ளாட்டமுரி மகோதரம்போகு
மகாபன்றிக் குட்டிதனில் சூதங்கட்டும்
நரிநாய்கள் முதலைதனில் நாகங்கட்டும்
நரியினுட மாங்கிஷத்தி லீயங்கட்டும்
குரியகுட் பிச்சலத்தில் தங்கநீறும்
கொடியவோ ணான்பிச்சி லீடுமாகும்
கெரியகெரு டன்முட்டை ரசத்தைகட்டும்
கெடியான செம்போத்துரச மயினமாமே (213)

மயினமா மயில்நெய்யால் கெந்திசிவப்பாகு
மகத்தான கிளியிறகிலீய முருகியாடும்
மயினமாம் நாணுவானை முட்டையினில்தயிலம்
நற்சக்கிர வாகமது நாகங்கட்டும்
அயினமாம் அன்னத்தில் கவனமாங்குளிகை
அருங்காக்காய் முட்டைதனில் கெந்திகட்டுங்
குயினமாங் கோழிமுட்டை சரக்கெல்லாஞ்சுன்னங்
கொடியாந்தை பாதாளத் திலதமாமே. (214

திலதமாங் குயில்முட்டை பாஷாணஞ்சிவக்கும்.
　செயநாட்டுப் புருவெச்சம் குருவுக்காதி
விலதமாம் வீட்டுப்புரு வெளுப்பாகுஞ்
　சத்துமிகத் தாராமுட்டைக்கண் துலக்கமாகும்
உலதமா மூர்க்குருவி தம்பனையாகு
　முணர்வான அளுங்குக்குள் சூதங்கட்டும்
பலதமா முடும்புநெய்யில் பாஷாணங்கட்டும்
　பாரமா முதலைநெய்யால்பா லரசமாமே. (215)

பாலமா மாமைக்குள் சூதங்கட்டும்
　பாங்கான கல்லாமை நாகங்கட்டும்
காலமாங் கட்டெறும்பு விஷத்தைதீர்க்கும்
　கடியபு நாகத்தி லீயங்கட்டும்
ஈலமா மித்திரகோபங் தங்கஞ்செம்பா
　மெழிலான கருநாகஞ் சவளைமெழுகாம்
தாலமாம் பாம்புக்குள் தாளகந்தான்கட்டும்
　சற்பமாம் நாகப்பாம்பு சன்னியாமே. (216)

வசியா மிருகத்தின் பேருசொன்னேன்
　மகத்தான பறப்பினமு மூர்வனமுஞ்சொன்னேன்
பிசியமாம் யோதனைப் பிரித்துச்சொன்னேன்
　பெருமையாம் பலாபலத்தைப் பிரித்துச்சொன்னேன்
குசியமாம் நாகரச கெந்தியுடகுருவை
　கூறவே குழந்தைகட்குங் குறிகள்காண
பசியவே பராபரத்தா யாண்மையாலே
　பண்பான குருவதனைப் பரிந்துகேளே. (217)

சாரசெய நீர்.

பரிவான நாகமது பலந்தானெட்டு
　பாங்காக யிலுப்பைநெய் யுருக்கிக்கொண்டு
கரிவான கல்லுருசாம்பல் பலம்நாலு
　கனத்தஅண்டத் தோல்சுன்னம் பலமும்நாலு
பிரிவான புளிப்பாலு சாம்பல்பலம்நாலு
　பேர்மூனறு யெடைக்கெடைக்குச் சாரஞ்சேர்த்து
அரிவாக வறுசாமம் பழச்சாற்றிலரைத்து
　அபமார்க்கச் சாம்பல்வைத்து யெரித்திடாயே. (218)



எரித்திட்டுப் பீங்கானில் பனியில்வைக்க
　எத்தமிட்ட ஆறபோல் செயநீராகும்
விரித்திட்ட செயநீரில் வீரம்பூரம்
　வெள்ளையென்ற பாஷாணம் விராகனெடைதூக்கி
அரைத்திட்ட செயநீரா லரைத்துமைபோல்
　ஆண்மையாம் நீரதனில் கலக்கிக்கொண்டு
நரித்திட்ட நாகத்தை யுருக்கிச்சாய்த்து
　நலமாக மூவேழு திறமுங்காணே. (219)

நாகரச கெந்தகக் குரு.

திறமான நாகத்தைப் புறம்பாய்வைத்து
　தினைப்புல்லு நிழலுலர்த்தி சுட்டசாம்பல்
முறமான முள்ளித் தண்டுசாம்பல்
　மூர்க்கமாம் பிரண்டைசுட்ட சாம்பல்தானும்
வறமான வகைக்குரண்டு படியளந்து
　மட்டப்பா பசுவினுட வமுரிதானும்
இறமான விருபத்து நாலுபடிவிட்டு
　இழுத்துநன்றாய்க் கலக்கியே யிசைநாள்நாலே. (220)

நாலாநாள் தெளிவிறுத்துப் பாண்டத்தூற்றி
　நலமாக வடுப்பேற்றிக் காயும்போது
தூலான சூதமது பலந்தானெட்டு
　தூக்கியே கொதிக்கையிலே கூடயிட்டு
தேலான தீபம்போல் சிறுகவெரியிட்டு
　சிரங்கைநீர் நிற்கவே யிறக்கிக்கொண்டு
தாலான தண்ணீரில் கழுவியெல்லாஞ்
　சமர்த்தாக வெடுத்துமே புறம்பாய்வையே. (221)

வைத்தபின்பு கெந்தகந்தான் சேருவென்று
　வளமான பிரண்டைச்சாற் தண்ணீராலே
அய்த்தபின்பு ஆறுநா ளரைத்துமைபோல்
　அடவான ரவிதனிலே யுலரப்போட்டு
வைத்தபின்பு பால்வார்த்துச் சட்டிதன்னில்
　பண்பாகச் சீலைகட்டிக் கெந்தகத்தைவைத்து
பொய்த்தபின்பு புடம்போட்டு பெடுத்துப்பார்க்க
　பொன்மணிபோல் பாலுக்கு ளிறங்கும்பாரே. (222)

இறங்கியதோர் கெந்தகத்தை யப்பால்வைத்து
எழிலாகத் தாளகந்தான் பலந்தான்பத்து
கிறிங்கியதோர் கிளிபோலத் தளரக்கட்டி
கிளிஞ்சினீர் கடுவைத்து மேலுமூடி
கறங்கியதோர் கள்ளென்ற காடியாலே
கடிதாக நீற்றியே யிருபத்தொன்று
எறங்கியதோர் கழுவியே யெடுத்துவைத்து
ஏத்தமாஞ் சவ்வீரம் பலந்தானஞ்சே. (223)

அஞ்சான சவ்வீரந் துண்டுதுண்டாய்வெட்டி
அழுத்தமாஞ் சீலைதன்னைப் பொதிந்துவைத்து
துஞ்சான சவ்வீரப் தொளைபோல்கட்டி
சுயம்பான பிரண்டைச்சாற் படியும்நாலு
கஞ்சான காரைக்கொட்டி யிலையில்சாறு
கலந்துமே நாலுபடி யொக்கவார்த்து
துஞ்சான சட்டியிலே வட்டம்போட்டு
தொளைகட்டி யெரித்திட்டுச் சுருக்காய்வாங்கே. (224)

வாங்கியே முன்னுகம் பலந்தானேழு
மாசற்ற சூதமது பலந்தானைந்து
தேங்கியே ரண்டுமொன்றா யுருக்கிச்சேர்க்க
சிந்தியதோர் மாப்போலப் பொடியுமாகும்
ஓங்கியதோர் கெந்தகமும் பலமுமைந்து
உயர்த்தியாந் தாளகமும் பலமுமூன்று
தாங்கியதோர் சவ்வீரத்தொன் றரைப்பலந்தான்
சமர்த்தாகக் கல்வத்தில் பொடியாய்ப்பண்ணே. (225)

பண்ணியே கற்றாழஞ் சாற்றினாலே
பரிவாக யிழுத்தரைத்து யெட்டுநாள்தான்
தெண்ணியே அயச்செம்பக் குள்ளேவைத்து
திருவாக அயச்செம்பு மேலேமூடி
நண்ணியே மண்சீலை நாலுசெய்து
நலமாக வுலரவைத்துப் புடத்தைப்போடு
மண்ணியே மணல்மறைவி லிருபத்தொன்று
வளமாகப் புடம்போட்டு யெடுத்துப்பாரே. (226)



எடுத்திட்ட குருபாரு பஞ்சாக்கினிருத்திரன்
எழிலான நாகாஸ்திரம் பாசுபதாஸ்திரம்
நடுத்திட்ட நடப்பினத்தின் பற்பினத்தில்
நலமான வூர்வனத்தில் சொன்னபடிபரிட்சை
படுத்திட்ட பணவிடைதான் குருவைப்போட
பாங்காய்ச் சொன்னபடி சித்தியாகும்
கடுத்திட்ட கட்டினங்க ளுருக்கினங்கள்
கோடிகாய சித்துக்கற்பாந்த மிருத்தும்பாரே. (227)

பாரடா காரசாரப் பேரைச்சொன்னேன்
பாஷாணப் பேர்சொன்னே னுபரசத்தைச்சொன்னேன்
மாரடா மலையிலுள்ள வதிசயத்தைச்சொன்னேன்
மகத்தான பெரியோர்க்கு வணக்கஞ்சொன்னேன்
மூரடா மூலிகையின் பேர்மறைப்புச்சொன்னேன்
முனையான வுப்பினுட கட்டைச்சொன்னேன்
நாரடா நடப்பினமு மூர்வனமுஞ்சொன்னேன்
நலமான பறப்பினமு நாட்டினேனே. (228)

நாட்டினேன் நாகரசங்கெந்தியுடகுருவை
நாதாக்க ளொளித்திட்ட குருவைச்சொன்னேன்
தீட்டினே னம்புக்குள் சூர்மைபோலச்
செகசாலக் குருவொன்று சொல்லக்கேளு:
சூட்டினேன் சூதமது தானும்பத்து
சுத்தித்துப் பீங்கானில் விட்டுவைத்து
வீட்டினேன் வெடியுப்புப் பலந்தான்பத்து
மிடுக்கான சீனமது யிருபத்தஞ்சே. (229)

அஞ்சவே பொடிபண்ணிக் கலயத்திட்டு
அழகான பாலையென்ற சட்டிமூடி
உஞ்சவே யுளுந்தாலே சீலைசெய்து
உத்தமா மடுப்பேற்றித் தீயைமூட்டு
தெஞ்சவே முன்னீரை வேறேவாங்கு
செகப்பான தீநீரை சூதத்தில்விட்டு
மிஞ்சவே மூடிவைக்க மூன்றுநாள்தான்
மேலாகப் பற்பத்தை யெடுத்துக்கொள்ளே (230)

எடுத்தபின்பு மறுபடியுந் திராவகத்தைவார்த்து
ஏத்தமாஞ் சூதத்தில் விட்டுவிட்டு
படுத்தபின்பு நீறியதோர் பற்பமெல்லாம்
பாங்கான ரவிதனிலே யுலரவிட்டு
கடுத்தபின்பு காசியென்ற மேருக்கேற்றிக்
கணக்காக வாலுகையின் மேலேவைத்து
அடுத்தபின்பு ஆறுநாள் தீயைமூட்டி
ஆறவிட்டு வுடைத்துமே வாங்கிக்கொள்ளே. (231)

செகச்சால கரு

வாங்கினல் காவிநிறமாகக்காணு
மருபடியு முன்போலத் திராவகத்லைவிட்டு
தேங்கியே மூன்றுநா ளானபின்பு
திறமான ரவிதனிலேகாயப்போட்டு
தாங்கியே தங்கத்தில் நாகஞ்சாகத்
தவளமாம் பொடிபோல மாவாய்ப்போகும்
ஏங்கியே எட்டுக்கு வொன்றுசேர்த்து
இசைவொன்றுய்ச் மத்தித்துமேருக்கேற்றே (232)

ஏற்றியே தீமூட்டு ஆறுநாள்தான்
இதமாக முத்தீயுமாட்டுஆட்டு
ஆற்றியே மேருவைத்தா னுடைத்துக்கொட்டி
அகிலமாங் கிண்டியிட்டுத் திராவகத்தைவாரு
நாற்றியே நாலுநாள் நிழலில்வைத்து
நலம்பெறவே ரவிதனிலே காயப்போடு
காற்றியே காசியென்ற மேருக்கேற்றி
கனமான வாலுகையில் வைத்திடாயே. (233)

வைத்திட்டுத் தீயெரிப்பா யாறுநாள்தான்
மறவாமல் முத்தீயு மாட்டுமாட்டு
அய்த்திட்டு ஐந்துமுறை யிப்படியேசெய்தா
லணுகிடிலோ நவலோக மேமமாகும்
உய்த்திட்டு ஒருநூற்றுக் கொன்றேயோடும்
ஒன்பதிலுங் தனித்தனியே வேதையாகும்
பய்த்திட்டுப் பணவி டைதான் பாலிலுண்ணப்
பதினறு வயதுபோ லிருப்பான்றனே. (234)



தானென்ற செகச்சால குருவைத்தொட்டு
சகலசித்து மாடையிலே தாயேசொல்வாள்
வானென்ற ஆத்தாளை சதநித்தம்பாடு
வஸ்துசுத்தி திரவியத்துக் கிடந்தான்பண்ணு
தேனென்ற சிவசொத்தை வறுமைபோலுண்ணு
செகஜால முருத்தொட்டு செல்வுபண்ணு
ஆனென்ற ஆத்தாளைத் தினமும்பூசி
அஷ்டகா சித்தியெல்லா மாடலாமே. (235)

ஆமென்ற துரைச்சியைதான் பூசைபண்ண
அநேகநாள் செய்ததவ பலத்தாற்கிட்டும்
வாமென்ற பிரமனொடு விஷ்ணுருத்திரன
மகேசனொடு சதாசிவனுங் கர்த்தாசன்கர்த்தன்
ஏமென்ற விந்திரனும் சந்திராதித்தர்
ஏழிலான காமனொடு அங்கிநந்தி
கோமென்ற குபேரனொடு கும்பமாகாரியுங்
கூறரிய முனிரிஷிகள் பூசித்தாரே. (236)

பூசித்த குருவென்றல் மூலநாயர்
புகழ்படைத்த காலாங்கி ருஷபதேவர்
தேசித்த மச்சரொடு சின்மயமாந்
தேவர்சிறந்த ரிஷிபதஞ்சலியும் வியாக்கிரபாதர்
கோசித்தி கோரக்கர் கஞ்சமலைசித்தர்
கொங்கணருஞ் சங்கிரமாமுனி ராமதேவர்
மாசித்த ரிஷிதேவ ரனேகர்கோடி
மகத்தான் தேவியைத்தான் பூசிப்பாரே. (237)

பூசித்த சக்காத்தின் போக்குகேளு
புகழான நடுமையம் விந்துவிட்டு
மூசித்த முக்கோண மேலேயிட்டு
முயற்சியது மேலேயறு கோணமிட்டு
வாசித்தவ ளையமொன்று யிதழ்தானெட்டு
வாகாக மூன்றுவரை வாசல்நாலு
மாசித்த மாயியவ ளிருந்தவீடு
வரிசையாய்க் கீறிடவே வண்மையாமே. (238)

வண்மையாஞ் சொர்னமென்ற தகட்டுக்குள்ளே
வரைந்திடுவா யில்லாட்டால் பிம்பம்பண்ணு
பண்மையா யில்லாட்டால் பலகைதனில்கீறு
பலகையது யில்லாட்டாய் பற்பத்திற்கீறு

வின்மையாம் விந்துவிலே றீங்காரமாகும்
விசைந்ததிரி கோணத்தில் மூலமாகும்
அண்மையறு கோணத்தில் மூலத்தைமாறு
அதற்கிடையில் ஓம்நமசி வாயமாமே. (239)

வயிரவம்.

ஆமென்ற வெட்டிதழி லஷ்டவயிரவரை
அமர்த்தியே பவ்ரவர்கள் பீசம்வைத்து
கோமென்ற வீதிதனில் சத்தியுண்டு
கொள்கும்பால் வாசல்தனில் தேவதைகண்டு
வேமென்ற அவரவர்கள் பீசமிட்டு
மீறும மேலுழுவா வரணத்துள்ளும்
காமென்ற பூசையெய்து கற்பங்கொண்டு
கடிதான சிவயோகங் கருதிப்பாரே. (240)

பாரென்ற விந்துவிலே பாலாசத்தி
பரையினுட வம்மென்ன பகரப்போறேன்
சேரென்ற மொழியாட்கு வயமேதாபத்து
சூரியனுஞ் சந்திரனு மகாதிலதத்தோடு
கோரென்ற ரவிமேகாடி மேலிற்காந்தி
கூறியவு லத்தலத்தில் குறிப்படைக்கேளு
ஆமென்ற அபயமோடு வாதமாகு
மழுவான திருமுறையுஞ் செயவடமுந்தானே. (241)

தேவியென்ற பனேவைப்பா தேவிதன்னை
செபித்துமே மூலத்தால் தியானம்பண்ணி
பூவினொடு புஷ்பமே யர்ச்சித்தேத்தி
போற்றிசெய்து வருமேகாணப் பிரிவைக்கேளு
தாவினொடு காந்திசத்தி வர்த்திசத்தி
கலாதிஷ்ட சத்தியொடு புஷ்பசத்தி
சவியென்ற யிலட்சுமியாஞ் சத்தியோடு
மாறிலான சபஸ்பதியாஞ் சித்திதானே. (242)

தானென்ற சந்தனமுஞ் சாந்தும்பூவுந்
சகலாத்தி யைபரணந் தரித்துவிம்பி
வேனென்ற விந்துவிலே விளைந்துநின்ற
விளங்கியதோர் தாயினுட விரிவுகாணு



மானென்ற முக்கோணத் துள்ளேநிற்கும்
வண்மையாஞ் சத்தியுட வளப்பங்கேளு
தேனென்ற திரியம்பா தேவியோடு
செம்மையாம் பிருதிவியம்பா தேவியாங்காணே. (243)

காணப்பா ஆறாவரை சத்திதன்னால்
கடத்தேற வேணுமென்று தியானம்பண்ணு
பூணப்பா மூலத்தால் செபத்தைப்பண்ணி
போற்றிசெய்து அடிவணங்கி புஷ்பந்தூவி
தாணப்பா வட்டவிதழ் காம்பில்நிற்குந்
தனித்துநின்ற வாவரண சத்திகேளு
ஆணப்பா அனங்குசுமா சத்தியாகும்
அனங்கமே கலைசத்தி யப்பாற்கேளே. (244)

கேளென்ற அனங்கமதன சத்தியாகும்
கிளரனங்க மதனதார னங்கரேகா
வேளென்ற அனங்கவேகினி சத்தியாகு
மிடுக்கான அனங்கிசையோ டனங்கமாலினியாம்
ஏளென்ற யேனவா சத்திதன்னைப்போற்றி
யேற்றமா மூலத்தால் செபத்தைப்பண்ணி
போளென்ற புஷ்பத்தா லர்ச்சித்தேத்தி
போற்றிசெய்து பின்புசெய்யும் பிரிவுபாரே. (245)

பிறிவான வெட்டிதழாம் நடுவினுள்ளே
பேர்பெரிய வயிரவ சத்தியென்னவா
சிறிவான பிராமணி சத்தியோடு
செயமான மயேஸ்வரி சத்தியாகும்
கறிவான கவுமாரி வைஷ்ணவிவராகி
கனமான யிந்திராணி சாமுண்டி லட்சுமி
அறிவான சத்தியென்வா சத்திபீசம்
அஷ்டயிதழ் நடுவுக்கு ளமர்த்திவையே. (246)

அமர்த்தியே தேவியுட மூலத்தாலே
யர்ச்சித்து அடிபணிந்து புஷ்பந்தூவி
சமர்த்தியே யிதழ்தன்னியில் நிற்குநின்ற
தரியமாம் வடுகனுட பேரைக்கேளு
திமர்த்தியே யசிதாங்க வயிரவரோடு
சீரான குருவயிரவந் தானுமாகும்
குமர்த்தியே சண்டவயிரவர் தன்னோடு
குரோதவயி ரவரோடுவுன் மத்தராமே. (247)

ஆமென்ற கபாலவயி ரவருமிக்க
அழகான பீஷ்மவயி ரவருமாகும்
சாமென்ற சங்கார பயிரவர்தன்னைத்
தனித்தனியே யிதழினுட னுள்ளிருத்தி
ஏமென்ற பீசத்தா லிருத்திவைத்து
ஏத்தமாம் வடுகனுட தியானம்பண்ணி
போமென்ற மூலத்தால் செபத்தைப்பண்ணி
போற்றிசெய்து அடிபணிந்து புட்பந்தாவே. (248)

தாவியே அசிதாங்க பிராமணியாகுஞ்
சுத்தகுரு பயிரவமயேஸ் பரியுமாகுந்
தாவியே சண்டவயிரவர் கவுமாரி
தனிக்குரோத வயிரவ வைஷ்ணவியுமாகும்
ஊவியே யுன்மத்த பயிரவவராகி
உத்தமமாங் கபாலவயிரவி யிந்திராணி
ஏவியே பீஷ்ணவயிரவ சாமுண்டி
பெரியசங் காரவயிரவ லட்சுமிகாணே. (249)

கானென்ற வயிரவர் போதனரிலொக்க
தனித்த வயிரவர்சத்தி தன்னைக்கட்டி
தேனென்ற மூலத்தா லர்ச்சித்தேத்தி
தெண்டனிட்டு அடிபணிந்து தியானம்பண்ணி
வேனென்ற சதுர்முதல் வீதிநிற்கு
மிடுக்கான தேவதையின் விவரங்கேளு
ஆனென்ற அதிகதாணி மாசத்தியாகும்
அநிமயிமா சத்திலகிமா சத்தியாமே. (250)

சத்திகிரிமா சத்தியி ஸத்துவாசத்தி
தனித்தவஸ்து மயிசத்திபிர காமியசத்தி
நித்தியாம் புத்திமுத்தி சத்தியோடு
நேசித்து அவரவர்தான் பீசமிட்டு
பத்தியாம் பணிந்தேத்தி புஷ்பந்தாவி
பகர்தேவி சிலத்தால் செபத்தைப்பண்ணி
அத்தியா சமதாரத்தில் யண்டாம்வீதி
யமர்ந்திருந்த சத்தியுட வான்மைகேளே. (251)

ஆண்மையாஞ் சரஸ்பதியாந் தேவியோடு
அதியகிருபா தேவிசேர்ந் திருந்ததேவி
வான்மையாந் தேவிவன துர்க்கைதேவி
மகாபத்திர காளிதேவி சுவாகாதேவி



தான்மையாஞ் சுமங்கலா தேவியோடு
தனியெட்டுச் சத்தியுட றன்பீசமிட்டு
பேண்மையாய்ப் பேரத்திப் புட்பந்தாவி
பேர்பெரிய மூலத்தால் செபத்தைப்பண்ணே. (252)

பண்ணியபின் னெட்டிதழ்தான் வடுகனுடதளத்தில்
பண்பாகச் சாந்தவெளி யஷ்டதிக்குப்பாலர்
ஒண்ணியதென் போதனையே யுரைக்கக்கேளு
வுதிட்டான விந்திரனே டக்கினியாகும்
எண்ணியதோ ரேமனொடு நிருதிவருணன்
ஏற்றமாம் வாய்வோடு குபேரனீசானியன்
அண்ணியதோ ரவரவர்கள் பீசத்தாலே
யமைந்தாயே யர்ச்சித்துச் செபத்தைப்பண்ணே. (253)

செபம்பண்ணிச் சதுரமாம் வாசலில்நிற்குந்
தேவதைகள் போதனையே செப்பக்கேளு
கிபம்பண்ணிக் கிழக்கான வாசலுக்குள்ளே
கிணேசனொடு மந்திரங்க ளர்ச்சித்தேத்தும்
துபம்பண்ணித் தெற்கான வாசலுக்குள்ளே
துர்க்கையைத்தா னர்ச்சித்துத் தியானம்பண்ணி
மிபம்பண்ணி மேற்கான வாசலுக்குள்ளே
வித்தைதருஞ் சரஸ்வதியைத் தியானித்தோதே. (254)

ஓதியே வடக்காகும் வாசற்குள்ளே
யுறுசேஷத்திர பாலரைத்தா னர்ச்சித்தேத்தி
வீதியே யவரவர்கள் பீசமிட்டு
முரளான புட்பத்தை லர்ச்சுத்தேத்தி
மூதியே மூலத்தால் செபத்தைப்பண்ணி
மிகநிறுத்தி மூலையிலே பிர்மதேவர்
பாதியே யவர்கான அட்சரத்தாலும்
பண்காயத் திரியாலு மர்ச்சித்தேனே. (255)

ஏற்றியே வாயிவென்ற மூலைக்குள்ளே
யிருத்தியே விஷ்ணுவைத்தான் தியானம்பண்ணி
போற்றியே யவர்தமையே புகழ்ச்சிசெய்து
புஷ்பத்தா லர்ச்சித்து வுபசரிக்க
காற்றியே யீசான்ய மூலைக்குள்ளே
காலாக்கினி ருத்திரரை ஆவாகித்து
தேற்றியே காளகண்டர் சிவாயநமாவென்று
செபித்துமே வுபசாரஞ் செய்திடாயே. (256)

செய்திடவே யக்கினியா மூலைக்குள்ளே
செழித்தபற் பாசானத்தில் கந்தரைத்தான்
வைத்திடவே வளளிதெய் வானைப்பங்க
மகத்தான பஞ்சதேசாக்ஷர மூலஞ்செபித்து
அய்த்திடவே யர்ச்சித்து புஷ்பந்தாவி
யடிவணங்கி யசுரர்குல காலாவென்று
உய்திடவே வள்ளிதெய் வானையைப்பூசித்து
உற்றமே சோடசத்தா லுபசாரம்பண்ணே. (257)

பண்ணியே தெற்கான வாசல்முன்னே
பாதாள லிங்காலமன மதனுமாகும்
வண்ணியே மேற்கான வாசல்முன்னே
மகத்தான ஹிறிங்காரம் வீரபத்திரர்க்கும்
அண்ணியே வடக்கான வாசல்முன்னே
அங் அரியாங் புத்திரராங்கிழக்கு
சண்ணியே சங்கண்டேஸ்வ ராயாவென்று
சர்மர்த்தாக வர்ச்சித்துத் தியானம்பண்ணே. (258)

தியானித்து யஷ்டயோனி யஷ்டகெருடன்
செயஅஷ்ட மாநாக அஷ்டசெபங்கள்
தியானித்து அஷ்டபர்வதம் அஷ்டவசுதேவர்
அக்கினி யாதித்த சந்திரமண்டலமாகும்
மியானித்து மேகமண்டலம் வாய்வுமண்டலம்
மிக்கநட்சத்திர மண்டலம் நட்சத்கிராதி
கயானித்துக் கைகுவித்து அஞ்சலிபண்ணிக்
கடாட்சிக்க வேணுமென்று அர்ச்சித்தேத்தே. (259)

அர்ச்சித்துக் கொள்ராசி சருவசநகாரற்கியம்
அழகான சருவகெந் தருவா அட்சா
கெர்ச்சித்துக் கின்னரா சருவசித்தா
கெடியாய சருவரிஷி சர்வயோகி
தர்ச்சித்துச் சர்ப்பதேவா நவக்கிரகங்கள்
சாவண்ட லோகர்தமை யர்ச்சித்தேத்தி
சுர்ச்சித்துச் சோடசமா முபசாரத்தோடே
தியானித்து மூலமாஞ் செபத்தையோதே. (260)

ஓதியே வுத்தமியைப் பூசைபண்ணி
யுகந்துநான் கேட்டவர மருளவென்று
சேதியே சொன்னக்கா லாயிகேட்பாள்
செகசால மாட்டிவித்த திருட்டுத்தாய்தான்



போதியே தெட்சணத்தால் போற்றவேண்டாம்
போரான வாமத்தால் போற்றிப்பூசி
சாதியே யிரண்டொழிய வேறேயில்லை
தாக்கிப்பா ரறுசமையச் சண்டிதானே. (261)

தானென்ற வுட்சமய மாறதுண்டு
தாண்டியபின் புறச்சமய வாறதுண்டு
பானென்ற பனிரண்டுக் கவலைதெய்வம்
பாதகர்தான் பெண்ணோடே பரிந்துமாய்வார்
தேனென்று வைத்துவுன்னைப் பூசைபண்ணார்
செகமெல்லாங் கூத்தாடித் திரிவார்பாவி
வானென்று வறுமைவந்து சுற்றிக்கொண்டு
வஸ்துசுத்தி கிடையாமல் மாளுவானே. (262)

மாளாம லிழிக்கவல்லோ கற்பஞ்சொன்னேன்
வறுமைவந்து தாக்காமல் வாதஞ்சொன்னேன்
மீளாம லிருக்கவல்லோ யோகஞ்சொன்னேன்
மிரட்சியாய்த் திரியாமல் ஞானஞ்சொன்னேன்
கேளாமல் செவனமெல்லாந் திரிவதற்கு
குளிகையுட குணமெல்லாங் குறிப்பாய்ச்சொன்னேன்
நாளான அம்பரத்தை யறிவதற்கு
நாட்டினேன் தேவியுட பூசைதானே. (263)

பூசைக்காந் திரவியத்தைப் புகலக்கேளு
பெரியதொரு கிரகத்தைப் பூச்சுத்திபண்ணி
தேசைக்காந் திசைகளெட்டும் பெந்தம்பண்ணித்
திரிமூன்று கலசங்கள் பூசைபண்ணி
தூசைக்காந் தசங்கத்தைப் பூசைபண்ணி
தூய்யசடங்க நித்தியகர்ம முடித்துக்கொண்டு
ஆசைக்காம் ஐந்துபாத் திரத்தைப் பூசி
யாராதனைத் திரவியங்கள் சாபம்போக்கே. (264)

போக்கியே யரிசிமாங் கனியுங்காயும்
பொருந்திய நெருப்புநீர் விறகுவுப்பு
நேக்கியே நெய்பாலு நதியுந்தேனும்
ஏமமாம் பசுவுனிட கோமியந்தான்
தேக்கியே கணபதிக்கு அபிஷேகஞ்செய்
திறமான தீட்சைவிதி தெளிந்தவோது
தாக்கியே நூற்றெட்டு வுருவுமேத்தி
தப்பாமல் மயேஸ்வரியைப் பூசையோதே. (265)

ஓதிடவே யேழாகுமா வரணமாகும்
உற்றதால் வாசலுக்குள் கிழக்குவாசல்
காதிடவே கணபதிக்கு வயதுசுத்தி
கரும்போடு யிளநீருங் கதலிவைத்து
பாதிடவே பத்திரத்தா லர்ச்சித்தேத்திப்
பங்கான கணபதிமந் திரஞ்செபித்து
கோதிட தோத்தரித்துத் தெண்டம்பண்ணித்
துடியாகுந் தெற்கான வாசல்தானே. (266)

தெற்கான வாசலுக்குள் துர்க்கைநிற்பாள்
செபம்பண்ணி வயதுசுத்தி யன்னம்வைத்து
அற்கான புஷ்பத்தா லர்ச்சித்தேத்தி
யதற்கடுத்த மேல்வாசல் சரஸ்வதியாகும்
வற்கான சோடசமா முபசாரம்பண்ணி
வயதுசுத்தி வடையோடு மகாபுஷ்பங்கள்
தற்கான சகலவித்தை தருந்தாயை
தயாளமாய்த் தெண்டனிட்டு வடக்கிற்கேளே. (267)

வடக்கான வாசலுக்குள் க்ஷேத்திரபாலன்
வடையோடு பணியாரம் வயதுசுத்தி
புடக்கான புட்பத்தா லர்ச்சித்தேத்தி
பெரியவுப சாரத்தா லாவாகித்து
நிடக்கான நிருதியென்ற மூலைக்குள்ளே
நேமமாம் பிரமனைத்தா னர்ச்சித்தேத்தி
கடக்கான காயத்திரி யிருபத்துநாலுங்
கனமாக வுச்சரித்துத் தியானம்பண்ணே. (268)

தியானமொடு வயதுசுத்தி பலகாரம்வைத்து
தீர்க்கவுப சாரசோ டசங்கள்செய்து
மயானமாம் வாயுவென்ற மூலைக்குள்ளே
மகாகெருடத் துவசவிஷ்ணு வைச்செபித்து
பயானமாம் பஞ்சாயுதத் தியானம்பண்ணி
பானமொடு சுத்திபல காரம்வைத்து
அயானமா மர்க்கியபாத் திரங்கொடுத்து
அஞ்சலியந் தம்பண்ணி யப்பாற்கேளே. (269)

அப்பாலா மீசான்ய மூலைக்குள்ளே
ஆலமுண்ட ருத்திரரை அங்காவைத்து
நப்பாலாம் பானமொடு சுத்திதிரவியம்
நலம்பெறவே பூசித்து அஞ்சலிபண்ணி



கப்பாலா மக்கினியா மூலைக்குள்ளே
கந்தரொடு வள்ளிதெய் வானைதம்மை
மூப்பான மூலமந் திரஞ்செபித்து
மூர்க்கமாம் பானமொடு சுத்திவையே. (270)

சுத்தியே தீபமுடன் தூபமாறி
சோடசமா முபசாரந் தோத்தரித்து
அத்தியே யாவாகனஞ் செய்தபின்பு
அதின்பிறகு வாசலுக்குள் தெற்கேகேளு
மத்தியே மன்மதனை மந்திரத்தால்
நிறுத்தி வகைவகையாய் நைவேத்திய முபசரித்து
வெத்தியே வாசலுக்குள் மேற்கேதானும்
வீரபத் திரர்தமக்கு வேண்டுவதியே. (271)

ஈய்ந்துமே வடக்குக்கு அரிஹரபுத்திரர்
இயலாக நைவேத்ய பூசைசெய்து
சாய்ந்துமே கிழக்குசண் டேஸர்தம்மைத்
தண்மையாய்ப் பூசைசெய்து வுபசரித்து
ஆய்ந்தவஷ்ட தளஞ்சார்ந்த வெளிதன்னி
லஷ்டதிக்குப் பாலர்தம்மை யர்ச்சித்தேத்தி
பாய்ந்துமே யஷ்டயோனி யஷ்டகெருடன்
பண்பான அஷ்டமா நாகந்தானே. (272)

தானென்ற அஷ்டகெஜம் அஷ்டபர்வதம்
சமர்த்தான அஷ்டவசு தேவராகும்
ஆனென்ற பண்டலங்க ளேழும்பூசி
அப்பாலாய்க் கொள்ளுசி தன்னைப்பூசி
சாமென்ற சருவசர்க் கிரார்க்கியும்பூசி
சருவகெர் தருவருடன் றன்னைப்பூசி
பானென்ற அட்சார தன்னைப்பூசிப்
பண்பான இன்னரரைப் பூசித்தேத்தே. (273)

எந்திய சர்வசித்தா தன்னைப்பூசி
யெழிலான சருவரிஷி சருவயோகி
சாத்தியே சர்ப்பதேவா நபக்கிரகபதாயா
சர்வாண்ட லோகரொடு தம்மைப்பூசி
தோத்தியே சோட்சமா முபசாரத்தால்
தோத்தரித்து வயதுசுத்தி பலகாரம்வைத்து
ஆத்தியே யடிவணங்கி தெண்டனிட்டு
ஆனபின்பு தேவியைத்தான் தியானம்பண்ணே. (274)

பண்ணியேசக் கரத்திலமைத் திருந்தையல்
பரையினுட வடிவமாய்த் தியானஞ்செய்து
வண்ணியே வாமகாம பாத்திரம்வைத்து
வகையான தெட்சணைதாம் பூலம்வைத்து
திண்ணியே தியானித்து யர்ச்சித்தேத்தி
திரிமூர்த்தி மூன்றுவிரல் பாத்திரமேந்தி
குண்ணியே சுத்தியொடு குருவுக்கீய்ந்து
குணமான மூலமொடு சூட்சங்கேளே. (275)

கேளுநீ காரணமா மூன்றுசோதி
கெடியான சத்தியைநீ யலங்கரித்து
தாளுநீ யவள்கையிலே கடங்கொடுத்து
சாங்கமாய் ரட்சித்து கடத்தைவாங்கி
ஏளுநீ சத்தியென்ற பாத்திரத்தையீய்ந்து
ஈய்ந்ததொரு சேஷத்தைப் பானம்பண்ணி
நீளுநீ மூலத்தில் மனதையூன்றி
நீர்ப்பட மதுபுரித்து நிலைத்துவுண்ணே. (276)

உண்டுமே யானந்த மானபின்பு
வுகந்துமே அன்னமொடு பலகாரம்பண்ணி
இண்டுமே சக்கரத்தை யிருதயத்துள்ளே
எழுந்தருள பண்ணியே யசையாமற்றான்
தண்டுமே சாதிகொண்டு மூலத்தூதி
தாக்கான புருவமையங் கடந்துமேறு
கண்டுமே யொளிதாக மூலங்காலுங்
கன்னியெட்டு மலகிரியிலே காட்டுவாளே. (277)

காட்டையிலே பனிச்சென்று மூலத்தியானங்
கருதியபோர் சிகாரமது கோடிபானு
மூட்டையிலே பிரசத்தங் கேட்டுதானல்
மூலமது வெளியாக முறிந்துபோகும்
காட்டையிலே விற்பித்து நழுவிற்றானல்
நலமான அமர்வாசல் மூடிப்போகும்
ஒட்டையிலே யொருநினைவாய்த் தாண்டியேற
உதாந்தவரை சடமிருந்து முத்தியாமே. (278)

முத்திக்கு வித்தான தாயைப்பூசி
மூவுலகுஞ் சஞ்சரித்துத் திரியலாகும்
சத்திராங் தயாபரியில் கிருபைபெற்றால்
சாகாத கல்விற்றுத் தேவருவாய்



பத்தியாம் பஞ்சாட்சரம் பெற்றுவாழ்வாய்
பலகாலுந் திரிந்தாலுங் கிட்டாதப்பா
சித்திக்கு அறுபத்து நாலுமாகுந்
திரியலா மென்தாயார் பூசைவிதிமுற்றே. (279)

முத்தான தாயாரைப் பூசைபண்ண
மூர்க்கமாம் நாற்பத்து முக்கோணமாகும்
சத்தான சிவன்தானும் நந்திக்குச்சொன்னார்
சார்பான நந்தியுமே மூலர்க்குச்சொன்னார்
சித்தான திருமூல நாயனார்தாமுஞ்
செப்பினார் காலாங்கி தேவருக்குத்தான்
கத்தான காலாங்கி நாயனார்தாமுங்
கடாக்ஷத்தால் கருணையாய் பாடினேனே. (280)

கருணையாங் காமாட்சி யிருந்தவீடு
கடிதான நாற்பத்து மூன்றுகோணம்
வருணையாம் ரிஷிதேவர் சித்தர்யோகி
மகத்தான பஞ்சகர்த்தா வக்கினியாகித்தன்
அருணையாம் அகஸ்தியருங் கணேசன்கந்தன்
ஆத்தாளைப் பூசித்து அதிகாரமானார்
கருணையாம் பூசித்துச் சமாதியிலேநின்று
தாயளிக்கச் சகலசித்துந் தரித்திட்டேனே. (281)

தரித்திட்டச் சக்கரத்தைச் சாற்றக்கேளு
தான்மையாய் வளையும்போல் கீறிக்கொண்டு
அரித்திட்ட குறுக்கையிட்டு ரேகைதானும்
ஆதித்தன் ரேகையொன்று சோமனொன்று
தெரித்திட்ட செவ்வாயின் ரேகையொன்று
செம்மையாம் புதனுடைய ரேகையொன்று
குரித்திட்ட குருவினுட ரேகையொன்று
குணமான சுக்கிரன்றன் ரேகையொன்றே. (282)

ஒன்றான காரிட்டு ரேகையொன்று
உத்தமமாம் ராகுவுட ரேகையொன்று
கன்றான கேதுவுட ரேகையொன்று
கைம்முறையா யொன்பதையுங் குறுக்கேகீறி
வன்றான செவ்வாயின் ரேகைமுன்னேரண்டும்
வாங்கியல்லோ கீழாகும் வளையத்தோடுந்
தன்றான சனியினுட ரேகைமுன்னேரண்டுந்
தாக்கியல்லோ மேல்முகத்தின் வளையத்தோடே. (283)

ஊட்டியே சோமனுட ரேகைமுன்னரண்டும்
உணர்வான கேதுவுட நடுமைதாட்டு
பூட்டியே கேதுவுட ரேகைமுன்னரண்டும்
பிரிவான செவ்வாயின் மையந்தாக்கு
நாட்டியதோ ராசிவுட ரேகைமுன்னரண்டும்
நலங்காமல் மேல்நோக்கி ரவியைத்தாட்டு
ஆட்டியே ஆதித்தன் ரேகைமுன்னரண்டும்
அழகான சுக்கிரனை மையத்தாட்டே. (284)

ஊட்டிடுவாய் சுக்கிரனை ரேகைமுன்னரண்டும்
உறுதியாந் திங்களுட மையத்திற்சேரு
பூட்டிடுவாய் புதனுடைய ரேகைமுன்னரண்டும்
புகழாக ராகுவுட மையத்தாட்டு
நாட்டிடுவாய் ராசாவின் ரேகைமுன்னரண்டும்
நலியான சனிமையத் தாட்டிப்பாரு
ஆட்டிடுவா யாதித்தன் தலையத்துள்ளே
அதின்கீழே சோமனுட ரேகையாமே. (285)

ஆமென்ற வதின்கீழே செவ்வாய்ரேகை
அழகாக வதின்கீழே புந்திரேகை
கோமென்ன வதின்கீழே குருவின்ரேகை
கூர்மையா யதின்கீழே வெள்ளிரேகை
சாமென்ன வதின்கீழே சனியின்ரேகை
சதிரான வதின்கீழே ராகுவாகும்
வாமென்ன வதின்கீழே கேதுரேகை
வகுத்திந்தப் படிகூறி முன்னயின்பாரே. (186)

பாரிந்தப் படிகீறி முன்னயின்மையம்
பகுத்தறிந்து முன்னோடு முன்னயன்கூட்டி
ஆரிந்தப் படியறிந்து கீறிப்பார்த்தால்
சக்காம்போல் திரிகோண முன்னயன்காணும்
வாரியிந்த நாற்பத்து முக்கோணத்தை
மகத்தான பலவான் தான் பூசிக்கமார்க்கம்
நாரிந்த நந்திகுரு மூலர்க்குச்சொன்னர்
நாயனர்க் குரைத்தபடி நான்சொன்னேனே. (287)

சொன்னதோர் சக்கிரத்தின் கீழேகேளு
சுத்தமா யெட்டிதழ் ரெட்டிதழுமிட்டு
வின்னதோர் வளையமிட்டு வெவ்வேறப்பா
மிக்கதோர் பூரேகை சதுரமாக



முன்னதோர் மூன்றுவரை வரைந்துநீயும்
மிக்கதோர் வாசலது நாலுவிட்டு
அன்னதோ திரிகோண மையத்துள்ளே
யழகாக விந்துவிட்டு நடுவேகேளே. (288)

கேளப்பா விந்துவிலே யிறிங்காரமாகும்
கெடியசரு வானந்தமாய்ச் சக்கரமாகும்
கேளப்பா திரிபுரம்கா சுந்தரியாகுந்
தீயான விந்துவிலே விரைந்துநின்றாள்
தாளப்பா திரிகோணத் துள்ளேகேளு
தாயான திரிபுராம்பர சக்கரமாகும்
வேளப்பா விஷ்ணுசேவித விதமுமாகும்
வீற்றிருந்தான் திரிகோணத் துள்ளேதானே. (289)

தானென்ற சர்வசித்தி பிறதாயகமான்
சக்ரமாஞ் சர்வவுபசார பூசிதமாம்
ஆனென்ற வஷ்டமாம் கோணத்துள்ளே
அழகான சர்வரோகஅர சக்கரமாகும்
தேனென்ற திரிபுரர் சித்தர்சக்கரத்தி
கேசுவரி செகமெல்லாஞ் சிஷ்டியாகும்
பூனென்ற பிரமதே விதமுமாகும்
பெரிபுவஷ்ட கோணத்தின் பிரிவுமாமே. (290)

பிறிவான வுள்பத்துக் கோணத்துள்ளே
பேரான சர்வாட்சர காஞ்சகரமாகும்
திரிவான திரிபுரா மாலினியாகும்
சிருஷ்டிதிரோபவ அனுபவசங் காரியாகும்
வெறிவான வெளிபத்துக் கோணத்துள்ளே
மிகுத்தசர் வார்த்தசாதக சக்கிரமாகும்
அறிவான திரிபுருயூ சிக்கிரமாகும்
ஆண்மையாம் பதினைங்கு கோணங்கேளே. (291)

கேளுநீசர்வ சௌபாக்கிய சக்கரமாகுஞ்
கீர்த்தியாந் திரிபுரவா கினிதானித்தம்
ஆளுநீ யஷ்டனத துள்ளேகேளு
அழகான சர்வசங்க்ஷோபண சக்கரமாகும்
தேளுநீ திரிபுர சுந்தரிதானுகுந்
திடமான பதினாறு களத்தினுள்ளே
தாளுநீ சர்வாசாபரிபூரக சக்கரமாகுந்
தாயான திரிபுரசுந் தரியுமாமே. (292

ஆமென்ற சதுர்கிரமூன் றாவளாக்குள்ளே
    ஆண்மையாந் திரிலோக்கிய மோகனசக்கரம்
தேமென்ற திரிபுராபர மேஸ்பரியாகுஞ்
    செப்பரிய நால்வாசல் தேவதைகளுண்டு
போமென்ற பீடத்தின் தேவதையக்கேளு
    பெரியலாத் தசத்தியாதி சாமம்
வானென்றயோகிகள் கணங்கள் சுற்றிநிற்கு
    மகத்தான பீடத்துள் நிற்குஞ்சக்தி. (293)

மருவியே மாணிக்க மண்டபமுமாகு
    மகாரத்கின தீபமொடு கற்பகவிருட்சம்
திருவியே சிந்தாமணி நந்தனத்தியானஞ்
    செயலான மணிபூம் மரத்தின்வேதி
அருவிரத்தந சுங்காதனஞ் சுவேதச்சத்திரம்
    ஞானமொடு தர்மவை ராக்கியமாகும்
அருவியே யயிஸ்வரியம் தர்ம்மலஞ்ஞானம்
    அவ்வயி ராக்கியமொடு அநைசுவரியமாமே. (294)

அமாவன்னி மண்டலம் சூரியமண்டலம்
    அத்சேர மண்டலம் சத்துவாயாகும்
நாமாசம் தாமசம் ஞானமானை
    நல்லகலாத்துமம் நாளித்திய தனமுமாகும்
தாமதுர காவித்தி யாவையத்துமம்
    நாள்மதத்து வருவகாணிகம் பிர்மரூபம்
வீம்விஷ்ணு ரூபகம் ருத்திரைரூபகம்
    மிகைசுர ரூபைகஞ்சதா சிவமுமாமே. (295)

ஆமென்ற அக்கிசதுஸிக ரதலமமாகும்
    அடுக்கான பகோபதங்கவு சும்பமாகும்
வேமென்ற வயிர்தவாபி விறசவாபி
    மிக்க வாலைந்தவாபி காயமாகும்
காமென்ற மகாதிரங்கபரி காயையாகும்
    நல்லமிர்த வாரவம்போர் தாமபுரசம்
தேமென்ற தேவியாத்மஞ் சர்வசக்கிராசஞ்
    செயகிரவ் மந்திராச னையந்தானே. (296)

தானென்ற பீடந்தைச் சுத்திநிற்குஞ்
    சமர்த்தான தேவதையின் பேருமாகும்
வானென்ற யோகினிகணங்கள் சுற்றிநிற்கு
    மகத்தான பீடத்துள் நிற்குஞ்சத்தி



வேனென்ற மேற்புரத்தில் அணிமாசாதி
    மிக்கான வுத்தரத்தில் சிமாசத்தி
கேனென்ற கீழ்ப்புறத்தில் மகிமாசத்தி
    கிளர்ந்தயீ சத்துவத்தி தெச்சணத்தில்தானே. (297)

சணவாய்வு மூலையிலே வசித்துவசித்து
    த்தாக்கான யீசானியம் பிக்காமிசத்தி
அணவக்கினி மூலையிலே புத்திசித்தி
    அடவானநீ ருறுதியிலே பீசுரசத்தி
துான்பீடத் துள்நிற்குஞ் சத்தியாகு
    குணதேவி கோட்டத்துள் நிற்குஞ்சத்தி
குறிப்பான வயிரவர்பே ரசிதாரங்கா
    கேண்பிரா மணிசத்தி கிறக்கேயாகுங்
கெடியக்கினி மூலருரு பயிரவராமே. (298)

ஆமென்ற பயிரவற்குள் மகேசியாகு
    மடுக்கவே யம்மூலைச் சண்டராகும்
நேமென்ற சண்டருக்கு கௌமாரியாகும்
    நிருதியா மூக்குள் குரோதபயிரவர்
சேமென்ற குரோதருக்கு வைஷ்விதரன்
    கொடிதான மேற்குக்கு னுன்மத்தராகும்
வாமென்றமத்தருக்கு வராகியாகும்
    வால்வுட மூலக்குள் கபாலந்தானே. (299)

கபாலருக்கு இந்திராணி கருதிப்பாரு
    கனமான பீஷணவயிரவர் சாமுண்டி
வபால்மாம் வடக்கினுட கோஷ்டமாகு
    மகத்தான யீசானம் சங்காவயிரவர்
இபாலமா மிலட்சுமியாஞ் சத்தியாகும்
    என்தாயார் கோட்டத்தின் பீடசத்தி
கொபாலமாங் கிழக்கான பீடம்பேரு
    கெடியான காமரூப பீடமாச்சே. (300)

ஆச்சென்ற துருக்கான பீடத்துக்கு
    அழகான குலாந்தரச பீடமாகும்
வேச்சென்ற மேற்கான பீடத்துக்கு
    மிடுக்கான ஜாலாந்திச பீடமாகும்
வாச்சென்ற வடக்கான பீடத்துக்கு
    மகத்தான வொட்டியாண பீடமாகும்
தாச்சென்ற சதுர்சேர மூன்றுவீடு
    தையலுட போதனையே சாற்றக்கேளே. (301)

கேளப்பா மேல்முகத்தில் சர்வசங்கோக்ஷரபிணியாங்
  கெடியாண வடகமுகத்தில் சர்வவித்திராவணியாம்
தாளப்பா கீழ்முகத்தில் சர்வாகருசனியாகுஞ்
  சதிரான தென்புறத்தில் சர்வசங்கரணி
வாளப்பா வாயுவுக்குள் சர்வவுனமாதனியா
  மகத்தான யீசானிய மகரங்குசாவாம்
தேளப்பா வருணனிலே குறிகண்டாவாஞ்
  செப்பரிய நிருதியிலே பீசமாமே. (302)

பீசமா மூர்த்துவத்தில் கேசரியாகும்
  பெருமையாங் கீழுக்குள் யோனியாகும்
பாசமாம் மிதுப்பத்து முத்திரையாகும்
  பண்பாக மூன்றாவரை யிருக்குஞ்சத்தி
ஏசாமா மிதைவிட்டு சோடசமாங்களத்தில்
  இருக்கின்ற சத்தியுட வியல்புகேளு
காசமாங் காமர்கருஷிணி யாம்பாவாகுங்
  கனத்தபுத் தியாகருஷணி யாகும் (303)

அம்பாவாம் ஆங்காரா கருஷணியாகும்
  அணிசத்தா கருஷிணி பரிசாகருஷணி
நும்பாலா மருபா கருஷணியுமாம்
  ரேயாசா கருஷணி கெந்தாகருஷணி
திம்பாவாஞ் சித்தர்கருஷணி தன்னோடு
  சிரியதயிரியா கருஷணி மிகுத்தியாகருஷணி
நம்பலா நாமாகருஷணி பீசாகருஷணி
  நலமான ஆத்துமா கருஷணியுமாமே. (304)

அணியமிர்தா கருஷணி சரிராகருஷணி
  ஐயுமாங் கிலியொடு சவ்வுமாகும்
தணியான அட்சரத்தை தளத்தில்சாத்தித்
  தாய்மாரை யஞ்சல்பண்ணிச் சாற்றக்கேளு
பாணியான் பதினாறு தளத்தில்நின்ற
  பரமான தேவதையைப் பணிந்துபோற்றி
எணியெட்டுத் தளத்தில்நிற்குஞ் சத்திபேரை
  யியம்பிடக் கேளிரண்டாம் ஆவரமாச்சே. (305)

ஆச்சென்ற அங்குசமாங் கிழக்கு
  அனங்கமே கலாசத்தி தெட்சணத்தி
லேச்சென்ற வனங்கமதனை மேற்காகும்
  வியவனங்க மதனை துராவடக்கு



நேச்சென்ற வனங்கரே காவாமக்கினி
  நிருதியிலே பணங்கவே கினியுமாகும்
வாச்சென்ற வாயுவிலே யனங்காங்குசாவா
  மனங்கா வனங்க மாலினியீ சானியுமாமே. (306)

ஆகுமே யஷ்டதளத் திருக்குஞ்சத்தி
  அட்சதை யங்கங்கே மாத்திவைப்பாய்
தேகுமே சிறிங்குறிங் கிலியுமாகுஞ்
  செயஞ்செய்து தோத்தரித்து தெண்டம்பண்ணி
மூகுமே மூன்றாகும் ஆபரணங்கண்டு
  மூலத்தை யுச்சரித்து அப்பாற்கேளு
பாகுமே பதினாலாங் கோணத்துள்ளே
  பதிவாக யிருந்தசத்தி பண்புகேளே. (307)

கேளுமே சர்வசங்ஷோபிணி சத்தியோடு
  கெணியான சத்தியொடு சத்தியாகும்
தாளுமே சர்வாக ருஷணிசத்தி
  தானான சத்திகா ரணியுமாகும்
நாளுமே சர்வசம் மோகினியாஞ்சத்தி
  நளினசர்வ ஸ்தம்பன ரூபிணியாகும்
வாளுமே சர்வசிரம்பன சத்தியோடு
  மகாசர்வான் சன்காரண சத்திதானே. (308)

சத்தியாஞ் சர்வாஞ்சன் சத்தியோடு
  சர்வவுன மாதசுருபிணி சத்தியாகும்
நித்தியாஞ் சர்வார்த்த சாதகிசத்தி
  நிகழ்சர்வ சம்பத்தி பூரணிசத்தி
பத்தியாஞ் சர்வமந்திர மீசத்து
  பகர்தொந்த க்ஷயங்கரி சத்தியாகும்
அத்தியாம் பதினாலு கோணத்துள்ளே
  யமர்ந்திருந்த சத்தியனை யர்ச்சித்தேத்தே. (309)

எத்தியே யட்சரத்தை யிலவுங்கிலியும்
  குசவவும் என்றெழுதி யேற்றமாக
வாழ்த்தியே நாலாகும் ஆபரணங்கண்டு
  மயங்காதே மூலத்தால் செபத்தைப்பண்ணி
தோற்றியே சோடசமா முபசாரத்தால்
  தொழுதிறைஞ்சி வெளிப்பத்துக் கோணத்துள்ளே
பாற்றியே பதித்திருந்த சத்தியான
  பரையினுட பேர்தனையே பகரக்கேளே. (310)

பகரவே சர்வசித்தி பிறதாதேவி
பண்பான சர்வசம்பத்துபிற பூரணிசத்தி
தகரவே சர்வப்பிரியங் கரிதேவி
சர்வமங்கள காரணி சத்தியாகும்
நகரவே சர்வகாம் பிரதாதேவி
நலத்தசனுங் ககலிமோ கினியுமாகும்
புகரவே சர்வமிறுத்தியுட் பிரகமணியாகும்
பெரியசாவ விக்கினநிவா ரணியுமாச்சே. (311)

அச்சென்ற சர்வாங்க சுந்தராதேவி
யறியசர்வ பாக்கியதா யினியுமாகும்
வேச்சென்ற வெளிபத்துக் கோணத்துள்ளே
விரைந்துநின்ற தேவியைத்தான் ரச்சித்தேத்தி
பாருதியே யட்சரத்தைப் பத்துக்குள்ளே
பதியிசவ வுங்யிங்கிலியும் யிசவவுமாகத்
தோற்றியே செபம்பண்ணித் தொழுதிறைஞ்சிச்
சோடசமா வுபசாரம் பண்ணுபண்ணே. (312)

பண்ணியே பஞ்சவா பரணங்கண்டு
பகரரிய வுளபத்துக் கோணத்துள்ளே
எண்ணியே யிருக்கின்ற சத்திகளைக்கேளு
எழிலான சர்வஞ்ஞாம்பர தேவியாகும்
தண்ணியே சர்வசத்தி யம்பாவாகுஞ்
சர்வஅயிஸ் வரியப்பிர தாயினிசத்தி
கண்ணியே சர்வக்கியானம் பராசத்தியாகுஞ்
சர்வவியாதி விஷ்நாசன சத்திதானே. (313)

தானென்ற சாவதார சுருபாசத்தி
சர்வபாவ அராசத்தி தேவியாகும்
கானென்ற சர்வானந்தம் யிசத்தியாகுங்
கடியவாட சாகுசுரூபிணி யாகும்சத்தி
பானென்ற சர்வேப்பி சிதபலப் பிரதாசத்தி
பாங்கான வுன்பதத்தில் பதியவைத்து
தேனென்றே யர்ச்சித்துப் புட்பந்தூவி
சோடசமா வுபசாரஞ் செய்திடாயே. (314)

செய்திடவே சூழ்ந்திருக்கு மட்சரத்தைக்கேளு
செயமான இறிங்கிலிங்பெலங்கவுமாகும்
முய்திடவே மூலத்தால் செபத்தைப்பண்ணி
முயற்சியா யாறுவா பரணமாகும்



எய்திடவே யெட்டாகுங் கோணத்துள்ளே
யிருக்கின்ற சத்திதனை யியம்பக்கேளு
வெய்திடவே வசினியம்பா தேவியாகு
மகாகாமேஸ்பரியம்பா தேவியாமே. (315)

தேவியாம் சத்தினி சத்தியாகுஞ்
செயவிமலா சத்தியொடு அருணர்சத்தி
ஆவியாஞ் செயினிசத்தி சர்வேஸ்வரியாகு
மழ்கான கவுளினி சத்தியாகும்
தாவுயா மெண்கோணத் துள்ளேநிற்குஞ்
சத்திசுயம்பான வட்சரத்தைச் சூட்டக்கேளு
ஏவியாம் இறிங்சிறிங் சவ்வுமாகும்
ஏத்தமாய்த் தொழுதிறைஞ்சி யர்ச்சிப்பாயே. (316)

அர்ச்சிக்க வேழுவா பரணமாகு
மழகான திரிகோணத் துள்ளே கேளு
பார்ச்சிக்கப் பாணிநிசா பினியாகும்
பாசினி அங்குசனி சத்தியாகும்
கர்ச்சிக்கக் காமேஸ்பரி பாதுவாகுங்
கடாக்ஷித்த வச்சிரேஸ்பரிபக மாலினியாகும்
தூர்ச்சிக்க ஆயுததே வதைதான்தன்னைச்
செபம்பண்ணித் தொழுதிறைஞ்சித் தெண்டம்பண்ணே.

பண்ணியே யட்சரத்தைச் சொல்லக்கேளு
— பரிவான யாங்ராங்லாங் வாங்சாங்வாகும்
திண்ணியே திராங்திறிங்கிலிங் புலூங்சவ்வாகும்
போானலூங் இறிங்குரொங்கு ரொங்வுமாகும்
அண்ணியே யட்சரங்கள் திபானித்தோதி
அட்டமா வாபரணங் தாண்டிப்பின்பு
விண்ணியே விந்துவினில் விரைந்துநின்ற
விளங்கியதோ ரட்சரத்தின் விவரங்கேளே. (318)

விவரங்கேள் அசிஇறையுங் அசிற்சிலிங்
அசிறவவும் விரைந்தெழுதி யர்ச்சிக்கும் விவரங்கேளு
திவரங்கேள் தெட்சணத்தா லர்ச்சிக்க வேண்டாஞ்
செயந்தரவே வாமத்தால் செபித்துப்பூசி
புவரங்கேள் வஸ்துவென்ற கடத்தைவாங்கிப்
புகழான திரிகோணம் விந்துவிட்டு
அவரங்கேள் தினமேலே கடத்தைவைத்து
ஆதிவன்னிக் கலைகளெல்லாஞ் சோதிச்சேரே. (319)

சோதிச்சே சித்தருட சாபம்போக்கி
   சக்கிரசாப விமோ சனமும்பண்ணி
வாதிச்சே மாதுருகா நியாசம்பண்ணி
   மகத்தான வஞ்செழுத் தியானம்பண்ணி
பாவிச்சே காமகளாய் நியாசம்பண்ணி
   பரிவான சடங்கமென்ற நியாசம்பண்ணி
காவிச்சே வெகு சோடா நியாசம்பண்ணி
   காபதமு மங்கமுமே நியாசம்பண்ணே. (320)

பண்ணடா பத்திரங்கள் பரப்பிவைத்து
   பரிவாகச் சங்கம்வைத்து வஸ்துபூரி
துண்ணடா சுத்தியது பாத்திரத்தில்வைத்து
   செபித்துமே மூலத்தால் விபூதிபோட்டு
விண்ணடா வெற்றிலையால் பாத்திரத்தைமூடி
   வேதாந்த சின்மயமாங் குருவைப்போற்றி
அண்ணடா சக்கரத்தை யபிஷேகமாடி
   யர்ச்சித்துச் சந்தனங்கள் புஷ்பம் போடே. (321)

போட்டுமே பலகாரம் பழவர்க்கங்கள்
   போரான சடையன்பா தாளசுத்தி
கூட்டுமே குக்குடங்க ளண்டமச்சங்
   குறைவில்லாப் பசுவோடு பரமானங்கள்
ஆட்டுமே யன்னமொடு பாலுந்தேனும்
   அடுக்கடுக்காய்க் கறிவகைக ளெல்லாம்வைத்து
நாட்டுமே யஷ்டதிக்குப் பந்தனம்பண்ணி
   நற்றீபத் தூபமொடு பணிகள்மாறே. (322)

மாறியே விந்துவினில் திரிபுரசுந்தரி
   மாவேதந் தோத்தரித்து தெண்டம்பண்ணி
தேறியே திரிசதையன் சக்கிரநாமக்
   துதித்துமே மூலத்தால் செபத்தைப்பண்ணி
நாறியே யிருந்தசபம் மோட்சம்வேண்டி
   நமக்கருள வேண்டுமென்று தியானம்பண்ணி
வீறியே வேண்டியதெல் லாமளிக்க
   வேணுமென்று கைகூடி விரும்பிடாயே. (228)

விரும்பியே காமகலா ரூபியென்று
   விந்துசக் கிரவிலயே பிர்மசக்கிரே
வரும்பியே மகோட்டியான பீடசக்கிரே
   மகாபரப்பிர்மாத்தும் சகத்திமா தாதியே



திரும்பியே திரிபுரசுந்தரிய மடறவே
   செகச்சால மாட்டிவித்த திரிபுரசுந்தரியே
உரும்பியே யோனிமுத் திரையைக்காட்டி
   உத்தவா மருளவென்று வுரைத்திடாயே. (324)

உரைத்தபின்பு திரிகோணத் திரிபுரையம்பாசக்கரம்
   உதவுவாய் சர்வசித்திப் பிறதாயினியென்று
விரைத்தபின்பு விஷ்ணுவாதி செவிதம்சியே
   மிக்கபரா பாரகசிய யோகினியாயே
வரைத்தபின்பு வஸ்துசுத்தி பலவகைகள்வைத்து
   வகைவகையாய்த் தீபதூபங்கள் மாறி
கரைத்தபின்பு பீசமுத் திரையைக்காட்டி
   கடாக்ஷிக்க வேணுமென்று கருதிடாயே. (325)

கருதியே வெண்கோணத் துள்ளேநின்ற
   காரணமாஞ் சத்திகட்கு வஸ்துசுத்திவைத்து
சுருதியின் வாக்கியத்தால் துதித்துப்பூசி
   தொழுதிறைஞ்சித் தூபதீபங்கள் மாறி
நருதியேகா மேஸ்பரிகா மேஸ்பரனே
   நடயியோ நமாவென்று ஓதுஓது
அருதியே காமேஸ்பரிகாமேஸ்பர பாசாப்பியா
   அதிக்காமேஸ் பரிகாமேஸ்பர அங்குசாவே. (326)

அங்குசா நமாவென்று அடிவணங்கி
   யழகான கேசரிமுத் திரையைக்காட்டி
பங்குசர்கள் பத்துக்கோ ணத்துள்ளே
   பரிவான சுத்திகட்குவஸ்து சுத்திவைத்து
தூங்கசா மூலத்தால் செபத்தைப்பண்ணி
   தொழுதிறைஞ்சிச் சோடசமா முபசாரஞ்செய்து
மங்குசாமங்குசா முத்திரையைக் காட்டி
   வாதமொரு வசியங்கள் வகையைக்கேளே. (327)

வகையான வெளிபத்துக் கோணத்துள்ளே
   மருவிநின்ற சத்திகட்கு வஸ்துசுத்திவைத்து
தகையான தீபதூபங்கள் மாறி
   செபத்திலுள்ள வினையால வேணுமென்று
முகையான மூலத்தால் செபத்தைப்பண்ணி
   மிக்கசர்வோன் மாதாநீமுத் திரையைக்காட்டி
பகையான தநுநீக்கி வசியம்தாவென்று
   பாதமது பணிந்தேத்திப் பரவிடாயே. (328)

பரவியே சதிரானு கோணத்துள்ளே
பகையான சத்திகட்டி வஸ்துசுத்திவைத்து
புரவியே புஷ்பத்தா லர்ச்சித்தேத்திப்
போக்கான தீபதூபங்கள் மாறி
சரிவியே சர்வசங்கரி முத்திரைகாட்டி
தாயான திரிபுரவா சினியைப்போற்றி
அரிவியே யறுபத்து நாலுசித்தி
ஆடுதற்கு வகைசொல்லு அம்மாவெண்ணே. (329)

எண்ணவே யெட்டிதழி னுள்ளேநின்று
யேத்தமாஞ் சத்திக்கு வஸ்துசுத்திவைத்து
பண்ணவே பழவகைகள் பலவர்க்கங்கள்
பாயசங்கள் பலதீபம் பணிகள்மாறி
மூண்ணவே மூலத்தால் செபத்தைப்பண்ணி
முயன்றசர்வா கருஷணி முத்திரைகாட்டி
பண்ணவே மோட்சமெனக் களித்திடுநீயென்று
பாலையே திரிபுர மீனாட்சியென்னே. (330)

ஆட்சிஎன்ன மாயாசத்தி தனத்தினுள்ளே
யமர்ந்திருந்த காட்சியின் பிரகாசத்தி
பாட்சியாம் பழவகைகள் பதார்த்தமன்னம்
பலபல பதார்த்தங்கள் பணிகள்மாறி
காட்சியாஞ் செபம்பண்ணி மூலந்தன்னால்
கடாக்ஷிப்பாய்த் தாயெனது கருத்தையுன்னி
தாட்சியாஞ் சர்வஸ்திரா வணிமுத்திரை
சமரசமாய்க் காட்டியே யஞ்சல்பண்ணே. (331)

பண்ணியே சதுரவரை மூன்றுவீதி
பராபரியாந் தையலுக்குப் பானஞ்சுத்தி
கண்ணியே கனிவர்க்கங் கறிகாயன்னங்
கருத்தோன்றிப் பூசித்துக் கருணைகூர்ந்து
திண்ணியே மூலத்தால் செபத்தைப்பண்ணி
திரிசதையா லர்ச்சித்துத் தெண்டன்பண்ணி
சண்ணியே சர்வசய்ஷோபிணியா
முத்திரைசமர்த்தாகக் காட்டிலே தாயைப்போற்றே. (332)

போற்றியே தேவியுட கோட்டத்துள்ளே
பேர்பெரிய வயிரவர்கள் வயிரவர்சத்தி
எற்றியே கடத்துடனே வஸ்துவைத்து
இலமாகச் சுத்தியொடு மதுக்கள்கள்ளு



வாற்றியே வடைதோசை மூவிளக்கு
மாவிளக்கு அன்னமொடு மாங்கிஷங்க
பாற்றியே பாலோடு பழங்கள்பானம்
பயரோடு பணியாரம் பத்தவைத்தே. (333)

பத்தவே வைத்துமே தியானம்பண்ணி
பண்பாகத் தேவியுட மூலந்தன்னால்
நத்தவே செபம்பண்ணித் தோத்தரித்து
நமக்கான வரமருள வேணுமென்று
சுத்தவே தோத்தரித்துத் தெண்டம்பண்ணித்
துடியான சோடசவுப சாரஞ்செய்து
தித்தவே திரிகண்டமுத் திரையைக்காட்டி
செபம்பண்ணிச் செய்தபவந் திறப்பாயென்னே. (334)

திறக்கவே முன்கோட்ட முகவரைக்குள்ளே
சுத்திநிற்குஞ் சத்திக்கு வஸ்துசுத்தி
பார்க்கவே பழவகைகள் பதார்த்தமன்னம்
படைத்து மூலத்தால் செபத்தைப்பண்ணி
ஏர்க்கவே யோகசித்தி ஞானசித்தி
யெளிதிலோ வாதசித்தி கெவுனசித்தி
ஆர்க்கவே யளித்தருள வேணுமென்று
அடிவணங்கி யஞ்சலிபந் தானம்பண்ணே. (335)

பண்ணிவரை கோட்டத் திப்பால்
பண்பாகச் சுத்திநிற்குஞ் சத்திகேளு
எண்பான யிந்திரசத்தி யக்கினிசத்தி
யெமன்சத்தி நிருதிசத்தி வருணன்சத்தி
விண்பான வாய்வுசத்தி சோமசத்தி
மகத்தான வரசான சத்தியோடு
விண்பான பிரமசத்தி விஷ்ணுசத்தி
மிக்கான சத்திதன்னை யர்ச்சித்தேத்தே. (336)

அர்ச்சித்து அதிரசங்கள் வடைபணியாரங்கள்
அசம்சசம் ஞானியொடு வஸ்துவைத்து
துர்ச்சித்துச் சோடசமா முபசாரஞ் செய்து
தோத்தரித்து மூலத்தால் செபத்தைப்பண்ணி
கொர்ச்சித்து கெவுனவழி தெரியவேணும்
குளிகைசித்து வாதசித்து வரவேவேணும்
தர்ச்சித்து வளித்தருளுந் தாயேயென்று
சாஷ்டாங்க நமஸ்காரம் பண்ணிடாயே. (337)

பண்ணியே தேவதைகள் தன்னைப்போற்றிப்
பாங்காக அட்சரங்கள் பதிந்துதேக்கி
எண்ணவே அட்சரமாம் இரியும்சிரியும்
உற்பனமாய்த் ததிலிம் உகந்துசாத்து
வன்னியே திக்குவிட்டு வாசல்தன்னில்
மகத்தான தேவதையின் பேருகேளு
கன்னியே கீழ்முகத்து வாசல்தன்னில்
கலங்காத ஷேத்திரனும் வடுகன்தானே. (338)

தானென்ன மேல்முகத்தில் கணபதியுங்கந்தன்
தளுக்கான வடவாசல் சூலியொடுதாக்கி
தேனென்ற தென்வாசல் வீரபத்திரன்
காளிதுடியாக வாசலிலே நிற்பார்பாரு
கானென்ற வவரவர்க்கு வெவ்வேறாகக்
கனமான வயதுசுத்தி கனிகள்காய்கள்
பானென்ற பதார்த்தமொடு பலகாரமன்னம்
பரித்துவைத்து சோடசம்பா வினைகள்பண்ணே. (339)

பண்ணப்பா அகாரமுதல் க்ஷகாரவரைதானும்
பாங்கான வாசல்சுத்தி பதித்துவைத்து
தெண்ணப்பா திரிகண்ட முத்திரையைக்காட்டி
செபம்பண்ணி மூலத்தால் செபித்துப்பின்பு
சூல்ணப்பா சக்கரத்தைச் சூழ்ந்துநின்ற
குறிப்பான தேவதையின் பேருங்கேளு
தெண்ணப்பா தென்புறத்தில் தட்சணாமூர்த்தி
தெளிவான வடபாகஞ் செப்பக்கேளே. (340)

கேளுநீ கண்டகேசரந் தானுமாகும்
கெடிதான யீசானியம் ஆதித்தனோடு
வாறுநீ வயிரவனு நிற்பாரையா
மகத்தான கீழ்முகத்தில் சுரதேவர்பிரங்கி
வேறுநீ மேல்முகத்தில் துவாரமாவாள்
மிடுக்கான யிவர்களுக்கு மிடுக்கானவயதுசுத்தி
கேளுநீ சோடசமா முபசாரஞ்செய்து
செபம்பண்ணி மூலத்தால் தெண்டம்பண்ணே. (341)

செய்யடா திக்குவிட்டு பீடசத்தி
தேவதைக்கு வஸ்திசுத்தி பானம்பண்ணி
பய்யடா பாலன்னம் பதார்த்தங்தேனும்
பயரோடு பழவகைகள் பலதீபங்கள்



அய்யடா வர்ச்சித்துப் பணிகள்மாறி
யஞ்சலிபந் தனம்பண்ணி யடியேன்செய்த
பொய்யடா பிழைபொறுக்க வேணுமென்று
போற்றியே செபம்பண்ணிப் பொலிதான் போடே. (342)

போடவே வயிரவரைத் தியானம்பண்ணிப்
புகழ்வடுகன் மூலத்தால் செபத்தைப்பண்ணி
காடவே பதார்த்தம்வைத் தர்ச்சித்தேத்தி
கடந்தயீசா னத்தில் பெலிதான்போடு
தேடவே சிறிவிசார கேசுராய்
திறமாக உம்பிடு சுவாகாவென்று
ஆடவே யக்கினியா மூலக்குள்ளே
யடவான யோகினிக்குப் பெலிதான்போடே. (343)

பெலிபோடு பூதபெலி சர்வபூதப்பிரியா
போராக வும்படு சுவாகாவென்று
நெலியோடு நிருதியுட மூலக்குள்ளே
நேரான சிறிராசராசசெசுபராயவும்படு சுவாகாவென்று
உலியோடு லட்சமுரு வோதித்திரு
உத்தமமாம் வாயுவுட மூலக்குள்ளே
நலியோடு பராசத்தியால் பொய்யாகும்
நலமான சக்கரத்தின் தெட்சணத்தில்கேளே. (344)

தெட்சணத்தில் தெண்டினிக்குப் பூசைபண்ணு
சியாமளையை வுத்திரத்தில் பூசைபண்ணு
மட்சணத்தில் மச்சமுத் திரையைவிட்டு
மகத்தான சோடசமா முபசாரம்பண்ணு
உட்சணத்தில் மத்தியிலே யோகினிக்குப்பூசை
உண்மையாம் போதனையே யுரைக்கக்கேளு
பிட்சணத்தில் பிண்டகுலி யோகினியம்பா
பெரும்பாத குளயோகினி யம்பாதானே. (345)

தானான ரூபகுள யோகினியம்பா
தமிருபா திதகுள யோகினி யம்பா
ஆனான யோகினியாஞ் சத்திதன்னை
அந்தரத்தில் தியானித்துப் பூசைபண்ணு
கோனான கிழக்கேதான் மாதங்கிபூசை
கொடிமேற்கில் சாமளா பூசைபண்ணு
வானான வாய்வினுட மூலக்குள்ளே
மகத்தான சத்தியைநீ யலங்கரித்துவையே. (346)

வைத்துமே பாதத்தில் நீராட்டித்தான்
மலர் தூவிச் சுகந்தங்கள் வரைந்துச்சுத்தி
பைத்துமே பரையாகத் தியானித்துத்தான்
பாகமாங் கடத்துக்கு விபூதிசாத்தி
கைத்துமே யவள்கையிலே கடங்கொடுத்து
கடந்தனையே வாங்கியே சிரசில்வைத்து
தைத்துமே சந்திரனி லமுர்தமாகச்
சாதித்து ஐந்தெழுத்துஞ் சோடசமுமோதே. (347)

ஓதியே கடத்துள்ளே தாய்தான் தன்னை
யுண்மையாய்ப் பாவித்துச் சங்குநீர்கொண்டு
சாதியே சகலமெல்லாஞ் சுத்திசெய்து
சதுராகப் பிராணாயம் பண்ணித்தீர்ந்து
போதிய பஸ்மாங்கம் விபூதிபூசி
புலித்தோலின் மேலிருந்து செபத்தைப்பண்ணி
சாதியே கடத்துக்குள் கலையனூட்டி
கனமான பாத்திரத்தைப் பரப்பிவையே. (348)

பரப்பியே பாத்திரத்தின் பேரைக்கேளு
பாலிப்பாய் சங்கமொன்று குருக்காளென்று
பரப்பியே போகமொன்று ஆகாரமொன்று
பெரியோடு லுக்துவைத் துப் பின்புகேளு
பரப்பியே வஸ்துவைத்தான் ஆகாரத்தூட்டி
மைமந்தனே நாகவல்லி யிலையாற்றால
குரப்பியே விரதமொடு புஷ்பஞ்சாத்திக்
கெடியான தியானமொடு செபத்தைப்பண்ணே. (349)

பண்ணியே லாதரம் பிரமாந்திரமட்டும்
பாழ்போன வாசியெல்லாஞ் சோதித்தேறி
அண்ணியே தளத்திலிருக்குஞ் சத்திசிவமெல்லாம்
அர்ச்சித்து அவரவர்க்கு அஞ்சல்பண்ணி
தண்ணியே வடிக்காத்தில் புஷ்பம்வாங்கிச்
சாதகமா யிடக்காரத்தை சுத்திவஸ்துவாங்கி
குண்ணியே குருபதத்தில் குருநவைநோக்கிக்
குருவிடட பாத்திரத்தைக் குணமாய்க்கொள்ளே. (350)

கொள்ளவே சிவத்துவம் வித்தியாதத்துவம்
குணமான பாதத்துவம்தெரிந்துகொள்ளு
துள்ளவேஸ் சமாதிகற்பம் செப்பக்கேளு
தாபதேக சுத்தான தேகமுணர்சோதி



விண்ணவே குண்டலியால் வாசிவைத்து
விளங்கியொரு பாத்திரத்தை வாங்கிக்கொண்டு
தெள்ளவே சிவசத்தி யிருவரையும்
நோக்கிதிரி மூர்த்திபாத்திரமாய் வாங்கிக்கொள்ளே. (351

வாங்கியே சத்திக்குப் பாத்திரத்தையீந்து
மகத்தான அன்னமொடு பானம்பண்ணி
ஆங்கியே ஆலத்தி கற்பூரதீபம்
ஆட்டியே ஆயியைத்தா னஞ்சல்பண்ணி
தேங்கியே சேஷிகா பெலியைப்போடு
தெண்டநிட்டு அடிவணங்கிச் செபத்தைப்பண்ணு
ஓங்கியே வுச்சிஷ்ட பயிரவத்தின் பெலியை
வுட்போட்டுப் புரோட்சித்து வுரைக்கக்கேளே. (352)

உரைக்கவே சக்கரத்தை யிருநயத்துள்ளே
யுகந்துமே பெருந்தருளப் பண்ணிவித்து
தரைக்கவே கருவருக்கும் வஸ்துசுத்தி
சாங்கமாய்ப் பதார்த்தமொடு அன்னமீந்து
துரைக்கவே சுகாசனத்தி லிருந்துகொண்டு
சுயாதி தவானந்த புளகமாகி
அரைக்கவே ஆதார தெரிசனம்பண்ணி
அரகரா சிவசிவா அம்மாவென்னே. (353)

என்னவே பராசத்திமகா சத்தியாகும்
எங்குள்ள தையல்மா தேவியாகும்
அன்னவே யனியொத்த பெண்பிள்ளையாகும்
ஆனந்த சுந்தரியாமின் னொளியாளாகும்
தென்னவே சிவகதிக்கு வழிகாட்டும்தெய்வஞ்
சிறுபிள்ளை பேசரியான் மவுனியப்பா
முன்னவே முக்கண்ணிலே தாதி நாலின்
விளங்கும்பரா பரியாகும் மெல்லியாமே. (354)

மெல்லியே மேதினிக்கு விளங்குஞ்சித்த
மிக்கான் காரணியே வியன்சூழாவாம்
தல்லியே சகமனைத்தும் தாயானினந்
தயாநிதியே சச்சிதா னந்தவெள்ளத்
தெல்லியே யெங்குமா யிருக்கின்றாளே
எனையளிக்கும் தெய்வமே யேழைபங்கில்
செல்லியே திரிபுரசுந்தரி யம்மாளே
செகமின்றி கன்னியே தெய்வமின்னே. (355)

என்னவே யிப்படிதான் பூசைசெய்வார்
ஏத்தமாஞ் சிவயோகத் தட்சதைபெற்றோர்
நன்னமே ஞானசத்தி நிர்த்தஞ்செய்வாள்
ஞானமொடு வாதசித்தி யோகசித்தியீவாள்
வன்னவே யிதுபூட்டு வாமத்துக்கு
வகையறியக் குருபதத்தில் தொண்டுபண்ணு
பொன்னவே வாமிகள்தான் வெறும்பூசைகள்
போதவே பாணித்து அலைவார்தானே. (356)

அலைத்ததினா லாமோதா னாதாரசித்தி
யலைபாமல் சமாதிதனில் பொருந்திவாழும்
உலர்ந்ததினால் வாதமொடு குளிகையாமோ
வுற்பனமாஞ் சாத்திரத்தி லுரைத்தாலாகும்
துலைந்ததினாற் சித்தாமோ காயசித்தியாமே
சூட்சமெல்லா முட்புகுந்து சோதித்தாலாகும்
கிலைத்ததினால் மனமங்கே ஞானமாமோ
கூடினால் பெண்ணோடே கடம்போச்சே. (357)

போச்சென்று விடாதே மவுனப்பிரமை
போக்கோடே விட்டுவிட்டு அறிவிற்கூட்டு
நீச்சென்று விடாதே காயசித்தை
நிலையாறு கலங்களெல்லா நினைவாய்ச்சோதி
ஆச்சென்று விடாதே வாதந்தன்னை
யடங்காத சரக்கெல்லா மடக்கிக்கட்டு
நீச்சென்று படர்ந்தாப்போ லட்சரங்களெல்லாஞ்
சோதிக்க பூசைவிதி மூன்றுமாமே. (358)

ஆமப்பா வமிட்டகர்ம வித்தையெல்லா
மசையாத மவுனத்தி னேர்மையெல்லாந்
தேமப்பா தீட்சைவிதி பிராணாயாமஞ்
செயலான வாதசித்தி காயசித்திதானும்
வாமப்பா சிங்கியொடு குளிகைமார்க்க
மகத்தான முத்தியின் வசிகளெல்லாம்
ஏமப்பா சாஸ்திரமே மூவாயிரத்தி
லெழுதினேன் போக்கோடே யிதமாய்ப்பாரே. (359)



வெடியுப்பு சுன்னம்.

போக்கான வெடியுப்புக் கட்டைக்கேளு
போடுகிறேன் கெடியாரம் நிகண்டுக்குள்ளே
நோக்கான வுற்பனங்க ளிதினாலாச்சு
நொடிக்குள்ளே வோடுகிற குளிகையாச்சு
வாக்கான வாதசித்தி காயசித்தியாச்சு
வகைவகையாய்க் கட்டுகிற குருவுமாச்சு
நீக்கான சத்திரங்கள் மெத்தவுண்டு
நினைக்கவென்றால் வெகுகடினம் நினைவாய்ப்பாரே. (360)

கடினமாந் தலையான வெடியுப்பைத்தான்
கட்டரிது கட்டினா லவனேவாதி
படினமாம் வெடியுப்பு பலந்தானு
பழம்புளிதா னஞ்சுபத்து பலமுமாகும்
வடினமாங் கல்லுரலில் போட்டுக்கொண்டு
மகத்தான வுலக்கையா லிடித்துநைய
அடினமா யாறுநா ளிடித்துமைபோல்
அகல்போல வில்லைபண்ணி யுலரப்போடே. (361)

உலர்ந்தபின்பு புதுச்சட்டி யடுப்பிலிட்டு
யுசிதமா யெரியிட்டு வொவ்வோரீய
அலர்ந்தபின் னெரிந்ததெல்லாம் தவளம்போல
ஆக்கிரமாய் தம்பித்து அடங்கிநிற்கும்
கலந்துமே கத்தியால் கரண்டிவாங்கிக்
காரியமாம் பீங்கானில் பரப்பிவைக்க
சிலந்துமே யிஷ்டபடியெல்லாம் செயநீராகும்
தியச்சிடாம் நீர்தன்னின் சிறப்பைக்கேளே. (362)

சிறப்பான நீர்தன்னின் மகிமைசொல்ல
சிவனாலு முடியாது மற்றோர்காணார்
கறப்பான வழலையென்ற கருதானைக்கும்
காரணமாஞ் சித்தரெல்லாங் கருமறைத்தார்
விறப்பான வேறுகும் பூமிநாத
மிரண்டாகும் பூநாதமுப சரத்தின்குருத்தான்
குறப்பான விதுரண்டால் வாதமாச்சு
கொள்கியிதை விட்டாக்கால் கூடப்போச்சே. (363)

போச்சென்று யெண்ணாதே வுப்புக்கட்டும்
பொன்னான தூரிசுகட்டும் காரங்கட்டும்
நீச்சென்று சாரமுதற் பூரங்கட்டு
நிலக்கமட்டுங் கைமுறையாய் நினைவாய்ப்பாரு
ஆச்சென்று மடபதிகள் முன்பின்னாய்ச்சொன்ன
ரதனாலே வாதமெல்லாந் தலைநீழாச்சு
மூச்சென்ற ததுவடங்கில் சடநில்லாது
முனையான சுழிமுனையின் வழியிற்போமே. (364)

வழியோடே சென்றேறி யாறுதலம்புக்கி
மகத்தான நிராதாரத் துள்ளேசொக்கி
சுழியோடே தமர்வாசம் வழியைநீக்கி
சுகாதீத பூரணத்தில் சொக்கிறாப்போல்
விழியோடே வேறான தேகசுவத்தில்
வீரம்விட்டு பூரம்விட்டு விரைவாய்வைத்து
தழியோடே சாரமது பலந்தானொந்து
சமர்த்தாகக் கல்வத்தில் போட்டிடாயே. (365)

போட்டுமே பூநாகச் செயநீராலே
பொடித்திட்டு அரைத்துமே யேழுநாள்தான்
ஆட்டுமே செயநீரை விட்டுவிட்டு
அதட்டியரை யகலாம லணிந்துப்போட்டு
வீட்டுமே சில்லைபண்ணிக் காயப்போட்டு
மிடுக்கான குகைதனிலிட்டு புடத்தைப்போடு
நாட்டுமே நிறைசரியாய்ச் சுண்ணமாகுந்
சுகமான பீங்கானில் பரப்பிவையே. (366)

பரப்பிவைக்கப் பலமிலனைச் செயநீராகும்
பாங்கான யிந்நீரில் வீரம்பூரம்
உரப்பிவைக்க யிட்டுமே ஒருநாள்தானும்
உருட்டியாய் சாரமது கட்டிவாங்கி
அரப்பிவைக்க அண்டம்போல் ஒருபலத்தைத்தீவி
ஆண்மையாம் நீர்தோக்கி ரவியில்போட்டு
நிரப்பிவைக்க பட்சமொன்று போட்டுவாங்கி
நேர்மையாங் கவசத்தின் நிலமைகேளே. (367)

கேளுமே சீனமொடு வெள்ளையுப்பு
கெடியான சவுட்டோடு கல்லுப்புமிந்து
வாளுமே வகைக்குதுரு பலந்தான் தூக்கி
வகையான வெடியுப்பு நீராலாட்டி



யேளுமே யேழுநா ளரைத்தபின்பு
யிதமாக ஓட்டிவிட்டு ஊதிப்போடு
சூளுமே சுண்ணம்பாஞ் சாரத்தின்மேல்
சுகமாக மேலித்து கவசங்கட்டே. (368)

கட்டுவது வெடியுப்பு நீரினாலே
காய்ந்தபின்பு கருதாரி புடமாய்போட்டு
குட்டுவது குக்குடத்தின் புடத்தைப்போடு
கொள்கியபின் கவசத்தை உடைத்துவாங்கி
தட்டுவது தங்கம்போல் சாரங்காணும்
சகலதுறை யிதுக்குள்ளே தயங்கிப்போகும்
ஒட்டுவது பூரத்தை ஒட்டியோடு
ஓடுக்கமிது தொந்தமிது வணிப்பாரே. (369)

ஆட்டியே யேழுநா ளரைத்துமைபோல்
ஆண்மையாம் நீரதனில் குழப்பிக்கொண்டு
காட்டியே கல்லுப்பில் தோச்சுவாட்டி
கவசம்போல் பிடித்ததன்பு முன்னிக்கும்கவசம்
நீட்டியே நீர்தன்னி லரைத்துமைபோல்
நிலவரமாய் யதின்மேல் கவசம்கட்டி
தட்டியே உலர்ந்தபின்பு சவுட்டுமண்தான்
தாக்கான கலயத்தில் பாதிபோடே. (370)

பாதிமேல் உப்பையெல்லாம் பரப்பிவைத்து
பாங்கான அதின்மேலே மண்ணைப்போட்டு
மீதியெல்லாம் மேலோடு கொண்டுமூடி
மிடுக்கான சீலைசெய்து குழியில்வைத்து
ஆகியே அன்பதெரு அடுக்கிப்போடு
ஆறவிட்டு யெடுத்துப்பார் தங்கம்போலாம்
வாதியாம் வாய்வாதம் கெட்டுசுட்டால்
வருமோதான் யிந்தஉப்பின் வளப்பங்கேளே. (371)

வளப்பமெல்லாம் உப்பாலே மைந்தாகேளு
வருகுமப்போ பொஞ்ஞான வர்தமாகும்
தளப்பமென்று யெண்ணாதே சமுசயங்களில்லை
சங்கற்ப கேற்பமென்ற சட்டைநீக்கும்
யிளப்பமொன்று வாராது யேமசித்தியாகும்
இழுக்கான சாக்கையெல்லாம் பெ.ணமாய்கட்டு
அளப்பமென்று ஆகார சித்தியாகும்
அறிவிலே புக்கிநின்று அண்ணாத்தாண்டே. (372)

உண்ணவே உப்பைவிட்டால் ருசியோபோச்சு
ஓடுகிற காலுக்கு உறுதிபோச்சு
கண்ணவே கையோச்சு காயசித்திபோச்சு
கருத்தாணி ஓடுகிற வாசிபோச்சு
பண்ணவே பரந்தோடும் குளிகைபோச்சு
பயமென்ற நாசமத்து பஞ்சாய்ப்போச்சு
அண்ணவே உப்பில்லா கருமமெல்லாம்
மழிப்பாச்சு ஆதியுப்பின் ஆண்மைபோச்சே. (373)

ஆண்மையாம் உப்படக்கி கட்டினக்கால்
அறுபத்து நாலுசித்து ஆடலாகும்
வாண்மையாம் வாதமது ஏவல்கேட்கும்
மகத்தான யோகசித்தி காயசித்தியாகும்
கேண்மையாங் கெவுனசித்தில் ஓடலாகும்
கெவுனத்தில் சித்தருக்குள் கீர்த்தியாகும்
தாண்மையாம் சமாதிக்குள் ளிருக்கலாகும்
சரக்கெல்லாம் கால்வாரி யடிக்கலாமே. (374)

அடிக்கலாங் கட்டினதோர் கல்லுப்பாலே
அறுபத்து நாலான பாஷாணங்கள்
உடிக்கலாம் உபசரங்கள் நூற்றிரண்டு
உப்பாகும் பிறுபத்து அந்தநாலும்
நொடிக்கலாம் நிமிஷத்தில் கட்டிப்போகும்
நொருங்கியதோர் சத்தெல்லாம் மெதுவுதானும்
படிக்கலாம் வேதாந்த கூட்டத்தோடு
பராபரைத்தான் முன்வந்து பாஷிப்பாளே. (375)

பாஷித்தால் சகலகரு வெல்லாந்தோற்றும்
பராபரைக்கு வனத்துசத்தி பானமீய்வாய்
தூஷித்தால் துரைகளெல்லாம் பொய்யாய்ப்போகும்
துரோகியாய் சட்டைஇலந்து சூட்சங்காணாய்
பூஷித்தால் வாமத்தைப் பொருளுங்காண்பான்
பூதசித்தி காயசித்தி பொன்சித்தியாகும்
ரோஷித்தால் குளிகையுமாம் குறிகள்காணும்
கூர்மையா மதினுடைய குணந்தான்காணே. (376)

காணப்பா கல்லுப்பை மணியைவாங்கி
கரியிலே மெள்ளவைத்து உருக்கிப்பாரு
பூணப்பா பொன்போலே உருகியாடும்
புகழாக நிரையதுவும் சரியாய்நிற்கும்



தோணப்பா கம்பியே ரரிகுச்சானல்
சுகமாக பூனீரு காரம்வீரம்
தாணப்பா சாரநீர் விட்டுஆட்டி
தவளமரை மணிமேலே பூசிப்போடே. (377)

மணிமேலே பூசியே உலர்ந்தபின்பு
வளையலுப்பு பலம்பத்து பொடியாய்ப்பண்ணி
கணிமேலே கலயத்தில் பாதிவைத்து
கல்லுப்பு நடுவைத்து மேலும்போட்டு
தினிமேலே சில்லிட்டுச் சீலைசெய்து
செப்பமாய் நூறெருவில் புடத்தைப்போடு
அணிமேலே ஆறவிட்டு யெடுத்துப்பாரு
அரகரா வயிரம்போல் மணியுமாமே. (378)

வயிரமா மணிநின்று உருகும்போது
மாட்டுநீ ஞலுக்கு ஒன்றுதங்கம்
தயிரமாம் தங்கம்பிடை ஞகம்போடு
தன்னகத் திடைபோடு சூதம்தன்னை
துயிரமாஞ் சூதயிடை கெந்திப்போடு
சூட்டயிலே காரத்தை ஒக்கவிட்டு
கயிரமாம் எடுத்துடனே களங்கமாகும்
கணக்கான நவலோகம் நூற்றுக்கொன்றே. (379)

ஒன்றான கலங்கத்தைக் குன்றியுண்ணு
உத்தமனே யுகாந்தவரை யிறுத்துந்தேகம்
தன்றான சட்டைக்கு பாலையாகும்
சந்திரன்போல் சூரியன்போல் தேகமாகும்
குன்றான மலைதனிலே குத்தினக்கால்
குழுங்கியே தவிடுபொடி மாவுமாகும்
உன்றான உப்பினுட வுறுதிபோல
ஒன்றுக்கு மில்லையில்லை உத்துப்பாரே. (380)

உத்துமே உப்பான மணியைவாங்கி
உறுதியாம் வீரமொடு புழுகுசீனம்
தத்துப்பார் சாரநீர் விட்டுஆட்டி
தன்மணிமேல் பூசியல்லோ உலரவிட்டு
புத்துப்பார் புளிப்பரணி சாம்பல்தன்னில்
புதைத்துமே புடம்போட பூப்போலாகும்
கொத்துப்பார் குருவென்ன நாமமாச்சு
கொள்கியிந்த குருவறியார் குருடர்தானே. (381)

குருவிட்டர்தான் குருவறிந்து செய்யமாட்டார்
கூகூகூ யிதினுடைய கூர்மைமெத்த
திருடர்தான் குருவாச்சு செயனீராச்சு
செந்தூர மாச்சுதென்பார் திருட்டுவாதி
அருடான லோகமெல்லாம் வேதையாகும்
அப்பனே அதிகவித்தை யாருஞ்சொல்வார்
புருட்டர்தான் உப்புனுட குருவைக்கண்டால்
போக்கான கோடிதொழில் உப்பிலாச்சே. (382)

உப்பான குருவதுவும் பலந்தான்பத்து
உறலான சாரமது பலந்தான்பத்து
கப்பான கலவத்தி லிதனைப்போட்டு
கணக்காக வெழுநா ளாட்டுஆட்டு
அப்பனே அகலிலிட்டு புடத்தைப்போடு
ஆரவிட்டு பனியில்வைக்க செயநீராகும்
செப்பான செயனீரின் மகிமைசொல்ல
சிவன்தானும் முன்பின்னும் தியங்கினாரே. (383)

தியங்கினார் யிதினுடைய ஆட்டைப்பார்த்து
சின்மயமாய் குருவோடு சித்தரெல்லாம்
மயங்கினார் யிதினுடைய வர்க்கங்காண
ஆயிசொல்ல யான்கண்டு மகிழ்ந்தேனையா
கலங்கினார் காலாங்கி ஐயனாரும்
கருத்துனைத்த பின்புசொல்ல கருணைகூர்ந்து
தயங்கினார் சதுர்யுகம் பார்த்துபார்த்து
சாத்தினேனன் நிகண்டிக்குள் சாத்தினேனே. (384)

சாத்தினேனோர் நிகண்டிக்குள் வாதம்பொய்யோ
சதாசிவன்தான் ஒளித்திருந்த மூலம்பொய்யோ
ஆத்தினேனோர் அஷ்டாங்க யோகம்பொய்யோ
அண்டரண்டம் கடந்தோடும் குளிகைபொய்யோ
மாத்தினேனோர் வாதசித்தி காயசித்திபொய்யோ
மறைத்துவைத்த சவுக்காரஞ் சுன்னம்பொய்யோ
தூத்தினேனோர் உப்புனுட குருதான்பொய்யோ
சுணங்கவே சுன்னத்தின் சூட்சம்பாரே. (385)

பார்க்கவே சித்தான சவுக்காரந்தான்
பாடுகிறேன் சாத்திரத்தில் பண்பாயில்லை
யேர்க்கவே யிடும்பாக சொன்னாரென்று
யீசனுடன் கோள்சொல்வார் சித்தரெல்லாம்



கூர்க்கவே யீசனுக்கு கோபமாகும்
குணமான சட்டைமுனி தீட்சைவிதிசொன்னார்
சேர்க்கவே சித்தரெல்லாம் கூடிக்கொண்டு
தீட்சைவிதி யிருநூறும் வகுத்தார் காணே. (386)

காணப்பா சவுக்கார வர்மமஞ்சொன்னால்
கயிலாய சின்மயமும் கோபமாகும்
பேணப்பா துட்டருக்கு கோபமாகும்
பேர்பெரிய சித்தரெல்லாம் கோபமாகும்
ஆணப்பா ஆனந்தர் சொல்லுவோமா
அசட்டென்று விடுவோமே ஐயர்சொல்லு
தோணப்பா தொழுதிரஞ்சி தெண்டம்பண்ணி
சுகாதீத ஆனந்தர் சொல்லுவாரே. (387)

சொல்லுகின்ற என்குருவே பூரணமே அய்யா
சித்தாலல் சகலருந்தான் துதிசெய்வார்கள்
அல்லுமையா ஆதிசிவன் கோபமானால்
அனுசரிச்சு அஞ்சலிபெந் தனங்கள்பண்ணி
கல்லுமையா கரைத்தபேர் விசேஷஞ்சொல்லி
கடாக்ஷிக்க வேணுமென்றால் கருணைகூர்வார்
வில்லுமையா வளைத்தாலோ அம்புதைக்கும்
வெறுமரத்தில் அம்புதையா விதம்போலாமே. (388)

விதமான சவுக்காரம் தன்னைசொன்னால்
வெகுசெனருக் குபகார மானாலென்ன
திதமான சுகுர்தம்வந்து லபிக்குமையா
திருட்டான சவுக்காரம் நிறைதான்சொன்னால்
பதமான பாபம்வந்து பரந்துபோகும்
பாவித்தால் வெகுசித்தர் னூலுக்குள்ளே
அதமான தீயிலிட அகன்றுபோகும்
ஆகையால் வாதமெல்லாம் அசடாய்ப்போச்சே. (389)

அசடாக போகாமல் அரையுரேனன்
ஆனந்தா கவனமுற்று அறிவாய்க்கேளு
திசடான சித்திரைவை காசிக்குள்ளே
செங்கதிரோன் ரவிதன்னில் பொங்கிநீரும்
பசடாக பூனீறு பதக்குவாரி
பாண்டத்தி லிட்டுமே தண்ணீர்வாரு
திசடாக ஒன்றுக்கு ரெண்டுதண்ணீர்
சிறப்பாக வார்த்துமே கலக்கிடாயே. (390)

கலக்கியே மூனுநா ளானபின்பு
கசகாமல் தெளிவிறுத்து காச்சுகாச்சு
புலக்கியே பொடியான பதத்தில்வாங்கி
பேரான வெடியுப்பு நீரால்கட்டி
விலக்கியே வில்லைபண்ணி காயவைத்து
மீராதே புடம்போட்டு யெடுத்துவைப்பாய்
துலக்கியே சீனத்தை கல்வத்திட்டு
துடியான வெடியுப்பு னீராலாட்டே. (391)

ஆட்டியே அஞ்சுநாள் வில்லைபண்ணி
அகலிலிட்டு அம்பதெரு அடிக்கிபோடு
தூட்டியே ஆரவிட்டு யெடுத்துப்பாரு
சுப்பிரமாய் வெள்ளையா சுண்ணமாகும்
காட்டியே வுலைவைத்து கல்லுப்புத்தானும்
கணக்காக வெடியுப்பு நீராலாட்டி
வாட்டியே அகலிலிட்டு புடத்தைப்போட
பாரம்போல் சுண்ணம்பு ஆகும்பாரே. (392)

ஆகுமே பூனீரு சுன்னம்நாலு
அரிதான சீனத்தின் சுண்ணம்ரெண்டு
யேகுமே கல்லுப்பு சுண்ணம்வொன்று
யெத்தமாங் கல்வத்தி லிதனைப்போட்டு
போகுமே பொடிபண்ணி வெடியுப்புநீரால்
பேசாம லரைத்திட்டு வில்லைபண்ணி
தேகுமே குக்குடத்தின் புடத்தைப்போட்டு
சீதளமாய் ஆரவிட்டு யெடுத்துக்கொள்ளே. (398)

யெடுத்துமே வெடியுப்பு நீராலாட்டி
யிழுத்தரைத்து வீரமது பலம்கால்போட்டு
விடுத்துமே வில்லைபண்ணி காயவைத்து
மீராதே புடம்போட்டு யெடுத்துவாங்கி
கடுத்துமே கல்வத்தி லிதனைப்போட்டு
கடிசான வீரமது பலங்கால்போட்டு
தடுத்துமே வெடியுப்பு நீராலாட்டி
சாதகமாய் அஞ்சுபுடம் போட்டிடாயே. (394)

அஞ்சுமே புடம்போடச் சுண்ணமாகும்
ஆண்மையாஞ் சவுக்காரம் சுண்ணமாச்சு
கஞ்சுமே சரக்கெல்லாம் கட்டிப்போகும்
கெடியாரம் போடலாம் வாதமூட்டு



துஞ்சுமே வாய்திறந்து பேசவேண்டாம்
சொல்லாதே ஒருவருடன் சூட்சமெத்த
தஞ்சுமே விளாங்காய்போல் உண்டைபண்ணி
சாந்தமாம் ரவிதனிலே காயப்போடே. (395)

காயவைத்து யெடுத்துவைப்பாய் பதனமாக
கருத்துவைத்து கைம்முறையாய் வளமாய்ப்பண்ணு
ஆயவைத்து சாத்திரத்தில் சொன்னாரில்லை
அறுபத்து நாலானல் மரபில்தானும்
காயவைத்து வெவ்வேறாச் சொல்லிப்போட்டார்
சனங்களெல்லாம் சித்துமய மாகுமென்று
ஓயவைத்து நம்முடைய நிகண்டிற்சொன்னேன்
உத்தரமாம் சவுக்காரச் சுண்ணமாச்சே. (396)

சவர்கார வித்தைதன்னைச் சொன்னாரென்று
சதாசிவனு மென்மேலே கோபமானார்
மவுக்கமா மவுனிகளும் கோபமானார்
வாய்திறக்கார் சித்தர்கள்தான் யென்னோடப்பா
சுவர்க்காரம் நிகண்டுதன்னை குகையில்வைத்தால்
கோபம்வந்தால் சித்தர்கள்தான் கிழிப்பாரென்று
வுவர்க்கமாம் வுலகத்தோர்க் கீய்ந்துவிட்டேன்
உத்தமிதாய் சொல்லிடவே வுரைசெய்தேனே. (397)

செய்திட்டேன் சிவகாமி சொல்லக்கேட்டு
சித்தரெல்லாம் சினேகம்விட்டு கோபமாகி
வைத்திட்டா ரென்றுசொல்லி வெளியில்போட்டேன்
மறைத்துவைத்த கருவிதுதான் வழலைமார்க்கம்
கொய்திட்ட குருவாலே கோடிகவராகும்
கூகூகூ யிதுஅரிது கொள்ளைகொள்ளை
னைதிட்ட சரக்குக்கு நமன்போலாகும்
நாமறியோ மிதுபோலே போக்குதானே. (398)

போக்கான கருவெல்லாம் மெதினலாச்சு
புகழான ஊசரத்தின் குருவாலாச்சு
தாக்கான சாத்திரத்தில் சித்தரெல்லாம்
சாதகமாய்ச் சொல்லாதே போனாரென்று
போக்கான நிகண்டுக்குள் வெளியாய்ச்சொன்னேன்
புகழ்நுட்ப மென்னூல்போல் யெதுவுஞ்சொல்லார்
வாக்கான சவர்க்காரம் குருத்தான்செய்யும்
மார்க்கத்தை வழியோடே வழுத்துவேனே. (399)

வழுத்துவேன் முன்வைத்த சவர்க்காரத்தான்
வாகாகம் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
எழுத்தவே யெருக்கம்பால் படிதானொன்று
யிசைந்தஅண்ட சுன்னமது பலந்தானொன்று
விழுத்தவே வெடியுப்பு சுன்னமொன்று
மிடுக்கான சீனத்தின் சுன்னமொன்று
தழுத்தவே வங்கத்தின் சுன்னமொன்று
சவுட்டைவில்லை பலமொன்று தூக்கிக்கொள்ளே. (400

தூக்கியே கற்சுண்ணம் பலன்தானாலு
துப்பரவாம் நல்லதண்ணீ ரெண்டுசேரு
நீக்கியே நீர்தன்னில் கற்சுண்ணத்தை
நிகழாமல் கலக்கியே நீரிறுத்துக்கொண்டு
வாக்கியே முன்சொன்ன அருசுதானும்
வகைக்குஒரு பலம்நிறுத்துக் கலக்கிக்கொண்டு
தாக்கிய வீரமது காசுரெண்டு
சாரமது காசுரெண்டு பூரம்ரெண்டே. (40

ரெண்டோடு கருநாபி காசுரெண்டு
நிச்சயமாம் பூமுத்து காசுரெண்டு
பண்டோடு குக்குலென் மலமும்ரெண்டு
பாங்கான குருவண்டு அன்பத்தொண்டு
தண்டோடு வெள்ளுகழும் காசுரெண்டு
தளுக்கானச் சூதமது காசுரெண்டு
துண்டோடு சுண்ணாம்பு நீரினாலே
சுழட்டியரைக் கொள்ளவே கலக்கிக்கொள்ளே. (402)

கலக்கியே ஒன்றாக வைத்துக்கொண்டு
கடிசான யெருக்கம்பால் படிதான்விட்டு
அலக்கியே அண்டமது அன்பத்தொன்று
அப்பனே வெண்கருவை கூடவிட்டு
குலக்கியே குச்சியினால் மத்திச்சுவைக்க
கொப்பளிக்குங் கடுங்கார செயநீராகும்
திலக்கியே தெளிவாக யிறுத்துக்கொண்டு
செயமான சவுக்கார மதனிற்போடே. (403)

போட்டுமே கவர்கழியால் கடையவெண்ணெ,
பொருமிலகும் வழித்தெடுத்து போடுபீங்கான்
மூட்டுமே மூனுநாள் வாகமட்டும்
முயர்ச்சியாய்க் கடைந்தெல்லாம் வெண்ணெவாங்கு



நாட்டியே ரவியிலிட்டு காயப்போட்டு
நவாச்சாரம் சரிபிடைக்கி நாட்டிப்பின்பு
ஆட்டியே அருசுநா ளரைத்துமைபோல்
அகலிலிட்டு மூடியே புடத்தைப்போடே. (404)

மூட்டியே புடம்போடச் சாரங்கட்டிச்
முத்துபோல் வெள்ளையுமாம் பனியில்வைப்பாய்
சாடியே சலந்தானும் சிவந்திருக்கும்
தன்னுக்குள் வீரமொடு பூரம்போட்டு
பாடியே யெடுத்துவைப்பாய் பதனமாகப்
பருவமாய்க் கம்பிஉப்பு தோச்சுப்போடு
சீடியே சீனத்தைத் தோச்சுப்போடு
தெசுவாம் வெண்காரம் தோச்சுப்போடே. (405)

தோச்சிடவே பாறையுப்பு சூடன்வெள்ளை
சூதமொடு சவ்வீரம் சோதிலிங்கம்
ஆச்சிடவே அறுபத்து நாலுங்கட்டும்
அருகாம லவணமது கட்டிப்போகும்
ஓச்சிடவே உபரசங்கள் நூத்திரண்டு சத்தாம்
உர்ப்பனமாய் சுருக்கிட்டு வாட்டுவாட்டு
தாச்சிடவே சவர்க்காரம் கடைந்தநீரில்
சரக்கான வளையலுப்பை யரைத்துக்கட்டே. (406)

கட்டுவற்கு முன்பேதான் உள்கருவைக்கேளு
காரமொடு சவ்வீரம் லிங்கந்தானும்
மட்டுதற்கு வகைக்குஒரு விராகனிடை தூக்கி
மகத்தான சவுக்காரங் கடைந்தநீரில்
ஒட்டுதற்கு அரைத்துமே உள்கருவாய்ப்பூசி
உலர்ந்தவளைய லுப்பதனைக் கவசங்கட்டி
மட்டுதற்கு மணலாவியிற் புடத்தைப்போட
மகத்தான முழுவயிரக் கட்டுமாமே. (407)

கட்டியதோர் சரக்குகளில் வேதைகோடி
கசடற்ற சத்துகளோ மெழுகுகோடி
தெட்டியதோர் செயநீரும் சுண்ணங்கோடி
செந்தூரம் குருவோடு களங்குகோடி
எட்டியதோர் குளிகைவகை கோடாகோடி
யெடுத்தோடும் குளிகையிலே விந்தைகோடி
பட்டியதோர் பழுப்பினமும் கொடிப்பினமும்கோடி
பகரிது சவர்க்கார நீரிலாட்டே. (408)

சவுக்கார மறப்பையெல்லாம் வெளியாய்ச்சொன்னேன்
தாய்சொல்ல யான்கண்டு சந்தோஷித்து
சவுக்கமாம் ஏழுகோடி யுகமும்பார்த்து
யேழையான சித்தருக்கு யியல்பாய்ச்சொல்லி
தவுக்கமா மகத்திசன் பாதந்தேடி
சவர்க்கார மறைப்பையெல்லாம் சாத்தினேன்யான்
உவுக்கமாம் சவர்க்காரம் பார்த்துதேர்ந்த
உயர்சீஷர் நாற்பத்து மூவராச்சே. (409)

ஆச்சப்பா நாற்பத்து மூனுபேரும்
அண்டத்து சித்தருடன் வாதுபோட்டு
கூச்சப்பா குளிகையுட வேகங்காட்டி
குருவான துரிசிநீர் கூர்மைகாட்டி
தாச்சப்பா சவர்க்கார மகிமைகாட்டி
சடாதார தெரிசனத்தின் சார்வுகாட்டி
யேச்சப்பா சிலம்பொலியி னியக்கம் கொட்டி
எனையப்போலே சமாதியிலே யிருந்தார்காணே. (410)

இருந்திட்ட சவர்க்கார செயநீர்தன்னில்
இதமாக வீரமொடு பூரம்போட்டு
கருந்திட்ட காரமொன்று சவ்வீரமென்று
கருதியதோர் தாளகமும் துருசுஒன்று
திருந்திட்ட சூதமொன்று கல்வத்திட்டு
சிறப்பாகச் செயநீரை விட்டுஆட்டி
நருந்திட்ட நாலுநா ளரைத்துமைபோல்
நலமாக மூன்றுபங்கு பண்ணிவையே. (411)

பண்ணியதோர் சரக்கதுவும் பலந்தான்ஒன்று
பரிவான அரப்பொடிதான் பலந்தான்போட்டு
எண்ணியதோ ரெலுமிச்சம் பழச்சாறுவிட்டு
யிதமாக மூன்றுநா ளரைத்து
கண்ணியதோர் கழுவியெல்லாங் காயப்போட்டு
கனத்ததோர் முன்பங்கு ஒன்றுகூட்டி
குண்ணியதோர் குகையிலிட்டு உருக்கியாட்டு
கொட்டியே உடைத்தெடுத்து மறுபங்குகூட்டே. (412)

கூட்டியே பின்பொருக்கால் குகையூது
குகைநருக்கி சத்தெல்லாம் பொருக்கிக்கொண்டு
மாட்டியே பின்பொருக்கால் மருந்துகூட்டி
மறவாம லூதிடவே சத்துமாகும்



சாட்டியே சத்தெல்லாம் காரமிட்டுருக்கி
தரித்தயிடை நாலுக்கு ஒன்றுதங்கம்
ஊட்டியே யொன்றாக வுருகும்போது
உயர்கின்ற நாகத்தை யூட்டக்கேளே. (413)

நாகத்தைக் கட்டுவதோர் மார்க்கங்கேளு
நலமாக சுத்திபண்ணி வில்லைவார்த்து
ஆகத்தை யிருக்குகின்ற அப்பிரகங்காந்தம்
அதிகமாம் வளையலுப்பு சத்திசாரம்
வேகத்தை நவச்சாரம் வீரமோடுகார
மிடுக்காக வகைக்கரைப் பலந்தான்கூட்டி
பூகத்தை வெடியுப்பு நீரினாலே
புகழாகத் தினமூன்று அரைத்திடாயே. (414)

தினமூன்று அரைத்தபின்பு வெடியுப்புநீரில்
சேறுபோல் குழப்பியே வைத்துக்கொண்டு
அனகாக வில்லையது ஆறுபலமாகும்
அழகான குழப்பியே அதட்டிவாட்டு
பனமாக குழம்பையெல்லாம் பதியவாட்டு
பண்பான வளையலுப்புக் கவசங்கட்டி
அன்பாக அன்பதெரு அடிக்கிப்போட
அரகரா முழுக்கட்டு ஆகும்பாரே. (415)

கட்டியே லிங்கமது கருதக்கேளு
காரணமாம் சவர்க்கார செயநீராலே
துட்டியே துருசுஅஞ்சு பலத்தைவாங்கித்
துடியான கலவத்தி லிதனைப்போட்டு
அட்டவே அஞ்சுநா ளரைத்துமைபோல்
அகலிலிட்டுப் புடம்போடச் சுண்ணமாகும்
கட்டவே சுண்ணத்துக் கிடைதான்சாரம்
கட்டியரைத் தஞ்சுநாள் புடத்தைப்போடே. (416

போட்டுவா பீங்கானில் பனியில்வைப்பாய்
பெருகுகின்ற ஆறுபோல் செயநீராகும்
தீட்டுவாய் செயநீரில் பூரம்வீரம்
சிறப்பாகப் பொடித்திட்டு வறுத்துக்கொண்டு
காட்டுவாய் கம்பிலிங்கம் பலத்தைவாங்கி
கனகமா முலைப்பாலும் பழச்சாறும்சேர்த்து
ஓட்டுவாய் ஓட்டிவிட்டு சுருக்குப்போடு
உறுதியாய் செயநீரை சுருக்குப்போடே. (417)

சுருக்கிட்டு நால்சாம மானபின்பு
    சுத்தமாம் சவாதோடு காரம்வீரம்
அருக்கிட்ட செயநீரா லரைத்துப்பூசி
    ஆண்மையாம் வளையலுப்பு சத்திசாரம்
கருக்கிட்ட வெடியுப்பு நீராலாட்டி
    கனமாக மேல்கவசம் கட்டிவாட்டு
உருக்கிட்டு உறுதியாய் வாட்டிவாட்டி
    உண்மையா மண்மறைவில் புடத்தைப்போடே. (418)

மறைவிலே புடம்போட்டு யெடுத்துவைத்து
    மகத்தான சவ்வீரம் பலமைதானும்
அரவிலே யரைப்பலந்தான் தூக்கிக்கொண்டு
    ஆண்மையாம் பறிரேக்கை மேலேசுத்தி
கரவிலே கர்ப்பூர தீபந்தன்னில்
    கனமான சவர்க்கார செயநீர்தோச்சு
துரவிலே நால்சாமம் வாட்டிவாட்டு
    துரிசாக வாட்டிடவும் கட்டிப்போமே. (419)

வாட்டியே மேல்கவசம் சத்திசாரம்
    வளையலுப்பு வெண்காரம் துருசிகூட
நீட்டியே வெடியுப்பு நீராலாட்டி
    நிலவரமாய் உள்ளக்கருதான் பூசிக்கொண்டு
காட்டியே அதின்மேலே கவசம்கட்டி
    காரியமாய் மணல்மறைவில் புடத்தைப்போட்டு
தீட்டியே அம்புக்கு கூர்மைபோல
    சிரசான வீரமது மணியுமாமே. (420)

மணியான அயம்நின்று உருகும்போது
    மாட்டுநீ நாலுக்கு ஒன்றுதங்கம்
தணியான தங்கமிடை நாகம்போடு
    தனிநாகத் திடைபோடு லிங்கந்தன்னை
விணியான லிங்கமிடை வீரம்போடு
    மீளாமலடிக்கடிக்கு காரந்தாக்கு
கணியான அயந்தானும் களங்கமாகும்
    காட்டிடவே நவலோக மேமமாமே. (421)

ஏமமாம் நாற்றுக்கு ஒன்றாய்ஈவா
    யென்மகனே யெட்டரைதான் ஆணிக்கொக்கும்
ஓமமாம் புடத்துக்கு உப்புக்கேகா
    உண்மையா யிரும்பாட்டி சிவனத்தைப்பண்ணு



காமமாம் பெண்ணாசை தன்னைவிட்டுக்
    கசிப்போடு புளியுப்பு யெண்ணைவிட்டு
சேமமா யிரும்புதான் செந்தூரித்து
    செகச்சால வித்தையெல்லாம் தரும்பாயெண்ணே. (422)

எண்ணியெண்ணி மனஞ்செயித்து விட்டஞானி
    யெங்கெங்கே யிருந்திடிலென் யெவடம்போயென்
அண்ணிகற்ப மூண்டுகாய் சித்திசெய்து
    அங்கென்று அடுக்காது தவத்தில்சென்று
நண்ணிதுவார் தேசத்தின் தலத்தில்புக்கி
    நடனமாஞ் சிலம்பொலியின் நாட்டங்கண்டு
ஒண்ணிஒண்ணி மவுனத்தி லறிவுதாக்கி
    ஒருவருடன் பேசாதே வூமையாவே. (423)

ஊமையா யிரும்பாட்டி சிவனத்தைப்பண்ணு
    ஒருபலந்தா னிரும்புதன்னை காசாய்விற்பார்
ஆண்மையா யிரும்பதுவும் ஆத்தாளாத்தாள்
    ஆட்சியாய்ச் செந்தூர மன்பாய்ப்பண்ணில்
நுண்ணுமையா யிரும்புதனில் நூணுக்கம்மெத்த
    நோய்சென்று விரும்பினிட ரூபங்காணூர்
வண்மையாம் புடசெயத்தின் மார்க்கங்காணூர்
    மகத்தான சுத்தியெல்லா மிரும்பாலாச்சே. (424)

இரும்பான செந்தூரம் குன்றியுன்னு
    மேத்தமா மண்டலந்தான் பத்தியமாகும்
கரும்பான கல்லாகும் தேகந்தானும்
    கர்த்தாவே மலைதன்னையே குத்திறைக்கால்
துரும்பாகும் தூளாகுந் தவுடுபொடியாகும்
    சுக்கிலந்தான் மேலோடும் கீழோடாது
எரும்பான யெண்பதுக்குள் கொள்ளவாகும்
    இருக்குமடா யிரும்பதுவும் ஏத்தமாமே. (425)

இரும்பான களங்குக்கு நாலத்தொன்று
    யேத்தமாங் கெந்தத்தை சுத்தித்துகூட்டி
பொரும்பான பொற்றலையிட் சாற்றாலாட்டி
    போட்டுவா புடம்பத்து செந்தூரமாகும்
மரும்பான நவலோகத் தெட்டியோடு
    மாற்றதுவும் பதினாலு மருவிக்காணும்
துரும்புதான் தூணான வாறுபோல
    சொல்முறை மறவாதே சூட்டுசூட்டே. (426)

மறவாதே சவர்க்கார சுண்ணந்தன்னை
மாட்டுகிற கருவிதுதான் வழலைமார்க்கம்
துறவாதே ஆருக்கும் கெர்ச்சிக்காதே
செய்தொழிலை மறவாதே திருட்டெண்ணாதே
பறவாதே கன்னிதனை பார்த்திடாதே
பரத்திலே மனதூன்றிப் பாருபாரு
இறவாதே காயசித்தி யோகசித்திபண்ணி
யேத்தமாஞ் சமாதியிலே யிருந்திடாயே. (427)

சமாதியிலே யிருக்கவல்லோ சவர்க்காரத்தை
தவறாமல் வெளியாகச் சொன்னேன்மக்காள்
வமாதியிலே மழலைதனை சித்தரெல்லாம்
மாச்சலாய் மகாகடின மாகச்சொன்னார்
சமாதியிலே எண்ணைதனை வார்த்துப்பண்ணி
மேத்தமாஞ் சுன்னத்தில் நீற்றச்சொன்னார்
சமாதியிலே கனபாடு பட்டு பட்டு
காணாம லிறந்தவர்கள் கோடிதானே. (428)

தானென்ற சவர்க்காரம் சொன்னதர்ம்மம்
தாயான மணிக்காய்க்கு குருவுக்காய்ச்சு
யேனென்றால் நிகண்டிக்குள் தீர்ந்தேனையா
வெளிதமாஞ் சித்தருக்கு யிலக்காய்ச்சொன்னேன்
கோனென்ற சித்தரெல்லாம் வழலைதன்னை
கூறினார் வெகுகடினம் குணமொன்றில்லை
தேனென்ற வேழுலகும் சிவன்சொன்னத்தில்
செப்பயில்லை யென்றுநான் திறந்திட்டேனே. (429)

திறந்திட்டே னென்றுசொல்லி சவர்க்காரத்தை
சித்தரெல்லாம் யென்மேலே சினமுமாக
மறந்திட்ட வழலைதான் வெளியில்போட்டார்
மலையெல்லாம் சித்தர்மய மாச்சுதென்றே
கறந்திட்ட பால்போல வெளியாய்ச்சென்று
கயிலாச பாட்டர்முன்னே கருதிச்சொன்னார்
அறந்திட்ட பாட்டரது கேட்டபோதே
யகோரச்சனத்தி லென்னையங்கே யழைப்பார்பாரே. (430)

அழைத்துமே கூர்மமுனி கூட்டிப்போனார்
அதிகமாம் போகரே சவர்க்காரத்தை
விழைத்துமே வெளியாகச் சொல்லுவானேன்
மேதினியெல் லாம்சித்தர் மயமாய்ப்போகும்



பழைச்சுபரி கரீத்து போடுயென்றால்
பாட்டர்சொல்ல யான்கேட்டு புகலவந்து
உழைச்சுமே நிகண்டுதனை யொளித்துவைத்து
உலகத்துக் கீய்ந்துவிட்டே னுண்மைதானே. (431)

உண்மையாய் நிகண்டுதனை வைத்துப்பூசி
உத்தம[illegible]னுக்கு நிகண்டையீவாய்
ஆண்மையாய் அழும்பான சீஷனானால்
அவன்முகத்தைப் பாராமல் அப்பாற்செல்லு
வண்மையாங் குணம்பாரு வணக்கம்பாரு
மனதுநன்றாய் சோதித்து வழலைபோதி
தண்மையாஞ் சீஷரென்றால் நிகண்டையீவாய்
தருதும்ப னைக்கால் தவிழ்த்திட்டாயே. (432)

தவிழ்த்திட்ட சவர்க்காரச் சுண்ணமில்லா
சரக்கெல்லாம் ஊர்க்கடக்க தள்ளிப்போடு
அவிழ்த்திடா உப்பில்லா கட்டையெல்லாம்
ஆராறுக்கு அப்பாலே அகத்திப்போடு
குவித்திடா தவமில்லாம் செந்தாரமெல்லாம்
குப்பையிலுங் குணமில்லை கூர்ந்துநன்றாய்
யவிழ்த்திடா மகாவீர மில்லாசுண்ணம்
வாசலிலே போட்டிடவு மிகநன்றாச்சே. (433)

நன்றாக சவர்க்கார ரவிநீராலே
நாகரீகமாய் மறவாமல் வீரம்லிங்கம்
குன்றான துரிசியது நாலுங்கேளு
குறிப்பாக வகைக்கு ஒரு பலந்தான்கூட்டி
அன்றான நீர்விட்டு அரைத்து அஞ்சுநாள்தான்
அணி மூன்று பங்காய்ப் பண்ணிவைத்து
தின்றான அஞ்சனக்கல் பலந்தானெட்டு
சிறுகவே நருக்கியே காடிதனிற்போடே. (434)

காடிதனில் போட்டிடவே மூணுநாள்தான்
காச்சியே கொதிக்கவைத்து யிறக்கிவைத்து
கோடிதனில் கொள்ளுக்குள் வேகவைத்து
குறிப்பாக யெடுத்துமே முன்மருந்துகூட்டி
பேடிதனில் பிசரியே குகையில்வைத்து
பொருக்கியே சத்தெல்லாம் மறுபங்குகூட்டி
ஓடிதனிலு லுருக்கிய மருந்திட்டுப்பிசரி
உண்மையாய் மூன்றுதிர முருக்கிடாயே. (436)

உருக்கிட்ட வருணனிட நிறந்தான்கேளு
உயர்கின்ற சரிகை வெள்ளி போலக்காணும்
தருக்கிட்ட சிவன்தானும் திரிபுரத்தை
தகனந்தான் பண்ணிடவே நகையேசெய்தார்
கருக்கிட்ட காட்டோடு நாடுமலையெல்லாம்
கருதியே பத்தியே முப்புரமெரிந்து
மருக்கிட்ட மலைவெந்து வுருக்கித்தாமதாய்
மகத்தான அஞ்சுவித அஞ்சனக்கல்லாச்சே. (436)

கல்லான சத்துக்குள் கிண்ணிபண்ணி
கனமாக அடித்தூரில் சீலைசெய்து
வல்லான வாலுகையின் மேலேவைத்து
வார்த்திடுவாய் சுத்திக்க சூதம்தனிலு
புல்லான பொற்றலையின் சாறுவார்த்து
போக்காக யென்சாமம் யெரித்தாயானால்
அல்லான அட்டைபோல வெண்மையாகி
ஆறதிக மாய்க்கட்டி யாகுந்தானே. (487)

கட்டியாம் சூதத்தை மத்தங்காயில்
கருக்காமல் புடம்பத்து போட்டபின்பு
தட்டியாம் சூதனுட கிழில்வாட்டி
தூடியாக கரண்டிகளில் வெண்ணைகுத்தியிருக்க
கெட்டியாய்த் திரவியமெனி யாகும்பாரு
கேசரத்தி லோடவென்றால் சாரணையேதீரு
வெட்டியாய் வாதகத்தில் தங்கம்சேரு
மாசற்ற செந்தூரம் பண்ணிடாயே. (438)

பண்ணவே தம்பனத்கு லாகிரியமைவட்டி
பாங்கான வருக்குடனே வீரம்சீனம்
புண்ணவே புழுகோடு பூரங்கூட்டி
பூப்போல மலர்ந்துமே குருவுமாகும்
கண்ணவே காயசித்தி சுருக்கிலாகும்
காமத்தை தள்ளியே செந்தூரமென்னு
நன்னவே நரைமாறி வாலையாகும்
நாதாந்த அஞ்சனக்கல் சத்துதானே. (439)

அஞ்சனக்கல் சத்ததுவும் பலந்தானெட்டு
அதிகமாம் பரியதுவும் பலந்தானொன்று
முஞ்சனக்கல் குகையில்நின்று உருகும்போது
முன்கட்டு லிங்கமொரு பலந்தான்போடு



செஞ்சனக்கல் மூப்பூவும் கஞ்சிபோடு
சிறப்பாக வழலையுட பெருமைமெத்த
தஞ்சனக்கல் சவ்வீரம் பலந்தான்போடு
சாத்தியெல்லாங் காரமிட்டு உருக்கிடாயே (440)

இட்டுநன்றாய் உருக்கிடவே களங்குமாகும்
யினமா காவிமதியில் ஊர்த்துக்கொன்றிய
பட்டுலென்றாய் மாத்ததுவும் பதினொாகும்
பாங்காக எங்குக்குநலத்தொன்று
கெட்டுலென்னைய் கேந்தியது பொடித்துக்கூட்டி
கிளர்ந்தபொற் றலைச்சாற்றில் அஞ்சுநாளாய்
விட்டுலென்றாய் வில்லைபண்ணி அகலவைத்துமூடி
மேன்மையாய் புடம்போடச் செந்தூரமாமே. (441)

செந்தூரம் தினம்குன்றி பாலிலுண்ணு
சிறுகதிர்போல் மேனியுமோ சிகப்பேயாகும்
எந்தூரம் சூரியனின் கிரணத்துள்ளே
யெழும்பலாஞ் சடத்துக்கு யிருக்கமில்லை
தந்தூரம் சந்திரனில் குளிர்ச்சியில்லை
தாக்கான யிடிக்குள்ள பயமுமில்லை
மந்தூர மாருதத்தில் சுழலொட்டாது
வாய்திறக்கா சித்தியுமா மாட்டிக்வாணே. (442)

மாட்டவே கோடாசூரி வைப்பக்கேளு
வகையான வெடியுப்புச் செயனீராலே
அட்டவே வெடியுப்புப் பலந்தான்ரெண்டு
அரைத்திடுவாய் அஞ்சுநாள் அகலாமல்தான்
விட்டவே வில்லைபண்ணி காயவைத்து
மிடுக்கான சட்டியிட்டு யெரிப்பாயானால்
சூட்டவே சுழன்றதுவும் சுண்ணமாகும்
சுரண்டியெல்லாம் யெடுத்துமே பீங்கான்வையே. (443)

வையப்பா சாரமது பலந்தான்ரெண்டு
மாட்டியே கலவத்தில் வெடியுப்புநீரால்
மையவே அஞ்சுநா ளரைத்துதானும்
மடக்கிவிட்டு மூடிவைப்பாய்ப் புடத்தைப்போடு
கையவே சாரமது கட்டிப்போகும்
கனமான பீங்கானில் யெடுத்துவைத்து
செய்யவே சீனமது பலந்தான்ரெண்டு
சிறப்பாக னீர்விட்டு அரைத்திடாயே. (444)

அரைத்துமே அஞ்சனு ளானபின்பு
அகலிலிட்டு கெசபுடமாய் அனலிற்போடு
துரைத்துமே துரிசியது பலன்தானுனு
சுருக்காக வெடியுப்பு நீராலாட்டி
தினத்துமே தினமஞ்சு ஆனபின்பு
செப்புக்கு ளடைத்துசும புடைத்தைப்போடு
புரைத்துமே பூனீறு பலந்தான்ரெண்டு
புகழ்பெரிய வெடியுப்பு நீராலாட்டே. (445)

ஆட்டியே புடம்போட்டு யெடுத்துவைப்பாய்
யன்னமென்ற பேதியது பலந்தான்ரெண்டு
வீட்டியே வெடியுப்பு நீராலாட்டி
மீராமல் புடம்போட்டு யெடுத்துவைத்து
காட்டியே கல்லுப்புப் பலந்தானுனு
கனமான வெடியுப்பு நீராலாட்டி
நீட்டியே வில்லைபண்ணி காயவைத்து
நிலவரமாய்ப் புடம்போட்டு யெடுத்துக்கொள்ளே. (446)

கொள்ளவே சூதமது பலந்தானெட்டு
கூறவே கல்லுப்பு குமரிச்சாறு
முள்ளவே மூன்றுநாள் விட்டரைத்து
முடுக்காக மூலியெல்லாம் யெடுத்துவாங்கி
அள்ளவே அயக்கரண்டிக் குள்ளேவைத்து
ஆர்க்கமாம் வெடியுப்பு நீரினாலே
நள்ளவே நால்சாமம் சுருக்குப்போடு
நாட்டி அரைத் தேகன்றாய் கழுவிவாங்கே. (447)

கழுவியே வாங்கியமன் சொல்லக்கேளு
கனமான சத்தியென்ற சாரந்தானும்
நழுவியே நாலுபலம் கலவத்திட்டு
நலமான செயனீரா லரைத்தமைபோல்
அழுவியே அகலிலிட்டு புடத்தைப்போடு
அம்மம்மா கடுஞ்சுன்ன மாகும்பாரு
வழுவியே பலம்ரெண்டு கலவத்திட்டு
மாட்டிடுவாய் சாரமது பலந்தான்ரெண்டே. (448)

சாரமது பலம்ரெண்டே கூடப்போட்டு
தாக்கியசா யஞ்சுநாள் ரெட்டங்கமட்டும்
ஆரமது அகலிலிட்டுச் சீலைசெய்து
அழகான கவுதாரி புடமாய்ப்போடு



சாரமது ஆறவிட்டுப் பனியில்வைக்க
சிவந்துமே செயனீரு மாகுமாகும்
பூரமது வீரமது பொடித்துப்போட்டு
புகழாமல் சூதத்தில் சுருக்கப்போடே. (449)

சுருக்கிட்டு கழுவியெல்லாம் வாங்கிவைத்து
துரிசியது பலமெட்டு கல்வைத்திட்டு
வெருக்கிட்டு வெடியுப்பு நீராலாட்டி
மிக்கான அரிஞ்சுநாள் வில்லைபண்ணி
அருக்கிட்டு அகலிலிட்டு மேலுமூடி
அசதாமல் சீலைசெய்து புடத்தைப்போட
நருக்கிட்ட சுண்ணம்பாய்ச் சமனைச்சாரம்
நாட்டியரைத் தஞ்சுநாள் புடத்தைப்போடே. (450)

போட்டுமே பனியில்வைக்க செயனீராகும்
போரான னீரிலே வீரம்பூரம்
நாட்டுமே நால்சாமம் சுருக்குப்போட்டு
நலமாக கழுவியே சூதத்தைவாங்கி
மூட்டுமே மூன்றுகும் பீங்கானில்வைத்து
முனையான திராவகத்தை விட்டுநீற்றி
காட்டுமே கல்வத்தில் போட்டுக்கொண்டு
காரியமாம் முன்சுண்ணம் கூடப்போடே. (451)

கூடவே போடுகிற சுண்ணங்கேளு
குறிப்பாக வெடியுப்பு சுண்ணம்போடு
நாடவே நவச்சாரம் சுண்ணம்ரெண்டு
ஆடவே பேதியென்ற சுண்ணம்ரெண்டு
நமனாகுஞ் சீனத்தின் சுண்ணம்ரெண்டு
அழகான பூனீறு சுண்ணம்ரெண்டு
காடவே கல்லுப்புச் சுண்ணமாறு
கடினமாம் துரிசினுட சுண்ணம்நாலே. (452)

நாலாக நிறுத்துமே கல்வத்திலிட்டு
நமனுகும் திராவகத்தா லரைத்துமையே
பாலாக பரும்பீங்கான் தன்னிலிட்டுப்
பக்குவமாக் தணல்மேலே வறுத்துப்போடு
காலான காசியென்ற மேருக்கேற்றி
கனமான வாலுகையில் பதித்துவைத்து
யேலாக யெட்டுநாள் தீயைப்போடு
யிதமாக ஆறவிட்டு யெடுத்துப்பாரே. (453)

எடுத்துடனே சிவந்தனிற மாகத்தானும்
யிருந்திடுமே அடிதனிலே பருதிப்போல்
கடுத்துடனே நவலோகம் ஊற்றிலிய
கண்டிடவே நிறைமாத்து கருதிப்பாரு
அடுத்துடனே யிவ்வீரம் சுண்ணத்துக்கெல்லாம்
அணுகாட்டால் யேமசித்தி காயசித்தியில்லை
தொடுத்துடனே சித்தரெல்லாம் சொன்னரில்லை
சூட்சாதி சூட்சமெல்லாம் நிகண்டிலாச்சே. (454)

நிகண்டோடு சாத்திரமும் சூஸ்திரமும்பாரு
நேர்ப்பெல்லாம் வெட்டவெளி யாகச்சொன்னேன்
பகண்டான சோரமென்ற வீரத்துக்கு
பரிட்சையது பண்பாகச் சொல்லக்கேளு
கண்டான கறுத்தமயிர் மேலேபூசி
காஞ்சவுடன் வெளுத்தமயி ராகும்பாரு
திகண்டான சிவந்தத்தின் மேலேபூசினக்கால்
க்ஷணத்திலே வெளுப்பாகும் ரோமந்தானே. (455)

சோரமென்ற வீரத்தில் சித்தரெல்லாம்
திருட்டுவித்தை திலவித்தை பண்ணினர்கள்
காரமென்றால் யிதுமேலே காரமில்லை
கடிதான சத்தெல்லாம் மதுசத்தாகும்
தூரமென்ற சுண்ணத்துக் கிதைவிட்டாலில்லை
சூட்சமா யாகுற குவைதான்தானும்
பாரமென்ற துரிசி ...ன்மே லிங்கவீரம்
பட்டாக்கால் செம்பு ...சுத்து பரிசமாமே. (456)

பரிசமாம் பேதிக்கு யிதுதான்வேண்டும்
பாங்கான செந்தூரத் திதுவேயாகும்
சரிசமாம் கயிலத்துக் கிதுவேயாதி
சாற்றுகிறேன் மாளுக்கள் கோடிகோடி
கரிசமாஞ் சத்துக்கு யிதுவேயாதி
கனமான செயநீருக் கிதுவேயாதி
புரிசமாம் மெழுகுக்கு களங்கேயாதி
பொன்னை நீரெல்லாம் வீரத்தாட்டே... (457)

வீரமென்றால் வெகுவீரன் சுத்தவீரன்
வேதைக்கோ ரவுவீரன் மகத்தாம்வீரன்
பாரமென்றால் செயவீரன் விற்பன்னவீரன்
பாதைக்கோ பலவீரன் பாரவீரன்



தூரமென்றே யெட்டுகிற சுயம்பாம்வீரன்
சுயவீரன் சுருக்கான காரவீரன்
கோரமண்டோ கொடுங்கோபன் குரூரவீரன்
கூர்மையாம் வீரனுட கூத்துத்தானே. (458)

கூத்தான வீரத்தை சித்தரெல்லாம்
கூறினா ரில்லையென்று கோபத்தோடே
வித்தான வீரத்தை வெளியிற்போட்டேன்
வெளியாச்சு உலகமெல்லாம் பொன்மயமாய்ப்போச்சு
நித்தான நிகண்டுதனை மறைத்துவைத்து
நேர்ந்தபச்சை வீரத்தை நீட்டுநீட்டு
மாத்தான்போல் செயவீரம் சரக்கில்பட்டால்
வாதமெல்லாம் வெளியாகும் மசகமாமே. (459)

மசகமென்று மென்னாதே செயவீரத்தை
மாட்டிடவே நாகமது கட்டிப்போகும்
விசகமென்ற தங்கமது நீருமாகும்
வீரசா ரங்களெல்லாம் படுமுன்கட்டும்
உசகமென்ற உபரசங்கள் சத்துமாகும்
ஊட்டினால் சாரணை தான் வெகுதூரமோடும்
பசகமென்ற நாகத்தின் செயநீர்க்கெல்லாம்
பாங்கான செயவீரம் போட்டிடாயே. (460)

போட்டிந்த வீரத்தை செயநீர்பண்ணி
பொன்ரேக்கு யெறியதத்தில் வாட்டுவாட்டில்
நீட்டிந்த ரேக்குதனை சுழித்திவாங்கி
நிமிஷத்தில் பூரம்போல் செந்தூரமாகும்
நாட்டிந்த நாகத்தின் செளநீருக்கு
நலத்தபச்சை சவ்வீரம் விட்டாயானால்
சேட்டிக்கு சேருபோல் குழம்பாய்நிற்கும்
தீபத்தில் செந்தூர மாகாதென்னே. (461)

ஆகாது செயவீர மிட்டாயானால்
ஆருபோல் செயநீராம் செந்துரமாகும்
தாகாது உலகத்தோர் சரக்கைக்கட்டி
தங்கத்தின் ரேக்குதனைக் கவசமூடி
நாகாது வீரத்தின் செயநீர்போய்ச்சு
நலமாக வாட்டினால் செந்தூரமாகா
சாகாது சாஸ்திரங்கள் பொய்யே யென்பார்
சாதகமாய்ச் சொல்லிவிட்டார் சித்தர்தானே. (462)

சித்தர்தான் சாஸ்திரத்தை சொல்லாவிட்டால்
செகமெல்லாஞ் சாஸ்திரத்தை நம்பாரென்று
நத்தான ரிஷிசித்தர் நாமம் போகும்
நம்முடைய மரபுக்குக் கீர்த்தியில்லை
வித்தான குளிகையில்லை காயசித்தியில்லை
மேன்மையாய் வாதமொடு ஞானமில்லை
நித்தான யோகசித்தி யில்லையென்று
நிகண்டுக்குள் ணிசமெல்லாஞ் சொன்னேன்காணே. (463)

நிசஞ்சொன்னேன் காலாங்கி அய்யர்சொல்ல
நேர்மையாய் ஆயிசொல்ல சிவன்தான்சொல்ல
துசஞ்சொன்னேன் சித்தருக்குள் கீர்த்தியாக
நெடிதான சவுங்காரம் வர்மம்சொன்னேன்
திகஞ்சொன்னேன் செயவீரம் பூட்டைச்சொன்னேன்
சொல்லாத உள்க்கருவு பிரக்கருவுஞ்சொன்னேன்
பசஞ்சொன்னேன் பாடியதில் ஒன்றும்பொய்யா
பராபரத்தாய் சொன்னபடி பகர்ந்திட்டேனே. (464)

பகர்ந்திட்டேன் சாஸ்த்திரமும் சூஸ்த்திரமும்பாரு
பரிட்சையாம் நிகண்டுக்குள் கருவைப்பாரு
தகர்ந்திட்ட சாஸ்திரமும் யேழாயிரத்தில்
சவுக்கார வித்தைசொன்னேன் செயவீரஞ்சொன்னேன்
நிகர்ந்திட்ட நிகண்டுக்குள் சொல்லிப்போட்டேன்
நேரப்பா நினவாக நீதான்செய்வாய்
வகிர்ந்திட்ட வாதமது கைக்குள்ளாகும்
வரிசையாஞ் சாரத்தின் வைப்புக்கேளே. (465)

வரிசையாஞ் சிகப்பான சாரந்தன்னை
வைக்கிறதோர் முறைகேளும் மாணாக்காளே
தரிசையாஞ் சாரமது பலந்தான்பத்து
தங்கம்ரெண்டு சூதமஞ்சு சரியாய்க்கூட்டி
தரிசையாங் கலவத்தில் பொடியாய்ப்பண்ணி
காரியமாம் வெடியுப்புச் செயநீராலாட்டி
நரிசையாம் பாவிலிட்டு ஆட்டிப்பார்த்து
நாள்சென்று ரவியிலிட்டுக் காயப்போடே. (466)

ரவியிலிட்டுக் காய்ந்துமே பொடியாய்ப்பண்ணி
நலமான வெடியுப்பு பலம்நாலஞ்சு
சிவியிலிட்ட சீனமும் யிருவத்தஞ்சு
சிறப்பாக பொடிபண்ணி கலவத்திட்டு



பவியிலிட்டு பாலையாஞ் சட்டிமூடி
பண்பாக உருந்தாலே சீலைசெய்து
அவியிலிட்டு அடுப்பேற்றிப் பீங்கான்வைத்து
ஆண்மையாந் தீனீரைவாங்கிடாயே. (467)

தீநீரை முன்தள்ளி பின்னீர்வாங்கி
சிறப்பாக முளகாஞ்ச மருந்தில்விட்டு
பாய்நீரி லரைத்திடுவாய் பத்துநாள்தான்
பரும்பீங்கான் தன்னிலிட்டு வறுத்துப்போடு
காய்நீரில் காசியென்ற மேருக்கேற்றி
கனமான வாலுகையில் பதித்துவைத்து
ஏய்நீரில் யெட்டுநாள் தீயை மூட்டி
யெடுத்துப்பார் அருணனிறத் தேத்தமாமே. (468)

ரத்தமாஞ்சி சிகப்பான சாரச்சேதி
யியம்பிடவே யென்னாலு முடியாதப்பா
மாத்தமா மிதுக்கொப்பு ஒண்ணுங்காணேன்
ஆயியுட வடிவுக்கு அதிகமாகும்
காத்தமாம் வேதையில் கணக்குச்சொன்னால்
கடலுப்புனுகோ வென்பார்கள் கரையோயில்லை
ஆத்தாகு நவலோகம் ஆயிரத்துக்கொன்று
அனுகினால் நவலோகம் ஏமமாமே. (469)

ஏமமோ ஒன்றாகும் காயசித்தியாகும்
யிழுத்துஒரு பொட்டிட்டால் சாக்குங்கட்டும்
தூமமாஞ் சூதத்தை தூரத்திக்கொல்லும்
சூதமென்ற ஆட்டுக்கு வேங்கையாகும்
மாமமாம் பணபேதி பரிசபேதி
பாங்கான க்ஷணபேதி யேமபேதி
நாமமாம் நாதாக்கள் ரிஷிகள்சித்தர்
நாதாந்த சாரத்தைக் காணாரே. (470)

காணாதே சாரத்தின் ஆட்டைத்தானும்
கரையற்ற சித்தான ரூமதேவர்
காணாதே நாலுயுகம் பாத்துதந்தார்
கர்ச்சிவப்பாம் சாரத்தின் ஆட்டைத்தானும்
வாணாதே சித்தரெல்லாம் ஒளித்துவிட்டார்
உரைக்கரிது யென்றுசொல்லி உலகத்தோர்க்கு
பூணாதே ஒருவருடன் புகண்டிடாதே
பொற்பெண்ணை தொடாதே கர்ப்பமுண்ணே. (471)

கர்ப்பமுண்ண சொன்னதுதான் யெதிறலென்றால்
கசடான ஆறுதலம் வெளியாய்க்காண
பர்ப்பமுண்ண நரைதிரைக ளெல்லாம்போச்சு
பாழான சடம்தானும் உந்தியாக
உர்ப்பமுண்ண யோகத்தில் நிலமையாக
உலகமெல்லாஞ் சாத்திரத்தை யுகந்துபார்க்க
சிர்ப்பமென்ன சிகசான கூத்துபார்த்து
செகமெல்லாம் வித்தையென்று ஒழித்துப்போடே. (472)

ஒழித்திட்டு மனதுதன்னை யுறுதியாக்கி
யுகப்பா தீனியின்மே லாசைநீக்கி
அழித்திட்டு பெண்ணென்ற ஆசைநீக்கி
ஆணுவத்தை அம்புலனை அறிவால்கட்டி.
சழித்திட்டு சவகர்ப்பம் விகர்ப்பம்நீக்கி
கசத்திரத்தில் கருவெல்லாம் தரிக்கப்பண்ணி
விழித்திட்டு சைதன்னிய வீட்டுக்குள்ளே
மேன்மையா மவுனத்தின் விரலில்கூட்டே. (473)

கூட்டுவது யெக்காலம் யெப்போவென்று
கூறிநின்ற யலையாதே குறியில்கூடு
நாடுவது குருபதத்தை மனசொன்றிநாடு
நாதாந்த பெருவெளியில் நாட்டம்பாரு
ஊடுவது மூலத்தில் அங்கென்றுஊறு
உத்தமிதாய் பதந்தன்னில் மனதைசேர்ந்து
தேடுவது சித்தருக்குள் கீர்த்திதேடு
சிலம்பொலியின் ஓசைதன்னைக் கிரமாய்க்கேளே. (474)

கிரமான துரிசினுட குருதானென்று
செப்புகிறேன் அண்டரண்டம் துலங்குஆடி.
அரமான வெடியுப்பு செயநீரோடே
ஆண்மையாம் சவுக்கார செயநீர்பாதி
முரமான ரெண்டுமொன்றாய்க் கலக்கினக்கால்
முறைமையாம் தாரைபோல் வெளுப்புமாகும்
விரமான யின்னீரில் வீரம்பூரம்
மேதித்து ஒன்றாகக் கலக்கிக்கொள்ளே. (475)

கலக்கியே துரிசியின்மேல் பூசிப்பூசி
கனமான ரவியிலிடு திலந்தான்பத்து
துலக்கியே சுக்கான்போல் கட்டிபோகும்
சுயம்பான வெள்ளீயம் பலந்தானொன்று



உலக்கியே ஓட்டிலிடு உருகும்போது
ஒருபலந்தான் வெடியுப்புச் சுன்னம்போடு
திலக்கியே கரண்டியினால் தேய்க்கதேய்க்கச்
சிறப்பான வங்கமெல்லாம் சுண்ணம்பாமே. (476)

வங்கமாம் சுண்ணம்பில் வீரம்போட்டு
மாளமட்டும் மறைத்துமே வில்லைபண்ணி
அங்கமாம் அகலிலிட்டு புடத்தைப்போடு
ஆகாகா கடுஞ்சுருக்கு சுண்ணமாகும்
துங்கமாம் துரிசிக்கு உள்கருதான்பூசி
சுருக்கான வங்கத்தைக் கவசங்கட்டி
கங்கமாம் கவுதாரி புடத்தைப்போடு
கடுஞ்சுருக்காய் துரிசியது குருவுமாமே. (477)

துரிசியது செயகுருவே ஆச்சுதென்றால்
சூதத்தை கால்வாரி அடிக்கும்பாரு
வரிசையாம் விராலிக்குழிக் குருவைவிட்டு
வாகாகா பிடித்துமே பிசைந்துஅமுத்திவைத்து
பிரிசையாம் பிழிந்திட்டு அயக்கரண்டிஊத்தி
புண்ணியமாம் சூதத்தை விட்டுக்காய்ச்ச
கரிசையாம் பிட்டெலிபோல் வெண்ணையாகி
கன்விட்டு உருகுமே சூதந்தானே. (478)

உருகின்ற சூதத்தில் முன்னுகத்தை
ஒக்கவே நீட்டிடுவாய் சமனுகத்தான்
அருகின்ற சூதந்துக் கரைவாசிதங்கம்
அந்திடைக்கு தாளகமும் கேந்திகூட்டு
கருகின்ற களங்காரும் நூத்துக்கொண்ணு
காட்டிடவே திசைமாத்தரம் கருதிப்பாரு
வருகின்ற களங்கத்தை மண்டலந்தானுண்ணு
வாலையாம் மன்மதன்போ லாவாய்காணே. (479)

காணவே துரிசியைநீ கருதக்கேளு
கைகண்ட தொழிலிதுதான் கருவாய்ப்பாரு
ஊணவே திராவகத்தால் சவுக்காரசுண்ணம்
உத்தமமா வங்கமென்ன லைதன்னந்தானும்
பூணவே பொற்றலையின் சுண்ணம்வீரம்
பூரமொடு வகைக்குரென்று விருகன்றாக்கி
தோணவே தீநீரில் கலக்கிக்கொண்டு
துரிசியொரு பலந்தனிலே கோச்சுப்போடே. (480)

தோச்சுமே தினம்பத்து காய்ந்தபின்பு
 சுயம்பான வங்கமென்ற சுன்னந்தன்னை
காச்சுமே திராவகத்தால் கவசங்கட்டி
 கவுதாரி புடம்போட கண்டநீராம்
பாச்சுமே பாட்டரென்ற மூலர்தாமும்
 பரிவாக பதினலு முலகுமெச்ச
ஆச்சுமே குளிகைகட்டி அண்டமெல்லாம்
 அடுக்கலாஞ் சோதித்து ஆடினரே. (481)

ஆடியே அண்டரண்டம் பதங்களெல்லாம்
 அடுக்கலாஞ் சோதித்து ஆண்மையாக
ஓடியே திருவனுக்கு அப்பால்சென்றால்
 உத்தமமாங் காலாங்கி உபதேசித்தார்
தேடியே காலாங்கி ஐயனரும்
 செப்பமாய் சொல்லிடவே சிரசில்வைத்து
நீடியே நிகண்டுக்குள் நேர்மையாக
 நிசமாகச் சொல்லிவிட்டேன் துரிசினீரே. (482)

துரிசியுட நீராலே சித்தரெல்லாம்
 சுருபமணி பண்ணியே வாயில்வைத்து
கெரிசையாம் கேசரத்தி லாடினர்கள்
 கெடியான ஆட்டெல்லாம் துரிசியாட்டு
வரிசையா மத்தென்றால் சூதஞ்சாகா
 வைப்பான வாதமெல்லாம் துரிசியாச்சு
பிரிசையாம் பின்னென்றே பார்க்கவேண்டாம்
 பிண்டுவென துரிசினைநீ பேணிப்பாரே. (483)

துரிசிவிட்டால் சூதமொன்றுங் கட்டாதப்பா
 சுக்கிலந்தான் காணிபினல் பிள்ளையாகும்
கரிசிவிட்டால் கடுமூன்று தாரவோடா
 கலக்கமது துரிசினல் வெட்டியோடும்
தரிசிவிட்ட தங்கத்தால் பாபமெல்லாம்
 சங்கலப்ப லவணத்தால் தரிக்குந்தாமம்
பரிசிவிட்ட சவுக்காரம் பயந்தயாமல்
 கொல்லும்பனபேதி சிணபேதி துரிசிதானே. (484)

தானென்ற துரிசிருந லொன்றுகேளு
 தாண்டுகின்ற யிந்துப்பு பலமுமொன்று
வேனென்ற வெடியுப்பு நீராலாட்டி
 மீராமல் புடம்போட்டு யெடுத்துக்கொண்டு



பானென்ற பனியில்வைக்க செயனீராகும்
 பச்சையாம் கற்பூரம் பலந்தானென்று
தேனென்ற பீங்கானில் நிருத்துப்போட்டு
 செயனீர்தான் பலமொன்று அதுக்குள்வாரே. (485)

வாரப்பா வெடியுப்பு நீரோடொக்க
 வளமான சாரனீர் கலந்தூக்கூட்டில்
தாரப்பா தயிர்போல ஆகும்பாரு
 தனித்தபச்சை பூரத்தில் தளரவாரு
போரப்பா ரவியில்வைக்க புரண்டுடைப்பாம்
 புகழான பட்சந்தான் ரவியில்போடு
காரப்பா காஞ்சபின்பு கிளிஞ்சியிலேவைத்து
 கசகாமல் மேல்மூடி சீலைசெய்யே. (486)

சீலைசெய்து மணல்மரவில் புடத்தைப்போடு
 திலமையாம் பூரமது சுண்ணமாகும்
பாலைசெய்து பீங்கானில் பனியில்வைக்க
 பலபலனச் செயனீராம் பண்புகேளு
காலைசெய்த கண்டருக்கு தோச்சுதோச்சு
 கடுாவியில் போட்டிடவும் கட்டிப்போகும்
வாலைசெய்து பத்துநா ளானபின்பு
 வங்கமென்ற சுண்ணந்தான் கவசம்போடே (487)

கவசமிட்ட கவுதாரி புடத்தைப்போட
 கடுஞ்சுருக்கு யித்துரிசி காலனுக்கு
பவசமிட்ட பதஞ்சலியா ஆடும்வித்தை
 பண்புள்ளா ரென்றுசொல்லி அடியேனுக்கு
புவசமிட்ட போதித்தார் புத்திசொன்னர்
 போதலால் பார்த்தபடி நிகண்டிற்சொன்னேன்
துவசமிட்ட யிக்குருவால் சூதங்கட்ட
 சுருக்கிலே கெவுனவழி ஓடுந்தானே (488)

ஓடவே யிக்குருவிக் கிடைந்தான்சாரம்
 ஒக்கயிட்டு அரைத்துமே செயனீர்வாங்கி
சூடவே சூதத்தை சுத்தித்துக்கொண்டு
 சூட்சமாய் அயக்கரண்டிக் குள்ளேவார்த்து
கர்டவே சுருக்கிட்டால் செயனீராலே
 கட்டியே சூதமது வெண்ணையாகும்
தேடவே சூடனுட தீயில்வாட்டி
 சிதராமல் உருக்கிடவே மணியுமாமே (489)

மணியான சூதத்தில் சாரணையேநூறு
மகத்தான கெவுனவழி சுருக்காயோடும்
பிணியான தொன்றுமில்லை காயசித்தியாகும்
பேரானலோகத்தில் பரிச்சிக்கச் சொர்ன்னம்
விளியான குளிகைக்கு வெட்குமய்யா
மேல்கடலும் கீழ்கடலும் நிமைமுன் தாண்டும்
தனியானதாயோடு சதாசிவனும் காண்பாய்
சதானித்தம் பூரணத்தில் தாக்கியாடே. (490

ஆடவே துரிசியொன்று சொல்லக்கேளு
அம்பலத்தில் வியாக்கிரமர் அருளிச்செய்தார்
வீடவே சுருக்கான தீய்நீருக்குள்
வெடியுப்பு சுன்னமொடு பூளிருபோட்டு
மூடவே மொளுபோலெனக் கரைத்துபின்பு
மூர்க்கமாம் தீய்னீரில் துரிசிசேர்த்து
பாடவே பத்துநாள் ரவியில்போடு
பாங்காக காய்ந்தபின்பு பருவங்கேளே. (491)

பருவமாம் வெங்காரம் சீனைகாரம்
பாங்கான தீனீரி லரைத்தரைத்து
தருவமாம் துரிசான ரவியில்போடு
சுபதினந்தான் பத்துநா ளானபின்பு
அருவமாம் முன்காந்த துரிசிமேலே
அப்பியே கவுதாரி புடமாய்போடு
சுருவமாம் துரிசியது சிவந்தகுருவாகும்
செகச்சால மாட்டிவித்த திரோதகைதானே. (492)

திரோதையாம் தில்லைப்பால் படிதானொன்று
சியமான துருசிகுரு வராகனிடை யொன்று
பரோதையாம் பால்தனிலே போட்டுவைக்க
பால்முரிந்து சலம்போல வாகும்பாரு
அரோதையாம் அயச்சட்டிக் குள்ளேவார்த்து
அரன்பீசம் சுத்தித்து சேரவிட்டு
கரோதையாம் அயத்துடுப்பால் கிண்டிகிண்ட
கண்விட்டு ஆடுமே சூதந்தானே. (493

ஆடுகின்ற சூதந்தான் காயசித்தியாகும்
அன்னூத்து லோகத்துக் கொன்றேயோடும்
தேடுகின்ற சூதத்தை செந்தூரம்பண்ணு
சியமான குருபண்ணு களங்குபண்ணு



வாடுகின்ற வாதமொடு வசியமாகும்
மகத்தான கெவுனவழி ஓடலாகும்
நாடுகின்ற பெண்ணாசை தன்னைவிட்டு
நலமான சிலம்பொலியின் நாட்டங்காணே. (494)

நாட்டமாந் துரிசியொன்று சொல்லக்கேளு
நாதாந்த கனமது பலந்தான்பத்து
தாட்டமாந் தங்கத்தின் ரேக்குதானும்
தளராதே ரெண்டரையே பலமுமாகும்
தூட்டமாஞ் சூதமது பலந்தான் பத்து
சுத்தித்து கல்வத்தில் போட்டுக்கொண்டு
வேட்டமாம் வெடியுப்பு னீரினாலே
மீளாதே மூன்றையுந்தா னரைத்திடாயே. (495)

அரைத்திட்டு அஞ்சுநா ளானபின்பு
ஆர்க்கமாய் ரவிதனிலே காயப்போட்டு
கரைத்திட்ட தினீரில்கெந்தி யோடுலிங்கம்
கனமான தாளகமும் சவுக்காரச்சுண்ணம்
மரைத்திட்ட மனோசிலையும் காரீயச்சுண்ணம்
வகைவகைக்கு அரைப்பலந்தான் தீனீலரைத்து
யரைத்துஒரு சேரைதான் தீனீரில்போட்டு
பாங்காக தெளிவிருத்து பதனம்பண்ணே. (496)

பண்ணியே முன்காந்த துரிசிக்கிவிட்டு
பக்குவமா யரைத்திட்டு அஞ்சுநாள்தான்
கண்ணியே காயவைத்து பொடியாய்ப்பண்ணி
கனமான மேருக்கே பதித்துவைத்து
வண்ணியே வாலுகையில் யேத்தினீயும்
மாவாமல் தீமூட்டு யெட்டுநாள்தான்
புண்ணியமே செய்தவர்க்கு செந்தூரமாகும்
பொர்ச்சிமிழின் லடைத்துவைத்து புகலக்கேளே. (497)

கேளப்பா நவலோகம் ஆயிரத்துக் கோடும்
கெடியான மாத்தென்ன பனிரெண்டப்பா
நாளப்பா போகாமல் பணிவிடைதான் உண்ணு
நமனுடகா பரமிது நூறுமுண்டேன்
தேளப்பா கொட்டியதோர் வேகம்போலே
சணத்திலே சட்டைக்கு பாலையாகும்
மாளப்பா யெரித்தசிவன் தேவிக்கிசொன்னார்
மகத்தான போகருக்கு விளம்பினாளே. (498)

விளம்பினே ராயுறு வேதந்தானும்
வேணமட்டும் சாக்குப்பேர் தொகுத்துச்சொன்னார்
களம்பெறவே வுபாசங்கள் கற்கம்யாவும்
நாட்டினார் மாணுக்கள் பிழைக்கவென்று
தளம்பெறவே பெருநூலுந் கருக்கஞ்சொன்னார்
சாற்றினார் மலைக்கருக்கள் சித்தற்காக
களம்பெறவே பரிபாஷை யாவுஞ்சொன்னார் 90
கழறினார் போகருட மாற்கந்தானே. (499

மாற்கமா மிந்தநூலு மதிப்புடன் வாராய்ந்தேதான்
தீற்கமா மாயிரத்து யெழுநூறு பாடலாக
ஆற்கமா முனிவர்போக ரறைந்திட்டார் மாந்தருக்கு
எற்கமாங் குருநூலாகு மொழில்வேத முற்றதாமே. (500)

## போகமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

# கருக்கடை நிகண்டு-நூ

## முற்றிற்று.

8033